THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
சுடர் ஒளி
30.00
பக்கங்கள் -28
வாரமலர்
ஒகஸ்ட் 01- ஒகஸ்ட் 07, 2012
August 01 - August 07, 2012

தேன் பூசிய தோட்டாக்களால்
திணிக்கப்படும் பேரழிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகும் மரபுரிமைகள்

— ஜெரா

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முற்பட்ட அனைத்துப் பொருட்களும் மரபுரிமைச்சின்னங்களாக யுனெஸ்கோவினால் அங்கீகாரப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வகைப் பொருட்களை தனிநபர்கள் வைத்திருப்பதோ அதனை விற்பனை செய்வதோ அரச அனுமதியின்றி இடம் பெறக்கூடாதென அது மேலும் தெரிவிக்கின்றன. இந்தச் சட்டத்தை உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கேற்ப தமது நாட்டின், நாட்டு மக்களின் மரபுரீதியான கலாசார சின்னங்களைப் பாதுகாக்க முயற்சித்து வருகின்றன. ஆனால் அவர்களின் முயற்சி பொது மக்கள் மத்தியில் செல்லுபடியாகும் வீதம் மிகமிகக் குறைவானதாகவே இருந்து வருகின்றது.

ஒரு இனம் தன்னகத்தே பல்வேறு மரபுரிமைச் சின்னங்களைக் கொண்டிருக்கும். கட்டடங்கள், அன்றாடப் பாவனைப் பொருள்கள், உடைகள், உணவுகள், என பலவகையான பாவனைப் பொருட்களை இதனுள் அடக்கிப்பார்க்க முடியும். இந்த ஒவ்வொரு மரபுரிமைச் சின்னமும் அது பாவனையிலிருக்கும் இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும், காலாசார விழுமியத் தொடர்ச்சியையும், அந்த இனம் கண்டு வந்த மாற்றங்களையும், பண்பாட்டுத் தழுவல்களையும், ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப வளர்ச்சியையும் புலப்படுத்திக் கொண்டிருப்பதாக அமைந்துவிடுகின்றது.

உதாரணமாக யாழ்ப்பாணத்தின் புறநகர்ப்பகுதியான கோட்டைக்கு அண்மையில் இருக்கும் பல வீடுகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்டவை. அந்த வீடுகளின் கட்டட அமைப்பு முறை, அதில் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம், வீடு கொண்டிருக்கும் பண்பாடு என அனைத்தும் யாழ்ப்பாண வீடுகளில் இருந்து வித்தியாசமானவை. அதாவது அந்நிய ஆதிக்கத்துக்குட்பட்ட காலத்தில் இருந்த கலாசார நடைமுறைகளை அனுசரித்துக் கட்டப்பட்டதனாலேயே இவ்வாறானதொரு புதிய கட்டடப் பொறிமுறையைக் கொண்டு அவை காணப்படுகின்றது. ஆகவே இந்த வீடுகள் வலிமையான வரலாற்றுச் செய்திகளையும், பண்பாட்டுப் பெயர்ச்சியையும் மிகத் தெளிவாகக் காட்டுவனவாக இருக்கின்றன. ஆனால் இவற்றைப் பாதுகாக்கும் முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட்டனவா?

சங்கிலியன் தோரணவாயில் அமைந்துள்ள பகுதி தமிழர்களின் மரபுரிமைச் சொத்தாகும். இங்கு தான் வடக்குத் தமிழர்களின் வரலாற்றில் பெயரெடுத்த மிக முக்கிய மன்னனான சங்கிலியனின் அரண்மனையிருந்ததாகவும், நிர்வாக மையம் இருந்ததாகவும் சொல்லப் படுகின்றது. இது உறுதிப்படுத்தப்படாத வரலாற்றுத் தகவலாக இருக்கின்ற போதிலும் தமிழர்களின் வரலாற்றோடும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அவர்கள் ஏற்படுத்தியிருந்த நிர்வாக நடைமுறையோடும் தொடர்புடைய இடமாக இதனைக் கருதலாம். இதனைப் பாதுகாத்து ஆராய்ச்சிக்குள்படுத்துவதன் மூலம் தமிழர்களின் வரலாற்று இருப்புத் தொடர்பான பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளமுடியும். ஆனால் இதனைப் பாதுகாத்து ஆராய்ச்சிபூர்வமாக தமிழரின் வரலாற்றைக் கண்டறியும் முயற்சி மிகவும் மந்தமான கதியிலேயே இடம்பெறுகின்றது. அதுபோல் சங்கிலியன் தோரண வாயிலுக்கு முன்னால் இருக்கின்ற அதற்கு சமனான காலத்துக்குரிய வீடும் அந்தக் காலத்துக்குரிய யாழ்ப்பாண வீடுகளுக்கு உதாரணமாய் இன்று நிலைத்திருப்பதாக அமைந்துள்ளது. இந்த வீட்டைப் பார்வையிடும் ஒருவர் குறித்த காலப்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் எவ்விதமான பண்பாட்டைக் கொண்டிருந்தனர் என் பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் இதனையும் பாதுகாக்கும் முயற்சி பெரியளவில்



மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் வெண்கலப் பாவனைப் பொருள் கள் மிக நீண்ட காலப் பாவனையிலிருந்திருக்கின்றன. அதனை உற்பத்தி செய்து கொள்வதற்கான தொழில்நுட்பம் அது இங்கு பாவ னைக்கு வந்த காலங்களில் இருக்கவில்லையாயினும், தமிழகம் போன்ற பிற தேசங்களிலிருந்து வணிக நோக்கோடு கொண்டு வரப்பட்டவையாக அவை காணப்படுகின்றன. இங்கு கொண்டு வரப் பட்ட பின்னர் மீளுருவாக்கம் நடைபெற்ற வெண்கலப் பொருள்கள் இப் போதும் இங்கு வாழும் தமிழர்களின் அன்றாடப் பாவனைப் பொருள் களாக இருக்கின்றன. இவற்றின் வடிவமைப்பு அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் கொண்டிருந்த தொழில்நுட்ப விருத்தியைக் காட்டுவ தாகவுள்ளது. குத்துவிளக்கிலோ தாம்காளத்திலேயோ கீறப்பட்டுள்ள வரைவுகள், கடவுள் உருவங்கள் போன்றன இங்கு நிலவிய சமய மரபு களையும், கலாசார நடைமுறைகளையும் காட்டுவனவாகவுள்ளது. மிக முக்கியமாக இந்தப் பொருள்களில் பொறிக்கப்பட்டிருக்கும் பொறிப் புக்கள் பல்வேறு வரலாற்றுத் தகவல்களைத் தருவனவாகவுள்ளது. குறிப்பபாகத் தமிழ் எழுத்து மரபிலும் , மொழிமரபிலும் ஏற்பட்டு வந்த மாற்றங்களை இந்தப் பொருள்களில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களை அவதானிக்கும் ஒருவர் நேரடியாகக் கண்டு கொள்ளலாம். அத்தோடு குறித்த காலப்பகுதியில் வட இலங் கைத் தமிழர்கள் பல்வேறு தேசங்களோடும் கொண்டிருந்த வணிக, பண்பாட்டு உறவை ஆணித்தரப்படுத்துவதாகவும் இந்த வெண் கலப் பொருள்கள் விளங்குகின்றன.

ஆனால் இது போன்று எந்தவிதமான அறிதலும் இன்றி நம் மத்தியில் புழக்கத்தில் இருக்கும் வெண்கலப் பொருள்கள் அதிக விலைக்கு விற்பனையாகின்றது. இவற்றை தெற்கிலிருந்து வரும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து கொள்வதனூடாக எமது பண்பாட்டையும், வரலாற்றையும் விற்பனை செய்து கொள்கின் றோம் எனும் விழிப்புணர்வு யார் மத்தியிலும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை.

வடக்குத் தமிழர்களுக்கென பல நூற்றாண்டு காலப் பழமை யுடைய தனியான உணவுப்பழக்கவழக்கங்களிலிருந்தன. பனம் பொருள்களால் தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் யாழ்ப் பாணத்துக்கும், வடக்கிற்கும் தனித்துவமான காலாசார அடையாளத்தைத் தருபவை. அத்தோடு எம்மவரின் நீண்ட உழைப்பை யும், உறுதியையும் கட்டுக்குலையாமல் பாதுகாத்து வந்த உணவுப் பொருள்களாகவும் இவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை இன்று சாப்பிடுவதோ அல்லது கடைகளில் கூடு காண்பதோ அரிது. எல்லா இடங்களையும் கோதுமைப் பண்டங்கள் நிரப்பிக்கொண் டன. மிச்சமாயிருந்த இடத்தையும் இப்போது துரித உணவுகள் ஆக்கிரமித்துக் கொண்டன.

கற்களில், மட்பாண்ட ஓடுகளில், உலோகத்தில் எழுதிய காலத் திற்கு அடுத்து ஓலைகளில் எழுதும் பண்பாடு யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளது. ஓலையில் எழுதும் காலத்தில் கல்வியறிவும், எழுத்துவிருத்தியும், மொழியறிவும் இங்கு பரவலாக ஏற்பட்டிருந்ததைக் கிடைக்கக் கூடிய ஓலைச்சுவடிகளை ஆராய் வதன் ஊடாகக் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்த ஓலைச்சுவடிகளில் பல்வேறு வரலாற்றுத் தகவல்கள், சமய நடை முறைகள், சாத்திரங்கள், தோத்திரங்கள், நில உறுதிகள் என்பன எழுதப்பட்ட சந்ததி கடத்தப்பட்டிருக்கின்றது. காகிதத்தின் வருகை ஓலைச்சுவடிகளை இல்லாமலாக்கிய போதிலும் அவை இன்றும் பெரும்பாலான இடங்களில் புழக்கத்திலிருக்கின்றது. இப்போது அதற்கும் ஏனைய மரபுசார்ந்த சின்னங்களுக்கு ஏற்பட்ட நிலை தான் ஏற்பட்டிருக்கின்றது. ஓலைச்சுவடிகள் வீட்டில் வைத்துப் பாதுகாப்பதற்கு இடையூறாக இருப்பதால் குப்பைக் கிடங்குகளை நிறைக்கின்றன. இதுவும் எமது மரபுரிமைகளை வைத்திருக்கின்ற பொக்கிசம் என்ற விழிப்புணர்வு இன்னமும் நம் மத்தியில் ஏற் படாததாலேயே இத்தகைய அழிவுகளை நமக்கு நாமே ஏற் படுத்திக் கொள்கின்றோம்.

இவ்வாறு நமது மரபுரிமைச் சின்னங்கள் அபிவிருத்தியின் பெயராலும், வணிக நோக்கத்தாலும், விழிப்புணர்வின்மையாலும் அழிந்துகொண்டிருக்கின்றன. இப்போதைக்கு இந்த அழிவிலி ருந்து எமது பண்பாடு சார்ந்த சின்னங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நம்மிடம் எந்தத் திட்டங்களும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் பூசிய தோட்டாக்களால் திணிக்கப்படும் பேரழிவுகள்

"உண்மையான துப்பாக்கிக் குண்டுகளின் முன்பு அஞ்சாது முன்செல்லும் எமது தோழர்களில் சிலர் தேன் பூசிய துப்பாக்கிக் குண்டுகளின் முன் வீழ்ந்து விடுகிறார்கள். மரணத்தைக் கண்டும் அஞ்சாத அவர்களின் மன உறுதி இனிப்புப் பூசிய இந்த ரவைகளின் முன் மண்டியிட்டு விடுகிறது." இவ்வார்த்தைகள் எதிரியின் கர்ணகடூரமான தாக்குதல்களுக்கு அஞ்சி விடாது வீரத்துடன் முன்னேறும் இலட்சியவாதிகள், எதிரிகளின் மாய்மால வார்த்தை ஜாலங்களில் மயங்கி நிலைதடுமாறியது பற்றி சீனத் தலைவர் மாஓசே துங் அவர்கள் தெரிவித்தவையாகும்.

இவ்வார்த்தைகளின் அடிப்படை உண்மையையும் இவற்றில் புதைந்து கிடக்கும் ஆழத்தையும் நாமும் பலமுறை உணர்ந்தது உண்டு. தாம் கொண்ட கொள்கைக்காகவும் எடுத்துக் கொண்ட இலட்சியங்களுக்காகவும் தமது வாழ்வையே முழுமையாக அர்ப்பணித்து ஏராளமான தியாகங்களைச் செய்து, பெருமதிப்புப் பெறும் வீரர்கள் சில சமயங்களில் எதிரிகளின் ஏமாற்ற சித்து விளையாட்டுக்களில் மயங்கி துரோகிகளாக மாறி வருவதுண்டு. அதன் காரணமாகப் போராட்டங்களில் பெரும் திருப்பங்களும் சில சமயங்களில் படுதோல்விகளும் கூட இடம்பெற்று விடுவதுண்டு. எப்போதும் ஒடுக்கு முறையாளர்கள் அழகிய வார்த்தைகள் மூலமும் நியாயமானவை போல் தோற்றமளிக்கும் முன்வைப்புகள் மூலமும் தமது நோக்கங்களை நிறைவேற்ற அடித்தளமிட்டு விடுகின்றனர்.

இவ்வகையில் இலங்கையில் ஆட்சிசெய்த எந்த ஒரு அரசுத் தலைவரையும் விட திறமைசாலியாகவும் சாதுரியமானவராகவும் விளங்குபவர் இன்றைய இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள். அவரின் வார்த்தைகளை மேலோட்டமாக நோக்கும் போது அவர் இலங்கை வாழ் சகல இன மக்களையும் சமமாக மதித்து அன்புடனும் கருணையுடனும் அரவணைத்துச் செல்லும் நோக்கம் கொண்டவர் என்பது போலவே தோன்றும். ஆனால் அவை நடைமுறையிலிடப்படும் போது அவை இன ஒடுக்குமுறைக்காகப் போடப்பட்ட ஒரு பலமான அத்திவாரம் எனத் தெரியவரும்.

வடக்கின் பல இராணுவக் காவலரண்களில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் 'ஒரேதேசம் ஒரே மக்கள்' என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோஷமானது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. அடிப்படையில் 'வண் கன்றி வண் நேசன்' என்பதன் சரியான மொழி பெயர்ப்பு ஒரே நாடு ஒரே தேசிய இனம் என்பதாகும். ஒரே தேசிய இனம் என்பது வேண்டுமென்றே தமிழில் ஒரே மக்கள் எனத் திரிபுபடுத்தப் படுகிறது. ஆனால் ஒரே நாடு, ஒரே தேசிய இனம் என்ற கோஷத்தின் பின்னால் ஏனைய இனங்கள் மீதான இன அழிப்பு நோக்கம் புதைந்து கிடப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நாட்டில் சிறுபான்மை, பெரும்பான்மை என எவரும் இல்லை. ஒரே நாடு, எல்லோரும் ஒரே மக்கள். இப்போது எவரும் எங்கும் போய்வர முடியும். இதுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதலாவது போர் வெற்றி விழாவின் போது ஆற்றிய உரையின் சாரம்சமாகும். இதில் உரிமைகள் மறுக்கப்பட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரே மக்கள் என்ற பார்வையில் பார்க்கப்படுவதன் மூலம் இன்றைய ஒடுக்குமுறை நிரந்தரமாகத் தொடரும் என்பது சொல்லாமலே சொல்லப்பட்டு விட்டது. அது மட்டுமன்றி சகல தமிழ், முஸ்லிம் மக்களும் ஒரே தேசிய இனமாக அதாவது சிங்கள தேசிய இனமாக மாற்றப் படுவார்கள் என்றும் பிரகடனம் செய்யப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஒரே நாடு, ஒரே தேசிய இனம் என்ற கோஷத்துக்குள் புதைந்து கிடக்கும் அடிப்படை நச்சு நோக்கங்கள் இவையாகும். ஒரே நாடு ஒரே மக்கள் என்ற தேன் பூசப்பட்ட இன அழிப்புத் தோட்டாக்கள் சிறுபான்மையினர் மேல் பாய்ச்சப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்சமயம் இந்தத் தேன் பூசிய தோட்டாப் படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தளபதியாக விளங்குபவர் முன்னாள் தீவிர இடதுசாரியும் தற்போதைய சமூக நல்லிணக்க அமைச்சருமாகத் திகழும் திரு.வாசுதேவ நாணயக்கார அவர்கள்.

பகீரதன் என்ற மன்னன் நீண்ட காலம் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து சிவபெருமானின் சடாமுடியில் இருந்த கங்கை நதியைப் பூமிக்குக் கொண்டு வந்தான் என்று ஒரு கதை உண்டு. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நாலு காலில் நின்று தவம் செய்தாலும் கூட அடக்குபவர்களுக்கும் அடக்கப்படுபவர்களுக்குமிடையே அடக்குமுறை நிலவும் வரை நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பது ஏன் ரொட்சிச தத்துவங்களைக் கரைத்துக் குடித்த இவருக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை என்பது தான் பதில் தேட முடியாத கேள்வியாகும்.

இனப்பிரச்சினைக்கு அடிப்படையான காரணம் மொழி என்பது இவரின் கண்டுபிடிப்பாகும். அதனால் சிங்களவர் தமிழையும், தமிழர் சிங்களத்தையும் கற்றுத் தெரிந்து கொண்டால் இன நல்லிணக்கம் உருவாகி விடும் என்பது இவரின் தத்துவம்.

இனஒடுக்குமுறை என்பது மொழி, நிலம், பொருளாதாரம், கலாசாரம் என்ற பரந்த தளத்தைக் கொண்டது. மொழியுரிமைமறுப்பு என்பது ஒடுக்குமுறையின் பல வடிவங்களில் ஒன்று மட்டுமே. இந்த யதார்த்தம் அவர் அறியாததல்ல. ஆனால் சில தேவைகள் கருதி அவர் திரிபுபடுத்துகிறார் என்றே கருத வேண்டியுள்ளது.

தமிழர்கள் சிங்களத்தையும், சிங்களவர்கள் தமிழையும் கற்க வேண்டும் என்ற கருத்து நிச்சயமாக ஒரு தேன் பூசிய தோட்டா என்பதை நாம் நடைமுறைகளிலிருந்து புரிந்து கொள்ள முடியும். வடக்கு, கிழக்கில் தமிழ் தெரிந்த சிங்கள அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் நிர்வாகத்தைச் சிங்களமயப்படுத்தும் தீய உள்நோக்கம் உள்ளடக்கப்படுகிறது. திருமலை, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் சிங்கள அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டதிலிருந்து நாம் இதைப் புரிந்து கொள்ள முடியும். இது எதிர் காலத்தில் வடக்கு, கிழக்கில் உதவி அரச அதிபர்கள், கிராமசேவையாளர் என்ற மட்டத்திற்கு விரிவடையக் கூட வாய்ப்பு உண்டு. வாசுதேவாவின் சமூக ஒருமைப்பாடு இப்படிப்பட்டது.

இதேவேளையில், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் விருது வழங்கும் விழா அலரி மாளிகையில் இடம்பெற்ற போது ஜனாதிபதி நிகழ்த்திய உரையில் தூர நோக்கில் தமிழ், முஸ்லிம் இனங்களின் தனித்துவங்களைச் சிதைத்து பெரும்பான்மை இனத்துக்குள் சிறுபான்மையினரைக் கரைத்து விடும் திட்டம் பொதிந்திருப்பதைக் காண முடியும்.

● சந்திரசேகர ஆசாத்



தற்சமயம் இந்தத் தேன் பூசிய தோட்டாப் படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தளபதியாக விளங்குபவர் முன்னாள் தீவிர இடதுசாரியும் தற்சமய சமூக நல்லிணக்க அமைச்சருமாகத் திகழ்பவர் திரு.வாசுதேவ நாணயக்கார அவர்கள்.

அவரது உரையில் இன நல்லிணக்கம் என்பது சிறுவயதிலிருந்து உருவாக்கப்பட வேண்டும் எனவும், எமது நாட்டிலோ சிறுவயதிலேயே தமிழ் பாடசாலை, முஸ்லிம் பாடசாலை, சிங்களப் பாடசாலை என இனங்களுக்கான தனிப்பாடசாலைகள் மூலம் பிரிவினைச் சிந்தனை வளர்க்கப்படுகிறது எனவும், இது அகற்றப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதை மேலோட்டமாகப் பார்க்கும் போது இனங்களுக்கிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கும் ஒரு அற்புதமான திட்டம் போன்றே தோன்றும். ஆனால் இது அடிப்படையில் இனங்களின் தனித்துவங்களையே அழிக்கும் தீய நோக்கம் கொண்டதாகும். ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான மொழி, பொருளாதாரம், கலாசாரம், நிலப்பகுதி என்பன உண்டு. உணவு, உடை, மதம் என்பன கூட ஒவ்வொரு இனங்களுக்கும் தனித்துவத்துடன் பேணப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு இனமும் தமது தனித்தன்மைகளைப் பேண தமக்கான உரிமைகளுடன் வாழும்போது இயல்பாகவே ஏனைய இனங்களுடன் நியாயமான புரிந்துணர்வின் அடிப்படையில் ஐக்கியம் உருவாகின்றது. இது ஒருவரின் உரிமைகளில் ஒருவர் கைவைக்காத வரை உறுதியானதும் நிரந்தரமானதுமாக விளங்குகிறது. அதுவே உண்மையான சமூக ஒருமைப்பாடாகும். ஆனால் சிறு வயதிலிருந்தே ஒவ்வொரு இனங்களும் தங்கள் இனத் தனித்துவங்களிலிருந்து விடுபடும் போது அவை உதிரித் தன்மை பெற்று தமது தனித்துவங்களை இழக்கின்றன. ஆனால் பெரும்பான்மை இனம் அவர்களின் ஆட்தொகை, அரசியல் அதிகாரம் என்பன காரணமாக தமது தனித்துவத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும். அவ்வேளையில் தமது தனித்துவங்களை இழக்கும் சிறுபான்மைச் சமூகங்கள் பெரும் பான்மையினரின் கலாசாரம், பொருளாதாரம், மொழி போன்றவற்றால் ஆட்கொள்ளப்படுகின்றன. இதன் பலன் சிறுபான்மைச் சமூகங்கள் மெல்ல மெல்ல பெரும்பான்மைக்குள் கரைந்து போகும் நிலை உருவாகும். இப்படியும் நடக்க முடியுமோ? இது ஒரு அர்த்தமற்ற பயம் என்பன போன்ற கருத்துகள் முன்வைக்கப் படலாம். நிச்சயமாக தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இவ்விஷயத்தில் விழிப்பாக இல்லாவிட்டால் இந்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாது என்பதற்குப் பல முன்னுதாரணங்கள் உண்டு.

குறிப்பாக நீர்கொழும்பில் பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் இன்று சிங்களவர்களாக மாறி விட்டனர். இவர்களின் பெயர்கள் மட்டும் தமிழ் மொழியில் இருந்தாலும் இவர்களின் வீட்டு மொழி கூடச் சிங்களம்தான். தமிழை மிகவும் சிரமப்பட்டு சிங்களவர் பேசுவது போன்றே பேசுவார்கள். அதேபோன்று புத்தளத்தில் ஒரு பகுதியில் தமிழர்கள் தமிழ்பேசுவார்கள். ஆனால் எழுத, வாசிக்கத் தெரியாது. அம்பாறை மகாஓயாவில் உள்ள ஒரு நீர்ப்பாசனத் திணைக்கள ஒப்பந்தக்காரரின் பெயர் கந்தையா ரன்பண்டா. ஆனால், அவருக்கு ஒரு சொல்லுக் கூட தமிழ் தெரியாது.

அதாவது ஒரு இனம் தனது தனித்துவத்திலிருந்து விடுபடும் போது பெரும்பான்மை இனத்துக்குள் கரைந்து போவது தவிர்க்க முடியாததாகும் என்பதற்கு இவை கண்கண்ட உதாரணங்களாகும். இதை மஹிந்த ராஜபக்ஷவும், வாசுதேவ நாணயக்காராவும் சமூக நல்லிணக்கம் என்ற பேரில் நிறைவேற்றத் திட்டமிட்டுத் தூரநோக்குடன் வேலை செய்கின்றனர் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரே தேசம், ஒரே மக்கள், சமூக நல்லிணக்கத்திற்கு மும்மொழித் தேர்ச்சி போன்ற சுலோகங்கள் அனைத்தும் இன அழிப்புக்காக ஏவிவிடப்படும் தேன் பூசிய துப்பாக்கித் தோட்டாக்கள் என்பதே உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளுக்காக வருந்துவோம்

நன்கு செழித்து வளர்ந்து காய்த்துக் குலுங்கும் தென்னைகளில் ஒன்று எங்கள் காணியின் வேலியோரத்தில் அடுத்தவரின் நிலத்தை நோக்கி வளர்ந்து சாய்வாக நின்றது. அவற்றிலிருந்து விழும் தேங்காய்கள், ஓலைகள், மட்டைகள் என்பவற்றை அந்த நிலத்தின் சொந்தக்காரரான எங்கள் உறவினர் எங்களிடம் சொல்லிக் கொண்டே தமக்கென எடுத்துக் கொள்வர். அவற்றிலே எமக்கு என்றுமே ஆட்சேபனை இருந்ததில்லை.

எங்கள் உறவினர் பின்னர் ஒருநாள் அவர்களுடைய அந்த நிலத்தை வேறொருவருக்கு விற்பனை செய்துவிட்டார். நிலத்தை காங்கியவர் எங்களுடன் மனஒற்றுமை இல்லை. எங்கள் தென்னைகள் வளர்ந்திருக்கும் அந்த வேலியோரமாக அவர் தமக்கென ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டார். வீட்டின் கூரையை ஓடுகளால் வேய்ந்திருந்தார். எங்கள் வேலியோரத்துத் தென்னையிலிருந்து விழும் தேங்காய்களும் ஓலைகளும் இப்பொழுது அவர் புதிதாகக் கட்டிய வீட்டின் கூரை ஓடுகளில் விழுந்தன. அவற்றால் கூரை ஓடுகள் சேதமாகின. இதனைக் கண்ட பின்னரே புதிய வீட்டுக்காரர் எங்கள் தென்னைகளால் தனது வீட்டிற்கு ஏற்படுகின்ற சேதங்களைச் சொல்லிக் கொண்டு எம்மை வந்து சந்தித்தார். அறியாமையால் அலட்சியப்படுத்தி திட்டமிடாமல் எம்முடன் கலந்து கொள்ளாமல் தென்னைமரத்தின் கீழே விடு கட்டிய மடமையை நாங்கள் அவருக்கு எடுத்துக் கூறிய போது எம்முடன் அவர் சண்டைக்கு வந்துவிட்டார். தகாத வார்த்தைகளால் எம்மை ஏசியும் திட்டியும் ஆத்திரமுற்று அடிக்கவும் வந்தார்.

இதனை அறிந்த எங்கள் பிரதேச கிராம சேவையாளர் எம்மைச் சந்தித்த போது முன்னரே வளர்ந்து பயன்தரும் மரத்தின் கீழே முன்யோசனையின்றி வீட்டைக் கட்டியவர் கேட்கின்ற வகையில் மரத்தைத் தறித்தல் நியாயமானதல்ல. நீங்கள் விரும்பினால் மரத்தை இழப்பதினால் ஏற்படக் கூடிய நட்டத்திற்கு உரிய தொகையைப் பெற்றுக் கொண்டு மரத்தைத் தறிக்க ஒப்புக் கொள்ளலாம் என்றார்.

தனது தவறை ஏற்றுக் கொண்டு தன்னைத் திருத்திக் கொள்ள அவர் முயலாதவரை

அவரது சண்டித்தனத்தோடு கூடிய வேண்டுகோளை எம்மால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

இவ்வாறுதான் முன்யோசனை இல்லாமலும் திட்டமிடலின்றியும் செய்யப்படும். காரியங்கள் யாவும் சிக்கலடைவதுடன் பலரையும் சிக்கலுக்குள்ளாக்கி விடுவது உண்டு.

திருவண்ணாமலையில் உள்ள பக்தர்களில் சிலர் ஓர் அழகான தோட்டத்தை உருவாக்கினார்கள். சில பசுக்கள் தோட்டத்திலுள்ள வளர்ந்திருந்த செடிகளை எல்லாம் தின்று சேதப்படுத்தி விட்டன. அவர்களோ மிகவும் வருத்தமுற்று ஸ்ரீரமணர் என்ற ஞானியிடம் சென்று முறையிட்டார்கள்.

அதற்கு ஸ்ரீரமணர் பசுக்கள் உங்களின் செடிகளை அழித்துவிட்டன என்று சொல்லுகிறீர்கள். இந்த இடத்தில் மேயக் கூடாது என்று பசுக்களுக்குத் தெரியுமா? பசுமையான இடங்களில் மேய்வது அவற்றின் இயல்புதானே. தோட்டத்துக்குள் மாடுகள் வந்து மேயக்கூடாது என்று உங்களுக்குத் தோன்றியிருந்தால் நீங்களல்லவா வேலியிட்டு அவற்றைக் காப்பாற்றி இருக்க வேண்டும். செய்ய வேண்டியதைத் திட்டமிட்டு முன்னதாகவே செய்யாமல் மாடுகள் மீது குறைசொல் வதும் அதன் சொந்தக்காரர்கள் மீதில் கோபிப்பதும் தவறல்லவா? என்றார்.

அதனைக் கேட்ட பக்தர்கள் தமது தவறை உணர்ந்து கொண்டனர். இவ்வாறுதான் பலரும் முன்னதாகவே திட்டமிடத் தவறுவதும் தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதும் மாத்திரமன்றி தாம் செய்கிற தவறை ஒப்புக்கொண்டு திருந்துவதற்கான வாயில்களைத் திறக்காமலேயே தொடர்ந்தும் துன்பங்களுக்குள் வீழ்ந்து வருந்துகின்றனர். தவறை ஒப்புக் கொள்ளுதலையும் திருந்தி நடக்க முயற்சித்தலையும் தகுதிக் குறைவாக எண்ணுவீர்களாயின் நீங்கள் என்றுமே திருந்தப் போவதில்லை. உங்கள் தவறுகளை நீங்கள் உணராதவரை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் முன்னேறுதல் முயற்கொம்பே!

| நெடுந்தீவு மகேஷ்

கலவரத்தின் கழுத்தை நசுக்கும்

கவிஞர் ஜவ்பர்கான்

சுயநல அரசியலுக்குள் குழுக்களாகி நமது மக்கள் மனிதத்தை மறந்து விடுகின்றார்கள். அவலங்களையும் நட்டங்களையும் உறவுகளையும் அறுத்துக் கொண்டே ஆர்ப்பாட்டங்களிலும், கலவரங்களிலும் ஈடுபடுகின்றனர். தாயகவர்களை பகைவர்களாய் எண்ணும் சிந்தனைக்குள் இரக்கமின்றிக் கொடுமைகளைச் செய்வோரைக் காணும் போது அன்புள்ளயோர் நெஞ்சம் பொறுக்கின்றது.

அனைவரும் இன்றும் என்றுமே ஐக்கியப்பட்டு வாழ விரும்பிய மக்கள் அரசியலால் பிளவுண்டு அரித்தமின்றி ஆறுதலிழந்து அலைகின்றனர். மூன்றாவது வேண்டியதன் அவசியத்தினை மறந்து விட்டோமென்பதையும், ஒன்றாய் இருந்த காலத்தின் மகிழ்ச்சியையும் கூறியவாறு முன் கருவின்ற சிறுக்கு மாகானக் கவிஞரின் வரிகளைப் பாருங்கள்.

[illegible]

தமிழர்களின் வீடுகளில் முஸ்லிம்கள் எவ்வாறு உறவு சொல்லி வாழ்ந்தார்கள். முஸ்லிம்களின் உறவுகளுள் தமிழர்கள் எவ்வாறு வளர்ந்தார்கள். பசிக்கும் போது உணவு தந்து பாசத்தோடு உட்புகுத்து வயல்களில் ஒன்றி உழைத்தார்கள் தமது தேவைக்காய் வீட்டில் உப்பு, மிளகாய், நெருப்புக்குச்சி என உரிமையோடு பெற்றுக்கொண்டு வாழ்ந்தார்கள். இவர்களை இன்று பாரம் கீரியுமாய் வாழ வழிவகுத்தவர்கள் யார்.

தொழில் ரீதியான ஐக்கியமும் உரிமையும் [illegible] இன்னு [illegible] காலத்தை எண்ணுகின்ற போது அன்றைய நாட்களின் நினைவுகள் இன்ப உணர்வைத் தருகின்றன. மனங்கள் இணைய நறுமலர்களாய் மனம் வீசி மகிழ்ந்திருந்த மக்களுக்கிடையே கலவரத்தை உண்டு பண்ணும் மனித மனங்கள் கடந்த சிந்தனைகளுக்கு இடம் கொடாதீர்கள். கலவரமே நீ எமது மக்களின் ஒற்றுமையைத் தீயக்க வர வேண்டாம் என்கிறார் கவிஞர்.

[illegible]

போலது எவ்வாறு என்று கேட்கும் கவிஞரின் ஆதங்கம் புரிகிறது.

[illegible]

எங்கள் மக்களுக்கிடையே ஐக்கியம் வளர வேண்டும். தமிழ் எங்களை இணைக்கும் மொழி. அதனைப் பாடிப் பொடிபட்டாலும் தொப்பி அணிந்தாலும் பொங்குகின்ற புகழ் விரிந்த மக்களுக்குள் அன்பும் அறமும் பெருகட்டும். மதங்கள் ஒரு போதும் பிரிவினைக்குத் தூபமிடவில்லை என்பதையும் எவைபடக் கூறியுள்ளார். வலிந்து பேணப்படும் இனப்பாகுபாட்டினை ஒழிக்கப் பணியுடன் ஒன்றிணைவோம் என்கிறார் கவிஞர் ரீ.எல். ஜவ்பர்கான்.

மரபுக் கவிதைகள் மூலம் முன்னணியில் திகழ்பவர் ரீ.எல். ஜவ்பர்கான். இன்றைய யதார்த்த நிலைமைகளைப் பாடி நல்ல கருத்துக்களை முன்வைப்பதில் சிறந்தவர். காத்தான்குடி தந்த கவிஞர்களில் முன்னோடி. இலக்கியத்தின் வழி வாழ்வின் மகத்துவத்தையும் மக்களின் ஐக்கியத்தையும் எடுத்துக் கூறும் அவரது இந்தக் கவிதை அவரது கவிதைத்தொகுப்பான 'மௌனதேசம்' எனும் நூலில் இருந்து பெறப்பட்டதாகும். எமது ஒற்றுமையே எமக்குப் பலம் எனக் கூறும் கவிஞர் தரும் சொல்லின் வலிமையை உணர்வோம். அவரின் மனிதநேயமிக்க ஆக்கங்கள் பல மேலும் வெளிவரவேண்டும் - வெளிவரும் என எதிர்பார்க்கின்றோம்.

| மைதிலி தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிகோரும் நீதித்துறை!

> ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்பட மாட்டாது என்றுமே அனுமதியாது எனவும், தான் சட்டம் சீர்குலைய அனுமதிக்கமாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் நீதித்துறையின் சுயாதீனம் சுதந்திரத்தன்மை பாதுகாக்கப்படுவதே அரசின் நோக்கம் எனவும், தனது அமைச்சரவையினைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் தான் கவலையடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான அமைப்பு மூன்றான நீதித்துறை இன்று பெருக்கடிகளைச் சந்திக்கும் துறையாக மாறியுள்ளது. அமைச்சர்கள் நீதிபதிகளாக மாறாத குறையே இன்று நாட்டில் இருப்பதாக எதிர்க்கட்சிகள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டும் அளவிற்கு நீதித்துறையின் சுதந்திரம், சுதந்திரம் இன்று கேள்விக்குறியாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜனநாயக நாடொன்றில் சுதந்திரமாகச் செயற்பட வேண்டிய நீதித்துறை இலங்கையில் அரசியல் தலையீடுகள் தனிநபர் செல்வாக்குகளுக்கு உட்பட்டு இயங்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது. இலங்கையின் அரசியலமைப்பில் 19ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் அரசியல் சாசனத்தில் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினால் இலங்கையின் நீதித்துறை மீது ஜனாதிபதி தலையிடக்கூடிய ஏதுநிலை நிலவி வருகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் நீதிபதிகள், பிரதம நீதியரசர், நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரை நியமனம் செய்யக்கூடிய அதிகாரம் இருப்பதாலும் நீதியமர்வினால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட ஒருவரை சட்டமா அதிபரின் பரிந்துரையின்கீழ் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யக்கூடிய அதிகாரம் இருப்பதாலும் நீதித்துறையில் அரசியல் தலையீடும் தனிநபர் செல்வாக்கும் விரவிக் காணப்படக் வழிவகுத்துக் கொடுத்துள்ளது.

இத்தகைய மனநிலைகள் அழுத்தங்களைச் சந்திக்க வேண்டிய நிலை நீதித்துறைக்கு இருப்பதாலும் இன்றைய சூழ்நிலையில் சிலநேரங்களில் அழுத்தங்களையும் அது சந்திக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் சம்பவமும் மன்னார் நீதிமன்றங்கள் விடுக்கப்பட்ட தொலைபேசி அச்சுறுத்தலும் பலவேறு அச்சங்களை, கேள்விகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

மன்னார் ஜோசப்வாஸ் மக்களுக்கும், மன்னார் உப்புக்குளம் மக்களுக்கும் இயங்குதுறை சம்பந்தமான பிணக்கு ஒன்று தீண்டகாலமாக இருந்துவந்துள்ளது. இந்நிலையில் இந்தப் பிணக்கு தொடர்பாக மன்னார் ஜோசப்வாஸ் மக்களால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டது. இந்த முறைப்பாடு தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றில் மன்னார் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மன்னார் ஜோசப்வாஸ் மக்களுக்கு மாறாக வழங்கப்படும் கரை தொடர்ந்தும் மன்னார் உப்புக்குளம் மக்களுக்கே இயங்குதுறை அமைக்கக் கடல்தொழிலில் ஈடுபட முடியும் என மன்னார் ஜோசப்வாஸ் மக்களுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் இதைத் தீர்ப்பை எதிர்த்து மன்னார் உப்புக்குளம் மக்கள் கடந்த 17ஆம் திகதி நீதிமன்றம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முதலில் காலை 9.30 மணி தொடக்கம் மன்னார் எ.தொ.க. வீதியை நிலைய வீதியில் இருமருங்கிலும் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தாத வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பின் பகல் பகுதி உட்பட நீதிமன்ற சுற்றாடல் பகுதிகளிலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் முயன்றபோதும் அது சாத்தியமாகவில்லை. இந்நிலையில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் மூண்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களையும் தடிகளையும் வீசித் தாக்குதல் நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்துக்குள் கொண்டுவர முடியாத நிலையில் மேலதிக பொலிஸாரும் இராணுவமும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு வீச்சும் தடியடி பிரயோகமும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது. இதனால் மன்னார் பஸார் பகுதி அடங்கலான நீதிமன்ற கட்டிடத் தொகுதி மீதும் பெரும் பதற்றம் நிலவியது. மன்னார் பகுதிக்கான போக்குவரத்துக்கள் சிலமணிநேரம் ஸ்தம்பித்தது. சிறிது நேர போராட்டத்தின் பின்னே அப்பகுதியை பூரண கட்டுப்பாட்டுக்குள் பொலிஸாரால் கொண்டுவர முடிந்தது. இந்த மோதலின் போது நீதிமன்ற கட்டிடத் தொகுதி மீதும் கற்கள் வீசித் தாக்குதல் நடாத்தப்பட்டது. மன்னார் மேல் நீதிமன்றம், மன்னார் மாவட்ட நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்களின் கண்ணாடிகள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கல் வீச்சுத் தாக்குதலில் சிக்கி நொருங்கின சின்னாபின்னமாகின. இந்நிலையில் நீதிபதி யூட் சுனுக்கு தொலைபேசி மூலமான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் எனக் தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் தனது கைத்தொலைபேசிக்கு அழைப்பு எடுத்து அச்சுறுத்தியதாக நீதிபதி நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார். இது தொடர்பான விசாரணையில் இரகசிய புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிபதி மற்றும் 3 சட்டத்தரணிகள் மற்றும் வழக்கறிஞர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை பாராளுமன்ற தொலைபேசி விபரக்கொத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அமைச்சரவையின் உறுப்பினர்களுக்கு தொலைபேசி அழைப்பிலிருந்து நீதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தொலைபேசி உரையாடல் தொடர்பாக தொலைபேசி இலக்கப்பு வழங்குநரிடமிருந்து விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்ததாக ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையின்படி கடந்த 17ம் திகதி நீதிமன்றிற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. மையக்கு முன்கொண்டு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. ஜோசப்வாஸ் மக்களுடன் ஏற்பட்ட பிணக்கு தொடர்பாக இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் நீதிமன்றிற்கு முன்திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிபதியை தனிப்பட்ட ரீதியில் நிந்தனை செய்யும் வகையில் வார்த்தைகளைப் பிரயோகித்ததோடு நீதிபதியின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். இந்நிலையில் பொலிஸாரை அழைத்த நீதிபதி ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து கலைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். ஆனால் பொலிஸார் அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கினர். இந்நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதிமன்றிற்கு உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. மேல்நீதிமன்ற கட்டிடத்தின் கண்ணாடிகள், மாவட்ட நீதிமன்ற கட்டிடத்தின் கண்ணாடிகள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கல்வீச்சில் சிக்கி நொருங்கியன.

இந்நிலையில் பொலிஸாரை அழைத்த நீதிபதி ஆர்ப்பாட்டக்காரர்களின் முழந்தாளிற்கு கீழ் சுடுமாறு அவர்களை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தார். நிலைமை கட்டுக்கு மீறிச் செல்ல இராணுவமும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் நீதிபதியிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஒருவர் தன்னை அமைச்சர் ரிசாத் பதியுதீன் என அடையாளப்படுத்தி தோடு நீதிபதி வழங்கிய தீர்ப்பால் மன்னார் நகரம் பற்றியெரிய போகின்றது என மிரட்டியதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த மிரட்டலுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என அமைச்சர் ரிசாத் பதியுதீன் மறுத்துள்ளார். குறித்த மன்னார் சம்பவம் தொடர்பில் தனக்கு தகவல் கிடைத்ததாகவும் தான் உடனே பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு மன்னாருக்கு செல்வதற்கான ஹெலி வசதியைக் கோரியதாகவும் இது தொடர்பாக தான் சம்பவதினம் மன்னார் அரச அதிபர், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடியதாகவும் ஆனால் தான் நீதிபதியை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை எனவும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண இது தொடர்பான விசாரணைகளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ன தலைமையில் மூன்று பொலிஸ் குழுக்களும் இரகசிய புலனாய்வுப் பிரிவு (CID) என்பனவும் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் நீதிபதியை அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இதுவரை நீதிமன்ற தாக்குதல் தொடர்பில் 15 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுளா திலகரட்ணவுடன் தொடர்பு கொண்டு நீதிபதியை இடமாற்றுவதற்கு அழைப்பு விடுத்ததாகவும் இது நீதிச்சேவை ஆணைக்குழு விடயம் என்பதால் தான் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டதாகவும் நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் மஞ்சுளா திலகரட்ண ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இப்போது குறித்த அமைச்சரை உடனடியாகக் கைது செய்யுமாறு நாடு முழுவதும் சட்டத்தரணிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர். ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் தலைமையிலான ஐந்து பேரடங்கிய சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அமைச்சர் ரிசாத் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இதனை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அமைச்சர் ரிசாத் பதியுதீனை எதிர்வரும் 5ம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகி செல்வாக்கு பிரயோகிப்பு, நீதிமன்ற அவமதிப்பு என்பவற்றின் கீழ் அவர் ஏன் தண்டிக்கப்படக் கூடாது என விளக்கமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்பதே மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும். மன்னார் நீதிபதியை அமைச்சர் ரிசாத் பதியுதீன் அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் பதவி, தராதரம் பார்க்காமல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்டம் தன் கடமையைச் செய்யும் எனவும் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார். இதற்கு தமது கட்சியும் அரசும் கடும் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்பட மாட்டாது என்றுமே அனுமதியாது எனவும் தான் சட்டம் சீர்குலைய அனுமதிக்கமாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் நீதித்துறையின் சுயாதீனம் சுதந்திரத் தன்மை பாதுகாக்கப்படுவதே அரசின் நோக்கம் எனவும் தனது அமைச்சரவையினைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் தான் கவலையடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நடக்கப்போவது என்ன என்பது தான் மக்களிடம் ஏற்பட்டுள்ள கேள்வியாகும். நாட்டில் நல்லாட்சி இடம்பெறுவதாகவும் ஜனநாயக உரிமை பேணப்படுவதாகவும் நீதித்துறை சுயாதீனமாக செயற்படுவதாகவும் கூறும் ஆட்சியாளர்கள் குறிந்த நீதிமன்றத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் நீதிபதி அச்சுறுத்தப்பட்டமை தொடர்பிலும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இச்சம்பவத்துடன் யார் தொடர்பு பட்டிருந்தாலும் எந்தப் பாகுபாடும் இன்றி அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிடின் இலங்கையில் நீதி நிர்வாகம் என்பது கேள்விக்குறியாக மாறிவிடும்.

— ஹரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்ஒளி

01, ஒகஸ்ட் - 07 ஒகஸ்ட், 2012

55, தெல்லிப்பளை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-44, பெக்ஸ்போன்: 0115738005
பக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

காய்நகர்த்தலும் காலங்கடத்தலும் எதுவரை?

காய்நகர்த்தலும், காலங்கடத்தலுமான தந்திரோபாயத்தை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமையினை இப்போது தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் உட்பட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டியக் கட்டப்பாடுவரை அரசாங்கம் சரியான நகர்வுகள் எதனையுமே மேற்கொள்ளவில்லை. ஆனால், காலங்கடத்தும் நடவடிக்கை மூலமாக பிரச்சினைகளை தீர்த்து நன்மையை இல்லாமல் செய்து விடலாம் என்று அரசாங்கம் எண்ணுவதாகவே தெரிகின்றது.

பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு காலவரையறையினை நிர்ணயிக்க முடியாத நிலையில் அல்லது விரும்பாத நிலையில் அரசாங்கம் காலத்தை இழுத்தடிக்கும் நிகழ்ச்சி நிரல்களை வகுத்து மேற்கொண்டு வருகின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்த மூன்றரை வருடங்களாகும் என தற்போது அரசாங்கம் அறிவித்துள்ளமையினையும் இவ்வகையிலேயே நோக்க முடிகின்றது.

போர் நடை பெற்றுக்கொண்டிருந்த காலங்களில் சர்வதேசத்தின் அழுத்தங்களின் விளைவாகவே அரசாங்கம் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். அப்பேச்சுக்களும் எந்த ஆக்கபூர்வமான முடிவுகளையும் எட்ட முடியாமல் தோல்விகளிலேயே முடிவடைந்தன. இத்தோல்விகளுக்கு ஒருவரையொருவர் குற்றம் சுமத்தியும் வந்தனர். பேச்சு வார்த்தைகளுக்கான நடுநிலையாளர்களும் இருதரப்பின் பேச்சுவார்த்தைகளை சரியான திசைவழியிலிருந்து இட்டுச்செல்ல முடியாதபடி தோற்றுப்போயினர்.

போரின் இடைவேளைகளாகவும், போரில் ஈடுபட்டவர்கள் ஓய்வெடுக்கும் தருணங்களாகவுமே இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. பேச்சுக்களை முரிவடைந்து மீண்டும் போர் முனையில் அலை மோதுகின்ற போதும் சுட்டமைப்பின் மீதே அரசாங்கம் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றது. உள்நாட்டில் இடம் பெறுகின்ற பேச்சுவார்த்தைகளின் சிக்கல் நிலைக்கு யார் காரணம் என்பதை சர்வதேச சமூகத்திடமே சுட்டமைப்பினர் அடிக்கடி வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சர்வதேச சமூகம் நிலைமைகளை ஆராய்ந்து வருவதோடு இலங்கை அரசாங்கத்தின் மீதே குற்றம் சுமத்தும் நிலைக்கும் வந்துள்ளது. அண்மைய நாட்களாக இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் அவதானிப்பிலும், அரசாங்கத்துடனான தொடர்பாடல்கள் ஊடாகவும் உண்மை நிலைமைகளை அவை புரிந்து கொண்டுள்ளதாவே தெரிகின்றது. அவற்றின் அண்மைய கருத்துக்களும் இவற்றை வெளிப்படுத்தியுள்ளன.

எல்லாவற்றிற்கும் அப்பால், உலக, பிராந்திய ஒழுங்குகளை வீர்குலைக்கும் வகையிலும் இலங்கை அரசாங்கம் நகர்வுகளை மேற்கொண்டு வருவதான ஒரு ஐயம் குறிப்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா உலக ஒழுங்கை சம நிலையில் வைத்திருப்பதானால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் உறவைப் பலப்படுத்த வேண்டிய தேவை இன்றியமையாத ஒன்றாகும்.

இப்போது சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் இலங்கை மேற்கொண்டுள்ள நெருக்கம் மேலும் சர்வதேசச் சிக்கல்களுக்கே வழிவகுக்கும்.

ஒரு கட்டத்தில், தங்கள் பாதுகாப்பிற்கு இலங்கையின் நகர்வுகள் குந்தகம் விளைவிக்குமானால் அமெரிக்காவும் இந்தியாவும் சில கடுமையான நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிவரும். தற்போதுள்ள பிரச்சினைகள் அழுத்தங்களிலும் பார்க்க அது அதிக அழுத்தம் மிக்கதாகவே அதன் விளைவுகள் இருக்கும். அப்போது இலங்கை அரசின் காய்நகர்த்தல், காலங்கடத்தல் தந்திரோபாயம் எல்லைகளிலும் பலனளிக்கப்போவதில்லை.

கடவுளைக் காப்பாற்றுங்கள்!

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' இது ஆன்றோர் வாக்கு. இந்த வாக்கிற்கு அமைவாக இலங்கையில் தமிழர்கள் வாழ்கின்ற அனைத்துப் பாகங்களிலும் இந்து ஆலயங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. வட பகுதியில் குறிப்பாக யாழ்குடாநாட்டிலும் வன்னிப்பகுதியிலுமாக திரும்புகின்ற முனை முடக்கெல்லாம் ஏதாவது ஒரு இந்து ஆலயத்தையாவதும் பார்க்க முடியாமல் சென்றதாக இல்லை. இவ்வாறு சைவத்தமிழ் மக்களின் வாழ்வியலில் ஆலயவழிபாடு இரண்டறவே கலந்துவிட்டது. சைவத்தமிழ் மக்களின் ஆன்மீக நம்பிக்கைகளின் காவலனாக விளங்கும் கடவுளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லாத சூழ்நிலையே தற்போது நிலவுகின்றது. 'ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டு' இவ்வாறான தலைப்புக்களில் அண்மைக்காலங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயவிக்கிரகங்களில் அநேகமானவை ஐம்பொன் கொண்டுதான் வடிவமைக்கப்படுகின்றது. இந்த ஐம்பொன் விலை மிகவும் பெறுமதி வாய்ந்தது என்பது யாவரும் அறிந்ததே. இத்தகைய பெறுமதி வாய்ந்த விக்கிரகங்களை திருடர்களின் இலக்காகவுள்ளது. பொதுமக்களின் வீடுகளிலும், வர்த்தகநிலையங்களிலும் தமது கைவரிசைகளைக் காட்டிவந்த திருடர்கள் தற்போது ஆன்மீக உறைவிடமான ஆலயங்களையும் குறிவைக்கத் தொடங்கியுள்ளனர். பொருக்குப்பின்னான காலங்களில் அதாவது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் யாழ்குடாநாட்டிலும் கிளிநொச்சியிலும் பல இலட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்களும் இன்னும் பல பொருட்களும் களவாடப்பட்டிருந்தன. இவற்றில் ஒருசில திருடுகள் மட்டும் பொலிசாரிடம் அகப்பட்டு, திரும்பக்கிடைத்தன. அநேகமான விக்கிரகக் கொள்ளைச் சம்பவங்கள் இதுவரையிலும் அகப்படாமல் மர்மமாகவேயுள்ளன. யாழ்குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்து பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் ஒட்டுமொத்தமான வடபகுதியும் படைக் கட்டுப்பாட்டின்கீழ் வந்து, ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரான சமகாலப்பகுதியிலேயே ஆலயங்களில் அரங்கேற்றப்படும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதை அவதானிக்கமுடிகிறது. இந்தநிலையிலேயே சில பிரசித்திபெற்ற ஆலயங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். கையெடுத்து வணங்கும் கடவுளை நிந்தித்து கடவுளின் உருவமாகக் கொள்ளப்படும் விக்கிரகங்களைக் கொள்ளையடித்து அதன் மூலம் பிழைப்பு நடத்த எண்ணுகின்ற மனிதர்களை பாதகர்கள் என்று கூறினால் அதில் எவ்விதத் தவறும் இல்லை.

ஆலயவிக்கிரகத் திருட்டுகளில் ஈடுபடுவது இதுவரையிலும் பொலிசாரிடம் அகப்படாமல் மக்களோடு மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் கொள்ளையர் கூட்டம் குறித்த ஐம்பொன்னாலான விக்கிரகங்களை விற்றிருந்தால் பெருந்தொகையான பணத்தினை கருட்டியிருப்பார்கள் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனைகளையும் குற்றத்திற்கான அபராதங்களையும் முறையாக விதிப்பதன் மூலமாகவே இத்தகைய சாதகமான குற்றச்செயல்களை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தமுடியும். அத்தடன் ஆலயங்களில் இரவுவேளைகளில் விக்கிரகத்திருட்டுகளில் ஈடுபடுவதென்பது இலகுவான காரியமன்று. அதாவது இந்து ஆலயத்தின் பூட்டுப்போடப்பட்ட கதவுகளின் பூட்டுக்களை உடைத்தோ அல்லது மூலஸ்தானத்தின் ஓடுகளைப் பிரித்தோ உட்சென்று அங்கு வைக்கப்பட்டிருக்கின்ற விக்கிரகங்களை திருடிச் சென்றிருக்கின்றனர். இந்தகைய திருட்டுச் சம்பவங்களுக்குப்பின்னால் சில மர்மங்கள் மறைந்திருப்பதை ஊகிக்கமுடிகிறது. அதாவது குறித்த இந்து ஆலயங்களோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பவர்கள் அல்லது சட்டத்தைப் பேணுபவர்கள் குறித்த கொள்ளைச்சம்பவங்களுக்கு பின்புல சக்திகளாகச் செயற்படுகிறார்களா என்ற கேள்வியும் சந்தேகமும் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை. யாழ்குடாநாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்களையும் துருவிப்பிடிக்கும் பொலிசாரினால் ஆலயவிக்கிரகத் திருட்டுச்சம்பவங்களில் அநேகமானவை அகப்படாமல் போயுள்ளமை ஆச்சரியமாகவேயுள்ளது.

எனவே, ஒவ்வொரு மதத்தினுடைய அடையாளங்களையும் அதன் புனிதத்தன்மையையும் பாதுகாக்கவேண்டியது ஒவ்வொரு குடிமகனதும் தலையாய கடமையாகும். விக்கிரகங்கள் திருடப்படுவது இந்து ஆலயங்களில் மட்டுமே நடைபெறுகின்றது இத்தகைய பாதகமான செயல்கள் இடம்பெற்றிருப்பது இந்துசமய மக்கள் மத்தியில் உள்ளக்குமுறலையும் மனக்கொதிப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றன. ஆகவே, இந்து ஆலயங்களின் தெய்வீகத்தன்மையும் அதன் புனிதத்தன்மையும் முறையாகப் பேணப் படுவதோடு ஆலயவிக்கிரகங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தொடர்ந்து வரும் நாட்களிலும் ஆலய விக்கிரகங்களுக்கு உரிய பாதுகாப்புக்களை வழங்குவதற்கு இந்துமத அமைப்புக்கள் முன்மாதிரியான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது காலத்தின் நியதியாகவுள்ளது.

-நிர்மலா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி



ஜீ.ஜீ.

மேதமையின் இன்னொரு பெயர்

ஜீ.ஜீ. சிங்களம் மட்டும் சட்டத்தால் நாடு பிளவுபடும் என்பதை இதய சுத்தியுடன் வெளிப்படுத்தினார்.

"இவ்விவாதத்தின் பரபரப்பு அடங்குகையில் இப்போது ஆரம்பித்துள்ள போராட்டத்தின் முடிவு கிடைத்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வரலாற்று ரீதியாக என்னதான் வேறுபாடுகள் எமக்கிடையே இருந்தாலும் கடந்த சில நூற்றாண்டு காலத்திலாவது இந்த நாட்டு விவகாரங்களைப் பொறுத்தமட்டில் ஐக்கிய, சகோதரத்துவப் பாங்கினை அரிக்கிருந்தது செய்து வந்த இரண்டு தொன்மையானதும், பெருமைகொள்ளத்தக்கதுமான கலாசாரங்களைக் கொண்ட இரண்டு இன மக்களிடையே பிளவொன்று ஏற்பட்டுள்ளதை மிகுந்த வேதனையுடனும் மனவேதனையுடனும் கூறுகின்றேன்.

மதரீதியான தூண்டுதல்களைக் கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால் மொழி ரீதியான உரிமை மறுப்புகள் சகித்துக் கொள்ள முடியாதவையென்ற சிலரின் கருத்துக்கள் அங்கே இடம்பெறும் அளவுக்கு மொழி உரிமைகள் மக்களை மிகவும் ஆழமாகவும் அழுப்படையாகவும் பயங்கரமாகவும் பாதிக்கின்றன. அதாவது அந்தக் காலத்தில் இன்னொரு மததை பின்பற்றுபவர்கள் மீது தமது மதத்தை வாள்முனையில் வலிந்து திணிப்பதைச் சரியென்று நினைத்தார்கள். வரலாறும் அதை அறிவிற்கு அப்பாற்பட்டதும் காட்டுமிராண்டித் தனமானதுமென தீர்ப்பளித்தது. ஆயினும் கல்விமான்களும் ஆராய்ச்சியாளர்களும் இது பற்றிக் கருத்துரைக்கையில் தமது மதமே முத்தி நிலையை அடைவதற்கான ஒரேவழி: ஆகவே அம்மதத்தின் கோட்பாடுகளை வாள்முனையில் வற்புறுத்துதியாவது மனதில் பதிய வைப்பது ஓரளவு நியாயமானது என்று கொள்வோர் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்த நவநாகரீக யுகத்தில் ஒரு மொழியைப் பேசும் ஓர் இனம் மற்றொரு மொழியைப் பேசுகின்ற சமுதாயத்தின் விருப்பமில்லாத தொண்டைகளுக்குள் தமது மொழியைப் பலவந்தமாக திணிக்க விரும்புவதில் என்ன நியாயம் இருக்கக் கூடும்?

படைகளினதும் அரச எந்திரத்தினதும் துணைகொண்டு ஓர் இனத்தின் மொழியை இன்னொரு இனத்தின் மீது பலவந்தமாகத் திணிப்பதிலும் பார்க்க அதிக இருள் மயமான மனச் சோர்வுமிக்க ஒரு விடயத்தை நாகரிகத்தின் வரலாறு பதிவு செய்யாது என மிகவும் பொறுப்புடனும் செயல முனைப்புடனும் கூற விரும்புகின்றேன். இராணுவப் படையெடுப்பை நடத்தி ஒரினத்தை வெற்றி கொண்ட தன் பின்னர் வெல்லப்பட்டவர்கள் மீது அவர்கள் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ வென்றவர்கள் தம் மொழியை வாள் முனையில் பலவந்தமாகத் திணித்த வரலாற்றில் இடம்பெற்ற கடந்தகால சம்பவமொன்று மட்டுமேஇதற்கு இணையாகும்.

நேரிய உள்ளத்தோடு நான் அவர்களைக் கேட்கிறேன். இச்சட்ட மூலத்தை இன்னும் அவர்கள் முன்னெடுக்கப் போகின்றார்களா? அப்படியானால் சபாநாயகர் அவர்களே எல்லோரும் இதைப் புரிந்து கொள்ளட்டும். இதனால் ஏற்படப் போகின்ற நன்மைக்க முடியாத விளைவுகளை முழுமையாக உணர்ந்து கொண்டே அவர்கள் இதைச் செய்கிறார்கள்". இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம்

பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பொழுது அச்சட்டத்தை எதிர்த்து செல்வநாயகத்தைத் தலைவராகக் கொண்ட தமிழரசுக் கட்சியினர்

சிங்களத் திணிப்பை எதிர்த்தும் போராட்டம்

● எஸ்.தியாகராஜா

கோல்பேஸ் மைதானத்தில் சத்தியாக்கிரகம் இருந்தனர். அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.எம்.வி.ராஜரட்னா தலைமையில் சிங்களக் காடையர்கள் சத்தியாக்கிரகிகள் மேல் கற்களால் எறிந்தும், துடிகளால் அடித்தும்

தாக்கினர். டாக்டர் ச.எம்.வி.நாகநாதனைத் தாக்கினார்கள். அமிர்தலிங்கத்துக்குக் கற்களால் எறிந்து மண்டையை உடைத்தனர். வன்னியசிங்கத்தின் சட்டையைக் கிழித்தனர். வயது முதிர்ந்த செல்வநாயகத்தைத் தாக்க முற்பட்ட போது சத்தியாக்கிரகிகள் கற்றிவளைத்து நின்று அவரைக் காப்பாற்றினர்.

நாடு முழுவதும் இனக்கலவரம் மூண்டது. சிங்களக் காடையர்கள் தமிழர்களை வெட்டிக் கொன்றனர். தமிழர்களின் கடைகளைக் கொழுத்தினர். வீடுகளை எரித்தனர். நாடு அவ்வோலை கல்லோலப்பட்டது. தமிழன் வீதியால் செல்ல முடியாத நிலை. இந்த நிலையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தனது பாராளுமன்ற உரையை முடித்துக் கொண்டு தன் உயிரையும் பொருட்படுத்தாது தனது ஜீப் வண்டியில் சி.சுந்தரலிங்கத்தையும் ஏற்றிக் கொண்டு சத்தியாக்கிரகிகள் இருந்த இடத்திற்குச் சென்றார். அவர்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறி பொன்னம்பலம் தேசாதிபதியுடன் தொடர்பு கொண்டு சத்தியாக்கிரகிகளை பாதுகாப்பாகச் செல்வதற்கு ஒழுங்கு செய்தார்.

சிங்கள எதிர்ப்புப் போராட்டம்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் இத்துடன் நின்று விடவில்லை. தமிழ்ப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் சிங்களம் படிப்பித்த சிங்கள ஆசிரியர்களை திருப்பி அனுப்பச் செய்தார்.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார்

சிங்கள 'ஸ்ரீ' எழுத்துக்குப் பதிலாக தமிழ் ஸ்ரீ எழுத்துக்களைப் பொறித்து ஆங்கில எழுத்துக்குப் பதிலாகத் தமிழ் எழுத்துக்களை எழுதியும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் பல நூற்றுக்கணக்கான கார்களில் ஊர்வலம் வந்தனர். இறுதியாக பொன்னம்பலம் பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்குச் சவால்விட்டார். பண்டாரநாயக்கா அரசாங்கமே உனக்குத் துணிவிருந்தால் என்னையும் இதர தலைவர்களையும் சிறையில் பார்க்கலாம் என்றார்.

சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்

சிங்கள நாட்டிற்குச் சென்று தமிழனுக்காக வழக்குப் பேசினார் ஜீ.ஜீ.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இரத்தினபுரியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கடை யொன்றில் கொள்ளையிடவும், கடைக்குத் தீ வைக்கவும் சிங்களக் காடையர்கள் போயினர். கடைச் சொந்தக்காரன் அவர்களை நோக்கிச் சுட்டான். அப்பொழுது ஒரிருவர் இறக்க, ஏனையோர் ஓடி விட்டனர். ஜீ.ஜீ. அவ்வழக்கில் ஆஜரானார். ஜீ.ஜீ. அவ்வழக்குக்கு வரும்பொழுது அவரைக் கொலைசெய்யவும் அவருடைய காரை அடித்து நொருக்கவும் சிங்களக் காடையர்கள் காத்து நின்றனர். அப்பொழுது ஜீ.ஜீ. தனது சிங்கள நண்பருடைய காரில் நீதிமன்றத்துக்குச் சென்றார். சிங்களக் காடையர்கள் தங்களுக்குப் பயந்து ஜீ.ஜீ. வரவில்லை என்று நினைத்து நீதி மன்றத்துக்குச் சென்றனர். அந்நேரம் இவ்வழக்கை ஜீ.ஜீ. பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் வெட்கித் தலைகுனிந்து திரும்பினர். ஜீ.ஜீ. இவ்வழக்கைப் பேசி வெற்றி பெற்றுக் கொடுத்தார்.

பண்டா செல்வாவுடன் ஒப்பந்தம்

சிங்களம் படிக்காததினால் எத்தனையோ ஆயிரம் தமிழ் உத்தியோகத்தர் வேலையை இழந்தனர். சிங்களக் காடையர்களின் தாக்குதலினால் தமிழர் பலர் இறந்தனர். எத்தனையோ ஆயிரம் பேர் உடைமைகளை இழந்தனர். இந்நிலையில் பிரதமர் பண்டாரநாயக்கா 01.06.57இல் பேச்சு வார்த்தை மூலம் சிங்கள தமிழ் தகராறுக்குச் சமரசம் காணலாம் என்று நாட்டுமக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரையில் கூறினார். இதனைக் கேட்ட செல்வநாயகம் பேச்சு வார்த்தைக்குச் சம்மதம் தெரிவித்தார்.

முதலாவது நாள் சந்திப்பு பண்டாரநாயக்காவின் ஹொரகொல்லை வீடுதியில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமானதும் சிங்களம் மட்டும் சட்டத்தைத் தன்னால் மாற்ற முடியாதென்றும், சமஷ்டிக் கோரிக்கைக்கு இணங்க முடியாதென்றும், பிரஜாவுரிமைப் பிரச்சினை இந்தியப் பிரதமர் நேருவுடன் பேசித் தீர்க்கப்படும் என்றும் கூறினார். இனிப் பேச இருப்பது என்ன? இருப்பது குடியேற்றம் மட்டும் தான். குடியேற்றம் மாவட்ட சபைகளுக்குத்தான் இருக்க வேண்டும் என்று செல்வநாயகம் கேட்டுக் கொண்டார். அதற்குச் சம்மதித்தார் பண்டா. அவர்களுடைய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடந்து கொண்டிருந்தது. அதனைச் சமஷ்டிக் கட்சியினர் வினவியபோது அது முன்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்றார் பண்டா. ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து ஜீ.ஜீ. கொதித்தெழுந்தார். இதனை ஏற்பதாக இருந்தால் இவ்வளவு போராட்டங்கள் நடத்தப்படத் தேவையில்லை. அடங்காத் தமிழர் சுந்தரலிங்கமும் இதனை எதிர்த்தார். ஜீ.ஜீ.பொன்னம்பலம் இதனை எதிர்த்து பல கூட்டங்களை நடத்தினார். தமிழ்மக்களும் உண்மையை உணர்ந்தனர். ஜீ.ஜீ.யின் பேச்சைப் பல்லாயிரக் கணக்கில் அச்சடித்து சிங்கள நாட்டில் வெளியிட்டார். பண்டா எதிர்ப்புச்சக்தி வலுப்பெற்றது. பண்டா இவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

அடுத்த இதழிலும் வரும்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாற்றம்

சிறுகதை

ஜோ.மூல் உருத்ரா

'விர்...' என்று பறந்து வந்த ஒட்டோ லலியின் வீட்டு வாசலில் வந்து நின்றது. அன்று வெள்ளிக்கிழமை காலை சாமிக்காக பூக்களைப் பறித்துக் கொண்டிருந்த லலிதாம்பிகை, ஒட்டோவினின்று இறங்குவது கலியாணத் தரகர் எனக் கண்டதும் பூக்களுடன் உள்ளே சென்று விட்டாள். லலிதாம்பிகை பெயருக்கேற்பவே அம்பிகை போன்றவள். நல்ல அழகையும் கூடவே கல்விச்செல்வத்தையும் கொடுத்திருக்கிறான் இறைவன். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பிரிவில் இரண்டாம் வருடத்தைத் தொடரும் அவள் குடும்பத்திற்கு இறைவன் கொடுக்கத் தவறியது பொருளாதாரம் ஒன்றே. பிரிசுவாதத் தால் படுக்கையில் சாய்ந்து கொண்ட தந்தை, ஊதியம் தொழில் மூலம் குடும்பத்தை இழுத்துச் செல்லும் தாய், அடுத்தடுத்து கல்வியைத் தொடரும் தங்கையும் தம்பியும் என சுகமான சுமைகளாகவே நகர்ந்து கொண்டிருக்கும் அவர்கள் குடும்ப சூழலில் தரகரின் வருகை வேடிக்கையாகவே அவளுக்குத் தோன்றியது.

பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் இராமலிங்கம் கடமையுணர்வும் கண்ணியமும் கொண்டவன். இவரது மனைவி கருணாதேவியும் கணவனுக்கு உகந்த நல்ல மனைவியாக வாழ்ந்து வருபவள். இவர்களது ஒரே ஒரு மகன் கங்காதரன் கல்வியில் சிறந்தவன். தனது மேற்படிப்புக்காக தனது பெற்றோரை பிரிந்து அமெரிக்காவிற்குச் சென்றிருந்தான். அவன் அமெரிக்கப் பிரஜையாகி பதது வருடங்களுக்கு மேலாகி விட்டது. இராமலிங்கம் காந்தியாரும் தனது மகனுக்கு உரிய பெண்ணைத் தேட ஆரம்பித்ததன் முதல் முயற்சியே தரகர் லலியின் வீட்டிற்கு வருகை தந்ததன் காரணம்.

தரகர் பெண்ணைப் பற்றியும் அவர்களது குடும்ப நலன்கள் பற்றியும் விபரிக்கவே இராமலிங்கம் தம்பதியினர் சென்று பெண்ணைப் பார்த்ததும், பிடித்துக் கொண்டது. கங்காதரனுக்கு முற்றிலும் ஈடுஇணையான நல்ல குடும்பத்துக்கு உரித்தான இலட்சணங்களுடன் பெண் கிடைத்தது பெரும் பேறாகவே அவர்கள் கருதினார்கள். லலியின் படத்துடன் விடைபெற்றார்கள். உடனே மகனுக்கும் அனுப்பியும் வைத்தார்கள்.

கங்காதரன் பெற்றோரின் அரவணைப்பிலும் கட்டுக்கோப்பிலும் அவர்கள் முன்னிலையில் கண்ணியமாய் வளர்ந்திருந்தாலும் அமெரிக்காவில் மேலைநாட்டவரின் சுதந்திரப் போக்கு, எங்கும் எதிலும் பெரியவர் அனுமதியை பெற்றுக் கொள்ளாத சுய செயற்பாடுகள் அவனது குணவியல்புகளைச் சிதறடித்தன. அங்கேயே மேலைநாட்டுப் பெண்ணை தனது விருப்புக்கேற்ப மணம் முடித்தான். அவனது சுதந்திரம் எல்லைகளைத் தாண்டியே சென்று கொண்டிருந்தது. அந்த வேளையிலேயே பெற்றோரின் கடிதம் கிடைக்கப்பெற்றது. அதற்கான தகுந்த பதிலைக் கூறமுடியாத வனாய் செய்வதறியாது திகைத்தான். குழப்பமான மனநிலையில் இருந்தான். தந்தையின் கடிதத்தில் இருந்த வரிகள் அவனை அந்த அளவுக்கு உலுக்கியது. கடிதத்துடன் அவனது வாழ்க்கைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்ணின் போட்டோவும் கிடைக்கப்பெற்றது. அதனைக் கூடப் பார்க்கத் தகுதி அற்றவனாகக் காணப் பட்டான்.

உண்மையைக் கூற எத்தனிக்கையில் தனது தந்தையின் வெறுப்புக்கு தான் உள்ளாகி விடுவோமோ என்றும் கடைசி முதிர்ந்த காலத்தில் தனது தந்தை உடல் வருத்தத் திற்கு ஆளாகி விடுவாரோ என்றும் பயந்தான். செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் அவனது தொலைபேசி மணி விடாது அழைத்தது. நிமிர்வதை எடுத்து "ஹலோ..." என்றான்.

"கங்கா நான் தேவா பேசுகின்றேன். இன்று எனது அப்பா இறந்த நினைவு நாள். இறந்து பல ஆண்டுகள் கடந்தாலும் அவரது நினைவுகள் மட்டும் சாகவில்லை. அவரது இந்த நினைவு தினம் வந்தே எனது தந்தை இறந்து விட்டதை உணர்த்துகிறது. எனது உற்ற நண்பன் நீ. இன்று எனது வீட்டிற்கு சாப்பிட வரமுடியுமா" என எதிர்முனையில் இருந்த அவனது நண்பன் கேட்டான்.

"ம் வருகிறேன்" என்று சீவரை வைத்தான் கங்கா. உடனேயே நண்பன் தேவா வீட்டிற்கு காரில் விரைந்து கொண்டிருந்தான். தேவானந்தன் பற்றிய சிந்தனைகள் அவனுள் ஓடியது.... அவன் தொழில் புரியும் இடத்தில் உள்ள ஒரே ஒரு தமிழ் நண்பனே தேவானந்தன். சிறுவயதிலேயே தந்தையை இழந்தவன தாயின் அரவணைப்பில் வளர்ந்தவன். எட்டு வருடங்களாக அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறவன். நாகரிகமொழி, கலாசாரம், பண்பாடு, சமயம் என்பவற்றில் பற்றுறுதி கொண்டவனாகத் திகழ்பவன். அவனைப் பற்றிய சிந்தனைகளைக் கலைத்தவனாக தேவானந்தன் வீடடை அடைந்தான்.

நண்பனை வரவேற்று உபசரித்து முடிந்ததும் கங்காதரன் முகத்தில் தெரிந்த குழப்பத்திற்கு காரணம் என்னவென்று நண்பனுக்குரிய பரிவோடு வினவினான் தேவா. நாளுக்குள் அடக்கி வைத்திருந்த துன்பத்தை எல்லாம் தன் நண்பனிடம் பகிர்ந்து கொண்டான். பெற்றோர் அனுப்பிய கடிதத்தையும் பெண் லலிதாம்பிகையின் படத்தையும் கூடவே காண்பித்தான். இருவருமே எதுவும் பேச முடியாது அமைதியில் கழிந்த சில மணித்துளிகள் கலைந்தன. நண்பனின் இரு கரங்களையும் பற்றி "தேவா... கெஞ்சிக் கேட்கின்றேன். இந்தப் படத்திலிருக்கும் பெண்ணை நீ திருமணம் செய்து கொள்வாயா? பெற்றோரின் கனவையெல்லாம் நிராசையாக்கிவிட்ட பாவியாக நான் இருக்கிறேன்" என்று காலில் விழாக்குறையாகக் கெஞ்சினான். இதனை சற்றும் எதிர்பார்க்காத தேவானந்தன் அப்படியே சில மணி நிமிடங்கள் உறைந்து போனான். நண்பனாக இருந்து கொண்டே இப்படி ஒரு கல்லை தன் தலையில் வைப்பான் என எதிர்பார்க்கவில்லை. உடனே தன்னை சுதாகரித்துக் கொண்டு தனது நண்பனை சமாதானப்படுத்தி அனுப்ப முயன்றான். ஏனெனில் அவனுக்கு அந்நேரத்தில் தனிமை தேவைப்பட்டது. கங்காதரன் பதில் கூறும்படி கேட்டதும் பிறகு பதில் கூறுகிறேன் எனக் கூறி வழி அனுப்பி வைத்தான்.

தேவானந்தனின் அமைதி சீர்குலைந்தது. சிந்தனைகள் பலவாறு ஓடியது. எனக்கு தேவையில்லை இதோ நீ எடுத்துக்கொள் என்று சொல்வதற்கு பெண் என்பவள் வெறும் கைப்பொம்மையா? மனம் சம்பந்தப்பட்ட விடயமல்லவா? கங்காதரனின் பெற்றோரின் கடிதவரிகளிலிருந்து லலிதாம்பிகையின் குணநலன்கள், பண்புகள், கல்வி நிலைகள் புலப்பட்டாலும் தமது மருமகளாக எண்ணி எழுதிய கங்காதரனின் பெற்றோரை நினைக்கும் போது அவர்கள் மீது ஒரு வித பரிதாபமும், அதே நேரம் தனது நிலையிலிருந்து தப்பிக் கொள்ள தன் தலையில் சுமத்த நினைத்த நண்பன் மீது கோபமும் வந்தது. எனினும் அந்தப் பெண்ணின் நிலை, அவளின் எதிர்காலம் என்ன? அடைக்கலம் தேடிவந்து அலைமோதும் எம் இளைஞர்களுக்கு எம் பெண்கள் எல்லை பலிக்கடாவா? அவனை அறியாமலே லலிதாம்பிகை மீது ஒரு அனுதாபம் ஏற்பட்டது. சில மாதங்களின் பின் சிந்தனைகளில் தெளிவு பெற்று, தனது தாயின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு கங்காதரனுக்கு தனது சம்மதத்தைத் தெரிவித்தான்.

இதனை லலிதாம்பிகை எந்த அளவுக்கு புரிந்து கொள்வாள் என்பது புரியாத புதிராகவே இருந்தது. கங்காதரன் நேரிலேயே பலவற்றையும் பேசித்தீர்க்கலாம் எனும் எண்ணப் போக்கில் இருந்தான்.

தொலைபேசியில் கங்காவின் பெயரிலேயே தேவா லலியுடன் உரையாடினான். நாடகள் மிக வேகமாகவே நகர்ந்தன.

அமெரிக்க விமானநிலையத்தில் லலியின் வருகைக்காக அனைவரும் காத்திருந்தனர். கங்காதரன் தனது மனைவி குழந்தையுடனும் தேவாவின் அயல்வீட்டு செல்வம் அன்ரியுடனும் காத்திருந்தான். மார்கழி மாதம் ஆகையால் மாலை ஐந்து மணிக்கு வரவேண்டிய விமானம் சில நிமிடங்கள் தாமதமாகவே வந்தடைந்தது. வியாலத்திலிருந்து இறங்கி வந்த லலிதாம்பிகையின் அழகில் ஒரு நிமிடம் எல்லோருமே அயர்ந்து போனார்கள். ஆனால், அவளோ தன்னை வரவேற்க வேண்டிய கங்காதரன் அருகில் அமெரிக்கப் பெண்ணொருத்தியும் அவள் கைக்குழந்தையுடன் நிற்பதையும் கண்டு மனம் பதைபதைத்தது. "ரீ இவ்ப் மை வைப்" என தனது மனைவியை கங்காதரன் அறிமுகம் செய்து வைத்தான். அவ் வார்த்தைகள் செவி வழி செல்லும் முன்பே குழலைப் புரிந்து கொண்ட லலிதாம்பிகை அதிர்ந்தாள். எழ முடியாத துக்கத்தில் குலுங்கிக் குலுங்கி அழுதாள். செய்வதறியாது திகைத்தாள். அந்த நேரத்தில் செல்வம் அன்ரியே அவளை அரவணைத்து ஆறுதல்படுத்தி நடந்த அனைத்து விடையங்களையும் எடுத்துக் கூறினாள். மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த அவளுக்கு எளிதில் அனைத்தும் புரிந்து விட்டது. பல்கலைக்கழகத்தில் கற்றவளாயிற்றே... எதிலும் எதனையும் இலகுவாக எதிர்கொண்டு வாழும் தன்மை கொண்டவள் என்பதால் இந்த விடயத்தையும் துணிச்சலுடன் எதிர்கொண்டாள். சில வாரங்கள் கழிந்தன. அவள் தேவானந்தனை மனமுவந்து ஏற்றுக்கொண்டாள்.

இரவு விருந்துபசாரம் கங்காதரன் வீட்டிலேயே நடைபெற்றது. கங்காதரன் குடும்பத்தாரிடமிருந்து விடை பெற்றுக் கொண்ட தேவானந்தனும் லலிதாம்பிகையும் தம் எதிர்காலக் கனவுடன் வீட்டை நோக்கி காரில் புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப்புனல்

சிறையில் ஒரு காதல்...

கிழித்தெறியப்பட்ட - என்
எதிர் காலப் பக்கங்களும்
கற்களாய் நிரப்பப்பட்ட - என்
இனிய வசந்தகால
பாதைகளுமாக - என்
வாழ்க்கை சிறைக்கம்பிகளுக்குள்
தினமும் கழிகின்றது...
ஏனோ... ஒன்றைத் தேட - அன்று
நாம் தோழர்கள் ஆனோம் - இருந்தும்
துரோகம், மற்றும்
பணம் என்பவற்றுக்காக
எம் இலட்சியங்கள்
ஏலத்திற்கு விடப்பட்டது ஏனோ...

ம்ம்..... எம் கனவுகள்
இலட்சியங்கள்
எல்லாமே
பழங்கதை ஆகியதையெண்ணி
என்றோ ஒரு நாள்
நினைத்து நினைத்து
அழுவாய் நீ.....
மனை புகுந்து - உன்
தங்கை தாவணி பிடித்து
பச்சைக் கழுதைகள் - உன்
தலைமேல் எச்சம் இடும்
போதும் எம்மை நினைப்பாய் - நீ.....
அதுவரை...
உங்கள் உரிமைகளை மறந்து
செல்போன்கள் மற்றும்
கவர்ச்சி ஆடைகள்
சகிதம் - கூடவே
நடு வீட்டுக்குள் நாய்களுக்கு
விருந்து அளித்து
களிப்புற்று இருங்கள்.

மணப்பிரியன்
பாடு/பல்லைக்கழகம்.

எப்போது வரும் சந்தர்ப்பம்?

முதல் கிழக்கு முதல்
முன்னி வாய்க்கால் வரை
மேதலைவனால் திட்டமிட்ட
சோக வடுக்கள் – இவைகள்
சுகமானவையல்ல!

நிரோக்கிய மற்ற
சிதைந்து முனையாயல்
பல்லாடு தொடுட்டு வாழ்ந்து வந்த
பல சிறகிய வாழ்விடங்கள்
பாழடைந்தே துயிர – சந்த
பயனு மல்ல!

விதி நிலைத்து
மொழியாமலிருந்து
எல்லையும் இந்த மண்ணில்
இயல்பு வாழ்க்கை திரும்ப
வாழவிடுங்கள் என்று
எப்போதும் இந்நாட்டில்
நியாயம் கேட்டு வரும்
தமிழ் மக்களுக்கு
ஒற்றோமாக வீடைக்க எப்போது
சந்தர்ப்பம் வருமோ?

சோனையூரான்
முரூர் கிழக்கு.

போதாமை

[illegible]

எஸ்.ஜ.எஸ். அஷ்ரப்
[illegible]

வாழ்வை தொலைத்து

[illegible]

[illegible]
[illegible]

என்னவனுக்கு

என் கனவுகளின்
கருவறை உன்
இதயம் என்று இருந்தேன்
ஆனால் இப்போது
தான் புரிகிறது
அது என் காதலின்
கல்லறை என்று...
அருகிலே நீ இருந்தும்
அநாதையாய் வாழுகிறேன்.

பிரியா
[illegible].

தொலையாத நினைவுகள்

பிரிந்து
இருந்தாலும்
மறந்து
இருப்போம்
பிரிவுகளை
மட்டுமே...!
நினைவுகளை
அல்ல.....!

க.[illegible]
[illegible].

எல்லாம் நீயே!

வானத்திலே சந்திரன் நீ
வையகத்தில் கடவுள் நீ
சொர்க்க லோகத்திலே சொக்கிலேட் நீ
பூலோகத்திலே பூச்செடி நீ
மரத்திலே தென்றல் நீ
மனிதப்பிறவியிலே மனைவாளன் நீ
கிணற்றுக்குள்ளே தண்ணீர் நீ
கிடைத்தற்கரிய தேவாமிர்தம் நீ
வீட்டுக்குள்ளே தலைவன் நீ
வீதியிலே ஊர்வலம் நீ
கோயிலிலே முலவிக்கிரகம் நீ
கோபுரத்திலே கலசம் நீ
வயிற்றிலே பசி நீ
வாயிலே தேனமுது நீ
இதயத்திலே கருப்பு நீ
அப்பா வழியில் என்னுயிர் நீ
என் மனதிலுள்ளே என்னுயிர் நீ....

கலைச்சிந்து
[illegible].

சிதைந்த வாழ்க்கை

மாறையாக இருந்த – என்
நெஞ்சத்தில்
கடல் அலை போல்
மோதும்
துன்ப அலைகளால்
தினம் தினம் என் வாழ்க்கை
சொல்லித்துப் போகிறது.
சொல்லித்த வாழ்க்கையைக் கூட
சொல்லமுடியா விடுதலைக்கவில்லை.

க.[illegible]
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசி பலன்

01.08.2012 - 07.08.2012

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

வீடு, வாகனத்தில் அவ்வப்போது பணி செய்வீர்கள். பிள்ளைகள் உடல் நலக்குறைவால் அவதிப்படுவர். எதிரி தொல்லை பெருமளவு குறையும். குடும்பவாழ்வு சீராக அமையும். நண்பரின் ஆலோசனை நன்மை தரும். பெண்கள் சக பணியாளர்களின் உதவியால் பணி இலக்கை அடைவர். நடைமுறைச் செலவு அதிகரித்தாலும் வருமானத்திற்குக் குறைவிருக்காது.

கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

புத்திரர்கள் சேர்க்கை சகவாசத்தைக் கவனித்து அவர்களை நல்வழி நடத்துவது அவசியம். மற்றவர்களின் வளர்ச்சியில் பங்குகொள்ளுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். தொழிலதிபர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு லாபத்தை அதிகரிப்பர்.

மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்

பழகியே சிலர் நன்மை செய்வது போல் நடித்து உங்கள் பொருட்களை அபகரிக்க முயற்சிப்பர். உடன் பிறந்தவர்களின் உதவி அவ்வப்போது கிடைக்கும். வெளியூர் பயணத்தால் அலுப்பு உண்டு. நிதானமும் பொறுமையும் மிகவும் அவசியம். பூர்வ சொத்தில் அளவான வருமானம் கிடைக்கும்.

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

குறிக்கோளை எட்டிப் பிடிப்பீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் நடந்து கொள்வீர்கள். தாராள பணவரவு கூடுதல் மூலதனமாக மாறும். பதவி உயர்வு, சலுகை கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். இளைய சகோதரர்களால் செலவு, அலைச்சல் அதிகரிக்கும். பூர்வசொத்தில் கிடைக்கிற வருமானத்திற்கு ஏற்ப புதிய செலவுகளும் ஏற்படும். கடன்கள் நிர்ப்பந்தம் தருவதால் சொத்தை விற்று அடைக்க வேண்டிய நிலை வரலாம். நண்பர்களிடம் பணம் கொடுக்கல், வாங்குதலில் நிதானம் வேண்டும்.

உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

வீடு, வாகனத்தில் இருக்கும் வசதி திருப்தி அளிக்கும். பூர்வ சொத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். உடல்நலக்குறைவால் சிகிச்சை தேவைப்படும். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். குறித்த காலத்தில் பணிகளைச் செய்து முடிப்பர். இழந்த பதவி கிடைக்கும். கால்நடை பயன் லாபமுண்டு.

சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

பணவரவு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் உங்களின் வாக்குறுதி தாமதமாவதால் கருத்து வேறுபாடு கொள்வர். புத்திரர்கள் விரும்பிய பொருளை உங்களிடம் சொல்லாமல் வாங்குவர். இதனால் குடும்பத்தில் குழப்பம் வரலாம். வழக்கு விவகாரங்களில் நல்ல தீர்வுபெறத் தாமதமாகும். வியாபாரிகள் குறைந்த லாபம் பெறுவர்.

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மனதில் புத்துணர்ச்சியும் செயலில் திறமையின் வெளிப்பாடும் நிறைந்திருக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. உடற்பயிற்சி, யோகா போன்ற விஷயங்களில் ஆர்வத்துடன் ஈடுபட வாய்ப்புண்டு. பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணிபுரிந்து புதிய சலுகை, சம்பள உயர்வு பெறுவர்.

மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

எதிலும் தேவையற்ற அச்சத்தால் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. வீடு, வாகனத்தில் இருக்கிற வசதியைக் காப்பாற்றினாலே போதுமானது. சொத்தின் பேரில் கடன் பெற்று குடும்பச்செலவுகளை சரிசெய்ய நேரிடும். தேவையற்ற வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு நிறைவேற்ற முடியாமல் அவதிப்படுவீர்கள்.

உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

பிறருக்கு வாக்கு சொல்வதைக் குறைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களை வீடு, வாகனத்தில் அனுமதிக்கக்கூடாது. இதெல்லாம் எங்கே நடக்கப் போகிறது என்று நம்பிக்கை இழக்க வைத்த செயல் எதிர்பாராத வகையில் வெற்றியாகும். அளவான பணவரவு உண்டு. கால்நடை வளர்ப்பில் லாபம் உண்டு.

அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், 1,2,3 ஆம் பாதங்கள்

உடன் பிறந்தவர்களுக்கு திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகள் தாமதமாகும். வீடு, வாகனத்தில் தேவையான பராமரிப்பு பணி செய்ய பணவசதி துணைநிற்கும். பூர்வசொத்தில் பெறுகிற பணவரவு குறையும். ஒருவர் நலனில் ஒருவர் அக்கறை கொள்வர். தேவையற்ற விவாதம் தவிர்க்க வேண்டும்.

பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

புத்திரர்கள் உங்கள் மனம் மகிழ்ச்சி பெறும் வகையில் நல்லவிதமாக நடந்துகொள்வர். தங்களின் வீடுகளில் பிறரை வாடகைக்கு குடியமர்த்துபவர்கள் யோசனையுடன் செயல்பட வேண்டும். நண்பர்களின் உதவி சரியான சமயத்தில் கை கொடுக்கும். தாராளமான பதவி உயர்வு, சலுகைகள் கிடைக்கும்.

காலமிது காலமிது கடமைசெய் மகனே!

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் நேரம் பொன்னானது என்பதை உணர வேண்டும். இதோ, காந்திஜியின் வாழ்வில் நடந்த சம்பவம்.

ஒரு பேராசிரியர் காந்திஜியை சந்திக்க ஆசிரமத்துக்கு வந்தார். அங்கே ஒரு முதியவர் பெருக்கிக் கொண்டிருந்தார்.

"நான் மகாத்மாஜியைப் பார்க்க வேண்டும். நான் வந்திருப்பதாகச் சொல்," என தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"ஐயா! காந்தி நேரப்படி நடப்பவர். தாங்கள் காத்திருங்கள். 11 மணிக்கு நிச்சயம் உங்களைச் சந்திப்பார்". என்றார் முதியவர்.

பேராசிரியருக்குக் கோபம் வந்து விட்டது. ஒரு வேலைக்காரன் இப்படி பேசுகிறானே! மேலும், பேராசிரியரான நானே காந்திஜியை மகாத்மா என்கிறேன். இவன் காந்தி என மரியாதைக் குறைவாக அவரைக் குறிப்பிடுகிறானே!

கோபத்துடன் அவர், ஏய்! நான் வந்திருப்பதை அவரிடம் சொல்லப்போகிறாயா இல்லையா? வீணாகக் காக்க வைக்காதே."

அப்போதும், அந்த முதியவர் பெருக்கியபடியே, "ஐயா! சற்று அமருங்கள். காந்தி நேரம் தவறாதவர். 11மணிக்கு நிச்சயம் சந்திப்பார்," பேராசிரியர் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார்.

நல்லவேளையாக அந்த நேரம் பார்த்து கடிகாரம் 11 மணியைக் காட்டியது.

பெருக்கிக் கொண்டிருந்த முதியவர், அவரை நோக்கி வந்தார்.

"ஐயா! சொல்லுங்கள், நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?"

"நான் சொன்னது உன் காதில் விழவில்லையா? காந்திஜியை சந்திக்க வேண்டும்,".

"நான் தான் அந்த காந்தி. உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்," என்றார்.

பேராசிரியர் அதிர்ந்து விட்டார். மகாத்மாவிடம் மன்னிப்பு கேட்டார். நேரம் தவறாமல் கடமையாற்றியவர் காந்திஜி. அதனால் தான் விலை ஒப்பிட முடியாத சுதந்திரக்கனியை நம்மிடம் பறித்துக் கொடுத்தார்.

இனியேனும் காலத்தை பொன் எனவும், கடமையைக் கண் எனவும் போற்றி வெற்றிக்கனிகளைப் பறிப்போமா!

போதிசத்துவர் என்ற மகான் ஏராளமான செல்வத்தை நண்பனிடம் வைத்திருந்தார். அதை ஏழை எளிய மக்களுக்கு கொடுத்து உதவுவதில் அவருக்கு பரமானந்தம்! இறைக்கிற கிணறு தான் ஊறும் என்பதற்கேற்ப, பரந்த மனப்பான்மையுள்ள தகுதி மிக்க இவரிடம் தர்மத்திற்குரிய பணத்தைக் கொடுத்தால், அது தகுதியானவர்களைச் சென்றடையும் என்ற நோக்கத்தில் தர்மவான்களும், பெரும் செல்வந்தர்களும் இவரிடம் பணத்தைக் கொடுக்க ஆரம்பித்தனர். இப்படியாக நான்கு கோடி பொற்காசுகள் அவரிடம் சேர்ந்துவிட்டன.

போதிசத்துவரைத் தேடி வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. ஒருநாள் போதிசத்துவர் காலமாகி விட்டார். மக்கள் பட்ட வருத்தத்திற்கு அளவேயில்லை. இருப்பினும், அவரது மகன் இதேபோல தானதர்மம் செய்பவர். தங்கள் கஷ்டங்கள் தீருமென நம்பினர். அவர்கள் அந்த மகனைத் தேடிச் சென்று உதவி கேட்டனர். அவனோ குடிகாரன். போதையில் உளறிக் கொண்டிருந்தான். அவனை எல்லாவோ கெஞ்சிப் பார்த்தனர். நண்பனைத் தேடி வந்தவர்களிடம், ஏனடா! ஏதோ கொடுத்து வைத்ததைப் போல கேட்கிறீர்களே! என் தகப்பனார் எனக்குத் தான் சொத்தை விட்டுச் சென்றுள்ளாரே தவிர, உங்களுக்கு வாரி வழங்க இல்லை. என் தகப்பனாரிடம் இதுவரை நீங்கள் அடிந்த கொள்ளை போதாதா? அப்பாவியான அவரை ஏமாற்றி நீங்கள் பணம் பெற்றீர்கள். ஆனால், உங்கள் பருப்பு என்னிடம் வேகாது," என்றே சொல்லி விரட்டினான்.

அது மட்டுமல்லாமல் தினமும் குடித்தும், குடியால் மதிமயங்கி பெண் பழக்கத்தில் சிக்கியும், தன் தந்தை சேர்த்து வைத்த சொத்து அனைத்தையும் இழந்த அவன், தெருவில் யாரும் கண்டு கொள்ளாதவனாய் பிச்சைக்காரனாய் திரிய ஆரம்பித்தான். தான் செய்த தர்மத்தால் சொர்க்கத்தில் தேவர்களுடன் அமர்ந்திருந்த போதிசத்துவர் தன் மகனின் இந்த அவலநிலை கண்டு அழுதார். அவரது கண்ணீரின் காரணத்தை அறிந்த தேவர்கள், "போதிசத்துவரே! உங்கள் தர்மம் உங்களைக் காப்பாற்றினாலும் உங்கள் பிள்ளையைக் காப்பாற்றவில்லையே என வருந்த வேண்டாம். அவரவர் முன் வினைப்பயன் காரணமாகத் தான் இந்த நிலை உண்டாகிறது. இருப்பினும், தங்கள் கண்ணீர் எங்களை வருத்துகிறது. நாங்கள் உங்கள் பிள்ளையின் கையில் ஒரு அட்சய பாத்திரம் ஒன்று கிடைக்கும்படி செய்கிறோம். அதில் இருந்து தேவையானதை எடுத்துக் கொண்டு நல்லபடியாக வாழ்வான்" என்றனர்.

போதிசத்துவர் மகிழ்ச்சி அடைந்தார். தேவர்கள் அவன் கண்ணில் படும்படி அட்சய பாத்திரத்தை வைத்தனர். அதைக் கையில் எடுத்தவுடன் போதிசத்துவரின் மகன் அதனுள் கையை விட்டபடியே, "இந்த பாத்திரம் நிறைய மது இருந்தால் எப்படி இருக்கும்?" என்று எண்ணினான். என்ன ஆச்சர்யம்! ஒரே நொடியில் பாத்திரம் முழுக்க மது நிறைந்து விட்டது. அவன் சந்தோஷமாக நிறைய குடித்தான். கவையான உணவுவகைகளை உண்ண நினைத்தான். நல்ல குதிரையான உணவுப்பண்டங்கள் அட்சய பாத்திரத்தில் நிரம்பின. இப்படியே, தினமும் நினைத்த நேரத்தில் குடிக்கவும், சாப்பிடவும் செய்தான். ஒரு நாள் குடிவெறியில் தள்ளாடினான். அவன் கையில் இருந்த பாத்திரம் தவறி விழுந்து நொறுங்கிப் போனது. மீண்டும் அவன் பிச்சை எடுக்கத் தொடங்கினான். விதி வலியது என்பதை போதி சத்துவர் உணர்ந்தார். குடிப்பழக்கம் நம் குடும்ப நற்பெயரை அழித்துவிடும் என்பதை மறவாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவானில் விபரீதம்

உண்மைச் சம்பவம்

வடமேற்கு ஓரியண்ட விமானக் கம்பெனிக்குச் சொந்தமான போயிங் - 707 ரக விமானம் அதுபுதிய கருவிகளையும் சொகுசு வசதிகளையும் அதிக இருக்கை வசதிகளையும் தன்னகத்தே கொண்ட ஜம்போ ஜெற்.

உலகின் அதிமுக்கிய பிரபலமான நாடுகளிலிருந்தாகத் தனது விமானப் பறப்பு சேவையினை மேற்கொண்டுவரும் விமானசேவை நிறுவனத்திற்குச் சொந்தமான அவ்விமானம் அன்றும் அமெரிக்காவில் இருந்து பறப்பட்டு மனிலா வழியாக டோக்கியோவிற்கான பறப்பில் ஈடுபட்டிருந்தது.

விமானத்தில் மொத்தத்தில் 253 பல்நாட்டைச் சேர்ந்த பயணிகளும், விமானச் சிப்பந்திகள் பதினொன்கு பேர்களும் அத்தருணத்தில் பயணித்துக் கொண்டிருந்தனர். பயணிகளில் ஆண்கள், பெண்கள் உட்பட மற்றும் ஐந்து வயதிற்குட்பட்ட பதின்மூன்று சிறுவர்களும் அடங்குவர்.

விமானப் பணிப்பெண்களில் ஜப்பானைச் சேர்ந்த மிக்கோசிகியும் ஒருவரு. அவள் நல்லனுபவமும் பயிற்சியும் பெற்றவள். முதலாம் வகுப்புப் பயணிகள் கூடத்தில் அமெரிக்க நாட்டைத் தாயகமாகக் கொண்ட உயரமான தோற்றத்தை உடைய ஹிப்பி ஒருவனும் இருக்கையில் அமர்ந்திருந்தான். அவனது சொக்காயின் கைப் பகுதி மடித்துவிடப்பட்டிருந்தது. 25 வயதான அவனின் பெயர் புருஸ்ரோச்.

ஜம்போ ஜெட் கடல்மீது முப்பதாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. பயணிகளிற் சிலர் தூங்கி வழிந்து கொண்டும், ஒருசிலர் சஞ்சிகைகளை வாசிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். விமான ஓட்டிகள் தமது கபினுக்குள் தமது கடமையில் அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். நேர அட்டவணையின்படி அவ்விமானம் இன்னும் நாற்பத்தைந்து நிமிடங்களில் டோக்கியோ விமானத் தளத்தில் தரையிறங்கவிருந்தது.

அச்சமயத்தில்தான் எவருமே எதிர்பாராத அச்சம்பவம் இடம்பெற்றது. வரிப்பியான புருஸ்ரோச் தன்வசமிருந்த கத்தியை உருவிக்கொண்டு அங்கே நின்றிருந்த விமானப் பணிப்பெண்ணான மிக்கோசிகியைப் பிடித்து இழுத்தான். அவளைப் பின்புறமாக அணைத்துக் கொண்டு முதல் வகுப்புப் பயணிகள் அமர்ந்திருந்த கூடத்திற்குள் சென்றான். அவளின் கழுத்திற்கு நேராகக் கத்தியை வைத்துக் கொண்டு "விமானத்தை மாஸ்கோவிற்குத் திருப்ப வேண்டும். இல்லையெட்டால் முதலில் நீ கொல்லப்படுவாய். பிறகு விமானம் நொறுங்கிக் கடலில் விழுந்து அனைவருமே சாக வேண்டியது தான்" என்று உரத்த குரலில் யாவருக்கும் கேட்கும் விதத்தில் மிரட்டினான்.

விமானப் பணிப்பெண்ணான மிக்கோசிகிக்கு விமானக் கடத்தல்கள் குறித்து நன்றாகத் தெரியும். அவள் விமானப் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்ந்ததுமே கடத்தல்கள் பற்றி அறிந்து வைத்துள்ளாள். இத்தகைய சந்தர்ப்பங்களில் மிகவும் பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்பட வேண்டுமென அவளுக்குப் பயிற்சிக் காலத்தில் புகட்டப்பட்டிருந்தது. புருஸ்ரோச்சின் கையிலிருந்த கத்தி அவளது கழுத்திற்கு நேராகக் குறுக்கு வசமாக உரசியபடி அச்சுறுத்திக் கொண்டிருந்தது.

தூக்கத்திலிருந்த மற்றும் வாசிப்பில் லயித்திருந்த பயணிகள் அத்தனை பேரும் திடுக்கிட்ட நிலையில் என்ன செய்வதென்றறியாத வகையில் பிரம்மை பிடித்தவர்கள் போல அமைதியற்று இருந்தனர். ஒருசிலர் தமக்கு முடிவுகாலம் வந்துவிட்டது என்ற அச்சத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டு தத்தமது இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்தனர்.

விமானத்தில் இருந்த பயணிகளில் வில்லியம் ஒருவனாக இருந்தான். 36 வயதான அவன் அமெரிக்கக் கடற்படையில் பணிபுரிந்தவன். தி ஸாத்திமாலவைச் சேர்ந்தவன். டோக்கியோவுக்குத் தனிப்பட்ட ஒரு விடயமாகப் பயணத்தை மேற்கொண்டிருந்தான். முரட்டுக் குணமுள்ள அவன் தான் முதன்முதலில் விமானம் கடத்தப்படுவதை உணர்ந்தவன். அவன் விபரமேதும் தெரியாதவன் போல அமைதியாக இருந்தான். சிறிது அசைந்தாலும் விவகாரம் மோசமாகிவிடும் என்று ஏதோ சலனமாக இருப்பது போல தனது முகத்தை வைத்துக் கொண்டான்.

ஒருவேளையில் கடத்தல்காரன் விமானத்தில் வெடிகுண்டு வைத்திருந்தால் அல்லது ஏதாவது தகராறு ஏற்படினும் விமானம் வெடித்துக் கடலில் விழ வேண்டியதுதான். அதில் பயணம் செய்பவர்கள் அனைவருக்கும் கடலே கல்லறையாகி விடும் என்பதை அவன் நன்குணர்ந்தான்.

கடத்தல்காரன் விமானப் பணிப் பெண்ணைப் பிடித்துக் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதைக் கண்ணுற்ற வில்லியத்திற்கு ஆத்திரம் மேலிட்டது. எனினும் அடக்கிக் கொண்டு அவனைப் பார்த்தும் புன்முறுவல் செய்தான். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து மனதினுள் திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்தான்.

விமானிகளும் பயணிகள் கூடத்தில் நடப்பதைக் கண்டு அதிர்ந்து போயினர். ஆயினும் தன்னை முன்னெச்சரிக்கையும் எக்க இயலாத நிலையில் விமானக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கும் அவர்களது ஆலோசனையைப் பெறுவதற்குமாக முயற்சித்த வண்ணமிருந்தனர்.

விமானிகளும் பயணிகள் கூடத்தில் நடப்பதைக் கண்டு அதிர்ந்து போயினர். ஆயினும் தன்னை முன்னெச்சரிக்கையும் எக்க இயலாத நிலையில் விமானக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கும் அவர்களது ஆலோசனையைப் பெறுவதற்குமாக முயற்சித்த வண்ணமிருந்தனர்.

தவறுசெய்பவர்களிடம் அவர்களுடைய மனப் போக்கைக் கெட்டும் விதத்தில் கூறினால் மகிழ்ச்சியடைவார்கள் என்று எங்கோ வில்லியம் படித்தது அவனின் ஞாபகத்திற்கு வந்தது. அதை இப்போது பயன்படுத்தும் நோக்கில் கடத்தல்காரனைப் பார்த்து "புத்திசாலிதான். அவனை ஒருவாறு இங்கே கொண்டு வந்துவிட்டாய். கெட்டிக்காரன்" என்றான்.

வில்லியத்தின் புகழ்ச்சிக்கு புருஸ்ரோச் மசியவில்லை. அவன் மிக்கோசிகியை நெருக்கமாக அணைத்துக் கொண்டு கத்தியை அவள் கழுத்துக்கு நேராக நீட்டி "விமானத்தை மாஸ்கோவிற்குத் திருப்ப வேண்டும். ஸைக்... இருக்குமிடத்திற்கு என்னை அழைத்துப் போ" என மிரட்டினான். திரும்பவும் கடும் சினத்துடன் பொறுமையிழந்தவனாக.

வில்லியம் பதற்றமடையாதவனாக "நீ அமைதியாக இருந்தால் விமானி நீ சொல்கிறபடி விமானத்தை மாஸ்கோவுக்குத் திருப்புவான். நான் அவனிடம் சென்று சொல்கிறேன்" என்றான் பவ்வியமாக.

வில்லியம் விமானிகளின் கபனுக்குச் சென்றான். "கடவுளுக்காக அவனை இங்கே வர அனுமதிக்காதீர்கள். டோக்கியோவுடன் தொடர்பை ஏற்படுத்தி விபரம் அறிகிறேன்" என்று வில்லியத்திடம் சொன்னான் விமானி.

கடத்தல்காரன் நிற்குமிடத்திற்கு திரும்பிவந்தான் வில்லியம். இப்போது அவன் அணிந்திருந்த பான்டின் பையினுள்ளே விமானிகளின் கபினுள் கையிலகப்பட்ட ஓர் சிறு இரும்புச் சுட்டியல் இருந்தது.

கடற்படையில் அவனுக்கு ஆபத்தான சமயங்களில் பாதுகாத்துக் கொள்வதற்காக மனிதர்களைக் கொல்லவும் கற்றுத் தந்திருந்தனர். அவனால் இப்போது ஒருவனைக் கொல்லவும் முடியும். திடீரென வில்லியத்திற்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. "பைலட் உன்னைச் சந்திக்க விரும்புகிறார். உன்னை மாஸ்கோவுக்கு அழைத்துச் செல்ல அவர் தயார்தான். ஆனால் நீ எங்களை அங்கே வைத்து ஒன்றும் செய்யாமல் விடுவாயா? இதனைத் தெரிந்து கொள்ளத்தான் உன்னை அழைக்கிறார்" எனக் கூறினான்.

கடத்தல்காரன் மிக்கோசிகியுடன் பைலட்டின் அறைக்குச் செல்வதற்காகத் திரும்பினான். அந்தச் சந்தர்ப்பத்தைத்தான் வில்லியம் எதிர்பார்த்திருந்தான். கடத்தல்காரன் திரும்பியது தான் தாமதம் ஓர் விநாடியும் வீணாக்காது அவன் தலையின் மீது எடுத்துவந்த சுட்டியலால் முழுப் பலத்தையும் பிரயோகித்து ஓங்கி அடித்தான். மறுவிநாடி புருஸ்ரோச் மண்டை உடைந்து இரத்தம் பெருகக் கீழே சாய்ந்தான்.

அவன் பிடியிலிருந்து விடுபட்ட மிக்கோசிகி வில்லியம் அருகில் வந்தாள். அவன் கையில் சுட்டியல் இருப்பதைக் கண்டு அஞ்சினாள். அவளை ஒருபுறமாகத் தள்ளிவிட்டு வில்லியம் மீண்டும் சுட்டியலை உயர்த்தினான்.

மண்டையில் பலமான அடிபட்டிருந்தும் கடத்தல்காரன் சுயஉணர்வை இழக்கவில்லை. வில்லியம் மீண்டும் தன்னைத் தாக்கச் சுட்டியலை ஓங்குவதைக் கண்டதும் "அடிக்காதே என்னைக் கொன்று விடாதே நான் சரணடைந்துவிடுகிறேன்" என அலறினான்.

விமானம் டோக்கியோ விமானத்தளத்தை அடையும் சமயம் கடத்தல்காரரின் கை, கால்கள் கட்டுப்பட்டுவிட்டன. ஜப்பானியப் பொலிசார் விமானத்தைச் சூழ்ந்துகொண்டனர்.

நடந்தவை யாவற்றையும் வில்லியம் சகலருக்கும் விவரித்துக் கூறினான். புருஸ்ரோச் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டான். அனைத்துப் பயணிகளும் வில்லியத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

தமிழ் - ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறாண்டு வாழ்வது எப்படி

இவுதின் பல பகுதிகளில் நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆரோக்கியமாய், துடிப்புடன் வாழும் மனிதர்கள் சராசரிக்கும் அதிகமான தொகைகளில் காணப்படுகிறார்கள். அவர்கள் மனத்தளவில் தளரவில்லை. அவர்கள் நினைவு துல்லியமாய், தெளிவாய் இருக்கிறது.

இது எப்படி?

1. நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்பவர்கள் குறைவான கலோரி கொண்ட உணவு வகைகளைச் சாப்பிடுகின்றனர். ஒவ்வொரு பிரிவினரின் கலோரி உட்கொள்ளும் தன்மை மாறுபடுகிறது. ஆனால் சராசரியாக தினசரி 1200 முதல் 1900 கலோரிகள் போதும். அமெரிக்க, ஐக்கிய நாடுகளிலோ தினசரி உட்கொள்வது 3300 கலோரிகளாகும். நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்பவர்கள் யாரும் நோயாளிகள் கிடையாது. அவர்கள் எடை அதிகமானவர்களும் இல்லை, அதே நேரம் ஊட்டக் குறைவினால் அவதிப்படுபவர்களும் இல்லை. ஏனெனில் அவர்கள் தோற்றம், உடல் ஆரோக்கியம், துடிப்பு, வலு இவை சராசரிக்கும் மேற்பட்டவை.

2. நூறு ஆண்டுகள் வாழ்பவர்கள் புரதச் சத்து அதிகம் உள்ளவர்கள். கொழுப்புச்சத்தை குறைவாகவே சேர்க்கின்றனர்.

3. நூறு ஆண்டுகள் வாழ்பவர்கள் தினசரி உடற்பயிற்சி செய்கின்றனர்.

4. நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்பவர்கள் தாம் அப்படி வாழ்வோம் என்று **எதிர்பார்க்கின்றனர்.**

அவர்கள் வாழ்க்கையை இயல்பாகக் கவலையோடு தத்துடனேயே அணுகுகின்றனர். அவர்கள் எழுபது வயதிலும் இளைஞர்களாக உலவுகின்றனர். தாம் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்வோம் என்று அவர்கள் கலப்பமாய் நம்புகிறார்கள். நூறு ஆண்டுகள் வாழ்வதை, அவர்கள் சுலபமான, இயற்கையான எதிர்பார்ப்பாகக் கருதுகின்றனர்.

நம் தினசரி நடவடிக்கைகளிலும் முக்கியமாக நம் வாழ்க்கை இலட்சியத்தை அடைவதிலும் நமக்கு உதவக் கூடிய ஒரு செய்தி இங்குள்ளது.

அதுதான் எதிர்பார்ப்பு விதி. நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்பவர்கள், தாம் அப்படி வாழ்வோம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எதிர்பார்ப்பு விதி நமது ஆயுட்காலத்தைத் தீர்மானிப்பதில் கூட செயல்படுவது ஆச்சரியமான சங்கதி. மற்ற விஷயங்களும் இதில் அடங்கி உள்ளன. ஆனால் சீக்கிரம் நாம் இறந்து விடுவோம் என்று எதிர்பார்ப்பவர்கள் அவ்வாறே இறந்து போகிறார்கள். மிகச் சீக்கிரமாக உடனே இறக்க நினைப்பவர்கள் (மனநிலை சம்பந்தப்பட்ட அநேக காரணங்களுக்காக) அவ்வாறே இறந்து போகிறார்கள்.

ஒரு பலம் வாய்ந்த தொடர்ச்சியைக் கவனியுங்கள்:

1. விருப்பம், 2.நம்பிக்கை, 3.எதிர்பார்ப்பு

வாழ்வு, சாவு இவற்றின் மீது கூட இந்தக் காரணங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

நம் கை வசமில்லாத வாழ்வையும் சாவையும் நாம் நமக்கு மேலுள்ள அதிகாரியிடம் ஒப்படைத்து விடுகிறோம்.

வாழ்க்கை விதிகள் பற்றிய மூன்று மந்திரங்களின் மீது நாம் கவனம் செலுத்துவோம்.

1. விருப்பம் என்னும் விதி
2. நம்பிக்கை என்னும் விதி
3. எதிர்பார்ப்பு என்னும் விதி

வாழ்க்கை இலட்சியத்தை அடைய இவற்றை நாம் கடைப்பிடிப்போம்.

இந்த மூன்று விதிகளும் மந்திரம் போல் செயல்பட்டு நம் வாழ்வின் இலட்சியங்களை அடையத் நமக்கு உதவக் கூடியவை.

எப்படி இவற்றைப் பயன்படுத்துவது?

1. நமது வாழ்க்கையின் இலட்சியத்தை அறிந்து நீங்கள் மிகத் தீவிரமாக விரும்ப வேண்டும்.

2. உங்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை அடைந்தே தீருவோம் என்ற நம்பிக்கை உங்களிடத்தில் ஆழமாக இருக்க வேண்டும்.

3. இலட்சியத்தை அடைந்தே தீருவோம் என்று நீங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்க வேண்டும்.

நமது வாழ்க்கையின் ஆயுட் காலத்தை தீர்மானிப்பதில் கூட இந்த மூன்று மந்திர விதிகளும் உதவுகின்றன.

இந்த மூன்று மந்திர விதிகளும் நமது வாழ்க்கையின் தரத்தை உயர்த்துகின்றன. நம் இலட்சியங்களை அடைய நமக்கு உதவுகின்றன.

உங்களுக்கு உதவும் மூன்று 'ந' முறைகள்!

நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்து உங்களை பிரபலமாக்கும், வெற்றி தரும், மகிழ்ச்சி அளிக்கும்.

நீங்கள் பிரசித்தி அடைய விரும்பினால் மக்கள் மத்தியிலேயே பிரசித்தி பெற வேண்டும். அதுதான் உண்மையான பிரபலம்.

நீங்கள் வெற்றியடைய விரும்பினால் மக்களிடம் நீங்கள் வெற்றி பெற வேண்டும். நீங்கள் தனியாக ஒரு இடத்தில் பூமியைத் தோண்டி தங்கம் கண்டுபிடித்தாலும் மக்கள் தான் அந்த தங்கத்தின் மதிப்பைத் தீர்மானிக்கப் போகிறார்கள். விலை கொடுத்து அதை வாங்கப் போகிறார்கள்.

வியாபாரத்திலும் மற்ற உங்கள் எல்லா முயற்சிகளிலும் மக்களின் எதிர்கொள்ளலே உங்கள் வெற்றியை நிர்ணயிக்கும். உங்களை வெற்றிப் படிகளில் ஏற்றப் போகிறவர்கள் பிற மனிதர்களே. உங்கள் பலவீனங்களை நீங்கள் குறைத்துக் கொண்டு மற்றவர்கள் உங்களைத் தூக்கிவிட நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்.

நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க விரும்பினால் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். தனிப்பட்ட மகிழ்ச்சி ஆழமற்றது; பூரண திருப்தி அளிக்காது. அப்படி மகிழ்ச்சி அடைந்ததாகச் சொல்லிக் கொள்பவர்களைக் கேட்டுப் பாருங்கள்.

பிற மனிதர்களின் சுகதுக்கமும் அவர்கள் நேசமுமே உங்களுக்கு முழுத் திருப்தி தரும்; மகிழ்ச்சியை அளிக்கும்.

மனிதர்கள் மத்தியில் பிரபலமாக, வெற்றி அடைய, மகிழ்ச்சி அடைய வழிகளை இந்த அத்தியாயம் உங்களுக்குச் சொல்லித் தரும்.

'ந' என்ற எழுத்தில் தொடங்கும் மூன்று குணங்களை நீங்கள் போற்றிப் பின்பற்ற வேண்டும்.

அந்த மூன்று 'ந'க்கள் இங்கு தரப்படுகின்றன. பிறருடன் நேரில் பழகும் போது, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது, பிறருக்குக் கடிதம் எழுதும் போது நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று வழி முறைகள்.

1. எப்பொழுதும் நன்றி சொல்லுங்கள். இது மிகச் சுலபம். தொடர்ந்து பழக்கத்திற்கு கொண்டு வந்து விடலாம். பிறர் உங்களிடம் பேச நேரம் ஒதுக்கினால், உங்கள் கடிதத்தைப் படித்துப் பார்க்க ஒப்புக் கொண்டால் உங்கள் சிறு தேவையைப் பூர்த்தி செய்தால் எதற்கும் நீங்கள் நன்றி சொல்வதைப் பழகிக் கொள்ளுங்கள். பின்னால் பெரிய விஷயங்களுக்கும் இது உதவும். எப்பொழுதும் நன்றி சொல்பவராக உங்களைப் பிறர் அறியட்டும்.

மனிதர்கள் அடி மனத்தில் பிறரால் பாராட்டப்படுவதை விரும்புகிறார்கள். நீங்கள் நன்றி சொல்லும் போது அவர்களின் உள்மனத் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே இது நடைமுறையாகும் போது நன்றி, ஆழமான, நிரந்தரமான பலனைத் தருகிறது.

2. எப்பொழுதும் நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்துங்கள். உங்கள் நல்லெண்ணத்தை உங்கள் நண்பர்களோ, ஏன் குடும்பத்தினரோ கூட அவர்களாகவே புரிந்து கொள்வார்கள் என்று விட்டு விடாதீர்கள். அவர்களிடம் உங்கள் நல்லெண்ணத்தைச் சொற்களால் தெரியப்படுத்துங்கள். செயல் வடிவமாக நல்லெண்ணத்தை அடிக்கடி எடுத்துக் காட்டுவதும் அவசியம். ஒவ்வொரு வாய்ப்புக் கிடைக்கும் போதும் சொல்லிக் காட்டுவது அதைவிட முக்கியம்.

உங்களைச் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபரிடமும், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபரிடமும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துங்கள். அது உங்கள் வாழ்க்கையில் மந்திரம் போல் உதவும்.

3. எப்பொழுதும் நன்றி சொல்லுங்கள்

1. எப்பொழுதும் நன்றி தெரிவியுங்கள்.

2.எப்பொழுதும் நல்லெண்ணத்தைத் தெரியப் படுத்துங்கள்.

3.எப்பொழுதும் நல்வாழ்த்துகள் கூறிய வண்ணம் இருங்கள்.

இது உங்களைப் பணக்காரராக்கும். சிலர் நிறைய வியாபார முயற்சிகளைக் கை தவற விடுகின்றனர். ஏனென்றால், எப்பொழுதும் நன்றி சொல்லல், நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்த, நல்வாழ்த்து கூறத் தவறிய தால்தான். சரியான நேரங்களில், சரியான நபர்களுக்குச் சரியான சந்தர்ப்பங்களில் இவற்றைக் கூறியிருந்ததால் அவர்கள் எப்போதோ பணக்காரராகி இருப்பார்கள்.

இது சிறிய விஷயமன்று; மிக முக்கியமான பெரிய விஷயம்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நபரிடமும் நீங்கள், நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் இவற்றைத் தெரியப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து செய்யும்போது இது நல்ல பழக்கமாகும். உங்கள் ஆளுமைக்கு மெருகூட்டும். உங்கள் வாழ்நாள் பூராவும் நீங்கள் பிரபலமாக, வெற்றியடைய, மகிழ்ச்சி பெற வழிவகுக்கும்.

நீங்கள் எல்லா நபர்களிடமும், நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் சொல்லும் போது எல்லாரிடமும் மகிழ்ச்சியைப் பரப்புகிறீர்கள். உங்களுக்கு ஆதாயம் விளைவிக்காத நபர்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அவரவர் கருதாமல் நீங்கள் இந்த நல்ல பழக்கத்தை மேற்கொள்ளும் போது பலன்கள் தானே வந்து அமையும்.

நீங்கள் விதைப்பது எதுவோ அதையே அறுவடை செய்யக் கடவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலினால் காட்சியளிக்கும் உலக அதிசயங்கள்

கொலம்பியாவின் தலைநகரமான பொகோட்டாவில் உலக அதிசயங்கள் மணலினால் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மணல் சிற்பங்களுக்காக 32,300 சதுர அடி நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பங்களை அமைத்துள்ளனர்.

கேப் பேர்பச்சுவா கிணறு

6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இக் கிணறு தற்பொழுது சுற்றுலா பிரியர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தக் கிணறு அமெரிக்காவில் காணப்படுவதுடன் கடலோடு இணைந்திருப்பது சிறப்பாகும்.



500 இற்கும் மேற்பட்ட கொடூரமான தோற்றத்தைக் கொண்ட பொம்மைகளுடன் வாழும் பெண்!

ஒரு விசித்திரமான பொம்மைசேகரிப்பாளர் 500 இற்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் குழந்தைகளுடன் வாழ்கையை நடத்திவருகிறார். தினமும் அவற்றை குளிக்கவார்ப்பது, தலை சீவுவது, அழகுபடுத்துவது என்று முழு நாளையும் இதனுடன் செலவழிக்கிறார். 33 வயதான Marilyn Mansfield தனக்கு இதுபோன்ற உயிரற்ற பொம்மைகளுடன் வாழ்வது மன திருப்தியை அளிப்பதாகச் சொல்கிறார். ஒரு புறம் இப்படியிருந்தாலும் மறுபுறம் இவரின் சேகரிப்பு சற்றுத் திகிலானது. ஆங்கிலப்படங்களில் வருவது போன்ற கொடூரமான தோற்றத்தைக் கொண்ட பொம்மைகளையும் இவர் தயாரித்து வருகிறார். இரத்தம் கசியும் வாய்களுடன் உண்மைத்தன்மையை பிரதிபலிப்பவையாக இவை அமைந்துள்ளன.

மூன்று மாடி அடுக்குகளைக் கொண்ட இவரது வீட்டில் தனியாக வாழும் இப்பெண்மணி வீடு முழுவதும் தனது சேகரிப்பை நிறைத்து வைத்திருக்கிறார், இவற்றின் பெறுமதி சில ஆயிரங்கள் டொலர்ஸ்.

சிறுவயதில் இருந்தே horror movies எனப்படும் திகில் படங்களையே பார்த்து வந்ததால் தனக்கு மாறுபட்ட தோற்றங்களையுடைய பொம்மைகள் மீது ஈடுபாடு காணப்படுவதாகவும் சொல்கிறார்.

இவற்றைத் தயாரிப்பது மட்டுமல்லாமல் விற்பனையும் செய்து வருகிறார். கொடூரமான தோற்றங்களையுடைய பொம்மைகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாக கூறப்படுகிறது.

2012ஆம் ஆண்டுக் கான மாயாஜால சித்திரக் கண்காட்சி



சீனாவில் உள்ள ஹங்சுவா சமாதான சர்வதேச கண்காட்சி மண்டபத்தில் இந்த சித்திரக் கண்காட்சி இடம்பெற்றது. பல் முப்பரிமான நுட்பத்துடன் இவை வரையப்பட்டுள்ளன.

சாக்குப் பைகளின் மூலம் 'நவீன ஆடைகள்'

சீனாவைச் சேர்ந்த பெண்ணொருவர் சாக்குப் பைகளினால் நவீன ஆடைகளை வடிவமைத்துள்ளார்.

ஷான்ஸி மாகாணத்தைச் சேர்ந்த சென் எனும் இப் பெண், சாக்குப் பைகளால் தயாரிக்கப்பட்ட தனது ஆடை வடிவமைப்புகளுடன் அண்மையில் ஊடகங்களுக்கு போஸ் கொடுத்தார்.

மக்கள் எளிமையான வாழ்க்கை முறைக்குத் திரும்ப வேண்டுமென தான் விரும்புவதாக அப்பெண் கூறினார்.

எனினும், சாக்குப் பைகளால் தயாரிக்கப்பட்ட இந்த ஆடைகள் அதிகமானோரைக் கவரவில்லை.

அப்பெண்ணுக்காக நான் கவலையடைகிறேன். அவருக்கு ஒழுங்கான ஆடைகளை வாங்குவதற்கு பணமில்லை என்றே நான் எண்ணுகிறேன் என ஒருவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷூட்டிங்கில் பிளாஸ்டிக் பயன்படுத்தத் தடை

தமிழ் பட ஷூட்டிங்கில் பிளாஸ்டிக் பயன்படுத்தக் கூடாது என்று திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பை உள்ளிட்ட வற்றை கடைகளில் விற்க சென்னை மாநகராட்சி தடை விதித்துள்ளது. ஆனாலும் படப்பிடிப்புக்களின் போது பிளாஸ்டிக் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் படப்பிடிப்புத் தளத்தில் பிளாஸ்டிக் பயன்படுத்தக்கூடாது, குப்பை போடக்கூடாது என்று இயக்குநர் வசந்த் கட்டுப்பாடு விதித்திருக்கிறார்.

இயக்குநருக்கு உதவிய வெங்காரா நடிகை

திருநல்லான் பிலிம்ஸ் தயாரிக்கும் படம் 'என் பெயர் குமாரசாமி'. ராம், வங்காள நடிகை தேவ்தா இராவதி, ராதாரவி, பானுப்ரியா உட்பட பலர் நடிக்கின்றனர். இந்தப் படத்துக்கு பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டபோது ஹீரோயின் பணம் கொடுத்து உதவியதாக, இயக்குநர் ரதன் சந்திரசேகர் கூறினார்.

தமிழில் இயக்குநராகும் இந்தி எடிட்டர்

இந்திப் படங்களுக்கு எடிட்டராக பணிபுரிந்த ரஞ்சித் போஸ், 'மடிசார் மாமி' படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இது கொமெடிப் படம். நல்ல மெசேஜும் படத்தில் இருக்கிறது. மிதுன், ரிஷி, மான்சி, புனீத் உட்பட பலர் நடித்துள்ளனர்.

படவிழாவில் நடிகை சாரா மீது கல்வீச்சு: உதடு கிழிந்தது

முன்னாள் இந்திய அழகியும், நடிகையுமான சாரா ஜேன் தியாஸ் மீது பரிதாபாத்தில் நடந்த படவிழாவின்போது மர்மநபர் ஒருவர் கல்வீசித் தாக்கினார். இதில் அவரது உதடு கிழிந்தது. தீராத விளையாட்டுப் பிள்ளை' படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகமான நடிகை சாரா ஜேன்.

கால்கட்டு இ

இந்த முறை பரபரப்பு அல்ல.. வீட்டைப் பற்றி இருக்கிறது. வீட்டிற்குள் படிக்கட்டுகள் இ அனைத்துமே வி பட்டவையாம். ஒவ் வீட்டிற்கும் வரும் வி பார்த்தே பி

கோடீஸ்வரரா பேட்மேன் மு இரண்டு பாகங்களி தொடர்ந்து மக்களை காக்க நடத்திய போர் டத்தில் தனது சொத் களை இழந்து மீதமு சொத்துக்களைக் கொ அநாதை இல்லம், வியல் ஆயுத ஆராய்ச் கிறார். போலிஸ் க சாவுக்கு பேட்மேன் சொல்ல, கவலை அ செயல்பாட்டிலிருந்து நிலையில் ஒரு வில்ல குடும்பத்துப் பெண்ணை கடத்துகிறது போலிஸ் அடைக் அகிறது. அ கத்தில் வளரும் அந்தப் தைக்கு அபரீத சக்தி பிக்கிறது. பின்னர் வள தையை நாடுகடத்தி, யில் அடைத்த போ வாங்கி நகரையே அ மிடுகிறாள். அதற்கா தன்னை வளர்த்தவரை கொள்கிறாள்.

அரசுக்கும் போலீசுக் படை திரட்டுகிறாள். வந்து காப்பாற்றிவிடக் தால் அவரின் கைரே ஷேர் மார்க்கெட்டில் கு சிக்கலில் சிக்க வைத் நியூக்ளியர் குண்டும் உ

வில்லன் கூட்டம். பே லிருந்து பேட்மேன் தப் பது மீதிக் கதை.

வழக்கமான ஆக்ஷ மென்டும் கலந்திருக்கி பேட்மேன் வீட்டுக்குள் மீறி போராடித் தோற்ப யம் வைப்பது என்று அ சிலர் கொடூரமாகத் தா கொண்டு வருகிறான் எ வில்லியாக மாறி நிற்ப நேரத்தில் நாட்டைக் கா

நகரத்தை தொடர் குள் புதைப்பது, நகரத் தகர்ப்பது என்று காட்சி பதிவும், பின்னணி இ கொஞ்சம் பலவீனமாகத்

டுவிட்டர், பேஸ்புக்கில் நான் இல்லை

சமூக வலைத்தளங்களில் நான் இணையவில்லை. ஆனால், எனது பெயரில் பல கணக்குகள் டுவிட்டரில் காணக் கிடைக்கிறது. எனது படங்களை வெளியிட்டு நான் செல்கிற விழாக்களின் படங்களையும் வெளியிட்டு நானே அப்டேட் செய்வதைப் போல சிலர் மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர். இது வருத்தமாக இருக்கிறது என்கிறார் அசின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாண்டவம்' ஆட விருப்பமா?

ரிவி நிகழ்ச்சிகளில் பங்கேற்று நடனம் ஆடியவர்களாக இருந்தால், thaandavam2012gmail.com என்ற ஈமெயிலுக்கு உங்களைப் பற்றிய தகவல்களை அனுப்பி வையுங்கள். அதில் இருந்து தேர்வாகும் 5 முதல் 6 நபர்களுக்கு 'தாண்டவம்' இசை வெளியீட்டு விழாவில் நடனமாட வாய்ப்பு அளிக்கப்படும். ஒகஸ்ட் 15 ஆம் திகதி இந்த நிகழ்வு சென்னையில் நடைபெறவிருக்கின்றது.

...கட்டு இல்லை.. படிக்கட்டு! த்ரிஷா :

...முறை பரபரப்பு திரிஷாவின் கல்யாணத்தைப் பற்றி ...வீட்டைப் பற்றித் தான் கொலிவுட்டில் ஒரே பேச்சாக ...றது. வீட்டிற்குள் த்ரிஷாவின் அறைக்குச் செல்ல 13 ...டிக்கட்டுகள் இருக்கின்றன. அப்படிக்கட்டுகள் ...னைத்துமே விலையுயர்ந்த மார்பிளில் செய்யப் ...டவையாம். ஒவ்வொன்றும் 2 லட்சமாம். அவரது ...கும் வரும் விருந்தாளிகள் எல்லாம் படிக்கட்டைப் பார்த்தே பிரமித்துப் போகிறார்களாம்.

வெற்றி தோல்வி என் கையில் இல்லை

தெலுங்கில் நான் நடித்த 'கப்பார் சிங்' பெரிய வெற்றிபெற்றுள்ளது. இது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் படங்களின் வெற்றி தோல்வி என்பது என் கையில் இல்லை. வாய்ப்பு வரும்போது எனது கேரக்டரை எப்படி சிறப்பாகச் செய்யலாம் என்றுதான் பார்க்கிறேன் என்கிறார் ஸ்ருதிஹாசன்.

விமர்சனம்

...Iடீஸ்வரரான ...மேன் முதல் ...டு பாகங்களில் ...ந்து மக்களைக் ...நடத்திய போராட் ... தனது சொத்துக் ...இழந்து மீதமுள்ள ...க்களைக் கொண்டு ...த இல்லம், அறி ...ஆயுத ஆராய்ச்சிக் கூடம் நடத்தி வரு ... போலிஸ் கமிஷனர் தன் மகன் ...ந் பேட்மேன்தான் காரணம் என்று ..., கவலை அடைந்து தனது ஆக்ஷன் ...ாட்டிலிருந்து விலகி வசிக்கிறார். இந் ...ில் ஒரு வில்லன் கூட்டம், அவரது நகருக்கு வருகிறது. நகரின் அரச ...த்துப் பெண்ணை காதலித்த குற்றத்துக்காக ஒரு போர் வீரனை நாடு ...கிறது போலிஸ். அந்தக் கர்ப்பிணிப் பெண்ணை பாதாள சிறையில் ... அகிறது. அங்கு அவளுக்குப் பெண் குழந்தை பிறக்கிறது. சிறை நர ... வளரும் அந்தப் பெண் குழந் ... அபரீத சக்தி கிடைத்து தப் ...து. பின்னர் வளர்ந்து தன் தந் ... நாடுகடத்தி, தாயை சிறை ...அடைத்த போலிசை பழி ... நகரையே அழிக்கத் திட்ட ...ாள். அதற்காக சிறையில் ...ா வளர்த்தவரை அழைத்துக் ...கிறாள்.

...சுக்கும் போலீசுக்கும் எதிராகப் ... திரட்டுகிறாள். பேட்மேன் ...காப்பாற்றிவிடக்கூடும் என்ப ...வரின் கைரேகையை திருடி, ...ார்க்கெட்டில் குழப்பம் ஏற்படுத்துகிறாள். இதன் மூலம் பேட்மேனை பொருளா தார ...ல் சிக்க வைத்து, அவரின் ஆயுத கிடங்கையும் கைப்பற்றுகிறார்கள். அதில் ஒரு ...ியர் குண்டும் உண்டு. அதைக் கொண்டு நகரை நாசமாக்க முடிவு செய்கிறது ...லன் கூட்டம். பேட்மேனை கைது செய்து பாதாள சிறையில் அடைக்கிறது. அதி ... பேட்மேன் தப்பி வில்லன்களிடமிருந்து நகரை எப்படிக் காப்பாற்றுகிறார் என் ...க் கதை.

...கமான ஆக்ஷன் நிறைந்த படம்தான் என்றாலும் இதில் கொஞ்சம் சென்டி ...ம் கலந்திருக்கிறார் இயக்குநர். போலிஸ் அதிகாரியால் பழி சுமத்தப்படும் ...ன் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது, மக்களை காப்பாற்ற தன் சக்திக்கு ...ாராடித் தோற்பது, பின்னர் பாதாள சிறையில் இருந்து தப்பிக்க உயிரைப் பண ...ப்பது என்று ஆக்ஷனுடன் சென்டிமென்டும் ஈர்க்கிறது. சிறையில் வில்லனை ... காடூரமாகத் தாக்கி முகத்தை சிதைப்பதால்தான் அவன் மூகமூடி போட்டுக் ...டு வருகிறான் என்பதும், பேட்மேனுக்கு உதவும் பெண்ணே, கடைசி நேரத்தில் ...பாக மாறி நிற்பதும், பணத்துக்காக எதையும் செய்யும் திருட்டுப் பெண் கடைசி ...ல் நாட்டைக் காக்க உதவுவதும் என திடீர் திருப்பங்களால் பரபரக்கிறது படம்.

...த்தை தொடர் குண்டு வெடிப்பால் அதிர வைப்பது, ஸ்ரேடியத்தை மண்ணுக் ...தைப்பது, நகரத்தை பிற நாடுகளுடன் இணைக்கும் பாலத்தை குண்டு வைத்து ...து என்று காட்சிக்குக் காட்சி பிரமாண்டமாக பிரமிக்க வைக்கிறார்கள். ஒளிப் ... பின்னணி இசையும் கூடுதல் பலம். ஆனாலும் முந்தைய பேட்மேனை விடக் ...ம் பலவீனமாகத்தான் இருக்கிறார், மூன்றாவது பாகத்து பேட்மேன்.

சென்டிமென்ட் இல்லாத சினிமா எங்கே?

திண்டுக்கல்லில் ஒலிபெருக்கி நிலையம் நடத்தும் ஒருவனின் வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்கிறது. அது அவனது பாதையை எப்படி திருப்பி போடுகிறது என்பதுதான் 'பாண்டி ஒலிபெருக்கி நிலையம்' கதை. கொமெடி, காதல், ஆக்ஷன் கலந்த கமர்சியல் கதை. என்றாலும் சென்டிமென்டும் இருக்கும். எனது படங்களில் சென்டிமென்ட் இருப்பதற்குக் காரணம், அது இல்லாமல் வாழ்க்கை இல்லை. வாழ்க்கையின் பிரதிபலிப்புதான் சினிமா. அனிமேஷன், கிராபிக்ஸ் படங்களில்கூட சென்டிமென்டே பிரதானமாக இருக்கும் என்கிறார் இயக்குநர் ராசு மதுரவன்.

மற்றுமொரு லண்டன் நடிகை

ஈமியைப் போல, மற்றொரு லண்டன் நடிகை அனாரா தமிழுக்கு வருகிறார். 'காதலே என்னைக் காதலி' என்ற படத்தில் அறிமுகமாகிறார். இதில் சந்தோஷ் ஹீரோ. லண்டன் பெண்ணை தமிழ் பையன் ஒருவன் காதலிக்கி றான். வெளிநாட்டுப் பெண்ணை காதலனின் பெற்றோர் ஏற்க மறுக்கின்றனர். அவர்கள் மனதை அனாரா எப்படி கவர்ந்து மருமகள் ஆகிறார் என்பது கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மாறிய திருடர்கள்!

ஈரான் நாட்டில் சகீ என்பவர் வாழ்ந்து கொண்டிருந்தார். அப்போது ஈராக் நாட்டில் உள்ள பாக்தாத் நகரத்தில் சிறந்த பல்கலைக்கழகம் ஒன்று இருந்தது. சகீ, அந்தப் பல்கலைக் கழகத்தில் உயர்தரக் கல்வி பயில்வதற்காகப் புறப்பட்டார்.

ஈராக் நாட்டிற்குப் புறப்பட்ட சகீ, ஓர் ஒட்டக வியாபாரிகளின் கூட்டத்தோடு சேர்ந்து புறப்பட்டுச் சென்றார். அவ்வாறு சென்ற போது வழியில் உள்ள காட்டில் திருடர்கள் அவர்களைத் தாக்கினர்.

அப்போது சகீ தம்மிடமிருந்த புத்தகங்களையும், பணத்தையும் திருடர் தலைவனிடம் கொடுத்து, "இவற்றை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோள், திருடர் தலைவனுக்கு வியப்பை உண்டாக்கியது. அதுவரையில் அவர்களால் திருடப்பட்டவர்களில், எவருமே அவர்களிடம் அவ்வாறு கேட்டுக் கொண்டதில்லை.

வியப்படைந்த திருடர் தலைவன், சகீயை நோக்கி, "நல்ல வழியில் புத்தகத்தையும், பணத்தையும் எவ்வாறு பயன்படுத்தலாம்?" என்று அன்புடன் கேட்டான்.

அதற்கு, "ஒரு நல்ல பக்திமானாகிய பெரிய அறிஞரை அமர்த்தி, அவர் மூலம் இப்புத்தகங்களை உங்கள் குழந்தைகளுக்குக் கற்பியுங்கள். அவ்வாறு செய்தால், அக்குழந்தைகள் திருடுவது பெரும் பாவம் என்று உணர்ந்து, உங்களை நல்வழிக்குக் கொண்டு வந்து இறைவன் பக்கம் திருப்புவர்" என்று கூறித் தெளிவுபடுத்தினார் சகீ.

அதைக் கேட்டவுடன் திருடர்களும், அவர்களது தலைவனும் வெட்கப்பட்டுத் தலைகுனிந்தனர். தங்கள் பாவச் செயல்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டனர். இனி திருடுவதில்லை என்ற உறுதியும் எடுத்துக் கொண்டனர். அவ்வாறே வாழ்ந்தும் வந்தனர்.

அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால்...

இரண்டு தூக்கணாங்குருவிகள் ஒரு கூடு கட்டி, அதில் வசித்து வந்தன. ஒருநாள், இரை தேட அவை இரண்டும் வெளியே போயிருந்த சமயத்தில், ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்து தூக்கணாங் குருவியின் கூட்டுக்குள் நுழைந்துகொண்டது.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு தூக்கணாங்குருவி பறந்து வந்தது. கூட்டுக்குள் தலையை நுழைத்தது. கூட்டுக்குள் சிட்டுக்குருவி இருப்பதைப் பார்த்துவிட்டு, "குருவி அக்கா. எங்கள் வீட்டில் நுழைந்து எனக்கு இடமில்லாமல் பண்ணிவிட்டாயே. தயவுசெய்து வெளியே போய்விடு என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டது.

"போடி போ. உன்னால் முடிந்ததை பார்த்துக் கொள். இனிமேல் இது என் வீடு. நான் இதை விட்டுப் போகமாட்டேன் என்று" குருவி மறுத்து விட்டது. தூக்கணாங்குருவி அங்கிருந்து வருத்தத்துடனும், யோசனையுடனும் பறந்து போனது. சிட்டுக்குருவி, கூட்டில் ஹாயாக உட்கார்ந்து அப்படிப்போடு.....அப்படிப்போடு என்று ஜாலியாகப் பாடிக் கொண்டிருந்தது. திடீரென்று தூக்கணாங்குருவிகளின் கூட்டம் பறந்து வந்தது. ஒவ்வொன்றும் ஈரமண்ணை அலகில் கொத்தி வந்து,

கூட்டின் வாசலைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைத்துப் பூசின. கூட்டின் வாசல் குறுகிக் கொண்டே போனது.

முதலில் சிட்டுக்குருவியின் கழுத்து, அப்புறம் தலைமட்டும், கடைசியாக அலகு என்று தெரிந்துகொண்டே வந்து, கடைசியில் ஒன்றுமே தெரியவில்லை. தூக்கணாங்குருவிகள், சிட்டுக்குருவியை கூட்டுக்குள் வைத்து ஒரேயடியாக அடைத்துப் பூசிவிட்டுப் பறந்து போயின.

அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால் இதுதான் கதி என்று தாமதமாக உணர்ந்த சிட்டுக்குருவி, அந்தக் கூட்டுக்குள்ளேயே மூச்சடைத்து இறந்து போனது.

புள்ளிகளை இணைத்து உருவத்தை தண்டுபிடியுங்கள்

இந்த விஷயம் தெரியுமா?

1 முதல் 99 வரை உள்ள எண்களை ஆங்கிலத்தில் எழுதும் போது a,b,c,d எழுத்துக்கள் வராது. Hundred(100) எழுதும் போதுதான் -' வரும். 1 முதல் 999 வரை உள்ள எண்களை ஆங்கிலத்தில் எழுதும்போது a,b,c, எழுத்துக்கள் வராது. Thousand (1000) என்று எழுதும் போதுதான் 'a' வரும். 'b' எனும் எழுத்து முதன்முதலில் Billion இல் மட்டுமே வருகிறது.

அபிமன்யு

7

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் மூண்டது. அந்தக் காலத்தில் இருந்த எல்லா அரசர்களும் இருவருள் ஒருவருக்கு ஆதரவாகப் போரிட்டனர்.

இதைக் கேட்டதும் அபிமன்யு பீஷ்மரை நோக்கிச் சென்றான்.

முதல் நாள் போரிலேயே அபிமன்யு தன் திறமையை வெளிக்காட்டினான்.

8

பிற வீரர்கள் முன்னுக்கு வர பீஷ்மர் அவர்களுடன் போர் புரியச் சென்றுவிட்டார். முதல் நாள் போர் பாண்டவர்களுக்குச் சாதகமாக இல்லை. அன்று இரவு-

இவ்வாறாக கிருஷ்ணர் பாண்டவர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

இரண்டாம் நாள் கௌரவர்கள் கவனக் குறைவுடனும் அதீத நம்பிக்கையுடனும் நடந்து கொண்டார்கள்.

அந்த நாள் பாண்டவர் பக்கம் போனது.

இப்படியாக போர் தொடர்ந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காலம்' ஆகிவிட்ட கா.சிவத்தம்பி!

பேராசிரியர் சிவத்தம்பியின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்பு கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லும் பொழுது அவரது மனைவி மக்கள் ஓவென்று அழுதார்கள்.

அங்கு நின்ற பெரியவர்கள், பயந்தவர்கள், மாணவர்கள் எல்லோரும்தான் அழுதார்கள். சிலரின் கண்களில் இருந்து தாரைதாரையாக கண்ணீர் பொழிந்த வண்ணம் இருந்தது.

உண்மையில் உற்ற தோழன் ஒருவரை இழந்த துயரம் எங்கள் எல்லோர் மனதிலும் இருந்தது. நெஞ்சில் வலி இருந்தது.

பேராசிரியரின் உடலை இங்கு லண்டனில் தொலைக்காட்சியில் வீடியோவாகப் பார்த்த பொழுது நான் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினேன்.

அவர் மிகவும் மரியாதைக்குரிய ஒருவராக இருந்தார். அவர் மறைந்து ஒரு வருடமாயிற்று.

பேராசிரியர் இறந்து விட்டார் என்பது மனதில் பெரியதொரு வலியாக இன்னும் இருக்கிறது.

நான் முதன்முதலில் பேராசிரியரோடு தொலைபேசியில் பேசியது என்னத்து செய்தல் என்ற கட்டுரைக்காக அதற்கு முதல் அவரது கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், மேடைப் பேச்சுகள் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து வந்திருக்கின்றேன். எட்ட நின்று அவரின் புலமையை என்னுள்ளே பிரமித்து மகிழ்ந்திருக்கின்றேன். கிட்டப் போய் பேசவில்லை.

என்னத்து செய்தல் தொடர்பாக நான் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் வரலாற்று ஆதாரங்களோடு உடனுக்குடன் மிகுந்த தோழமையோடு பதிலளித்தார்.

மிகவும் பொறுமையாக நேரமெடுத்து பதிலளித்தார். எந்த மாணவர்கள் எந்த நேரத்தில் எதனைப் பற்றிக் கேட்டாலும் பதில் சொல்லக் கூடிய ஒரு பேராசிரிய நண்பனாகத்தான் அவரை நான் மட்டுமல்ல எல்லோரும் மனதார நேசிக்கிறார்கள்.

அவர் இலங்கைத் தமிழர்களுக்கு பெரும் கொடையாக விளங்கினார்.

அவரது மேடைப் பேச்சுக்கள் வழி சுவாரஸ்யமாக இருக்கும்.

ஒருமுறை பத்திரிகையாளர்களுக்கு பரிசு வழங்கும் விழா ஒன்றில் ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகையாளர்கள் நிறைந்திருந்த ஒரு மேடையில் வைத்து இலங்கையில் இருந்து வருகின்ற தமிழ், சிங்கள பத்திரிகைகளைப் பார்த்தால் இரண்டும் இரண்டு நாடுகளின் பத்திரிகைகள் போல இருக்கின்றன. இது பெரும் கவலையாக இருக்கிறது என்று சொன்னார். தமிழ் பத்திரிகைகள் தமிழர் சார்பாக மட்டும் எழுதுகின்றன. சிங்களப் பத்திரிகைகள் தமிழர்களை எதிரிகளாக மட்டுமே எழுதுகின்றன என்ற கவலை அவரிடம் அதிகமாக இருந்தது. சில ஊடகங்கள் இன ஒற்றுமையை விடுத்து இனப் பிரச்சினைக்குத் தொடர்ந்து தூபமிட்டவண்ணமே இருந்தன என்ற விடயத்தை அவர் தெளிவுற சொல்லார். முக்கிய பத்திரிகையாளர்களுக்கு அன்று உறைத்திருக்கும்.

அவர் சொல்ல வந்த விடயத்தை மிகவும் ஆணித்தரமாக முன்னிறுத்திப் பேசுவார். பேசும் போது தமிழ் வார்த்தைகள் கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். அது அவரின் மேடைப் பேச்சின் அழகாகும்.

தினக்குரல் பத்திரிகையில் பீஷ்மர் எனும் புனைபெயரில் வாராவாரம் இலங்கையின் அரசியல் போக்குகளை அலசி ஆராய்ந்து வந்தார்.

கட்டுரை வந்தவுடன் அதிலுள்ள கருத்துக்கள் தொடர்பாக அவருடன் உரையாடுவேன். அப்பொழுது நான் சொல்ல வந்த கருத்து உனக்கு விளங்குதோடா என்று வாஞ்சையோடு கேட்பார்.

அவருடைய அரசியல் கட்டுரைகளால் அரசாங்கத்துக்கும் நெருக்கடி இருந்தது. புலிகளும் சில நேரங்களில் அவரை விரும்பவில்லை. ஆனாலும் தொடர்ந்து ஒரு தமிழறிஞராக தனது கடமையை அவர் செய்து கொண்டுதானிருந்தார்.

நான் சார்ந்த தொலைக்காட்சிக்காக செவ்வி காண வேண்டும் சேர் என்று ஒரு வேண்டுகோளை வைத்த போது வா என்று ஒரு நாளை குறித்துத் தந்தார்.

கமரா, கருவிகளோடு போனபோது இங்கு லண்டனில் இருக்கின்ற ஒரு பொக்ஸ் ரூமைப் போன்ற ஒரு நெருக்கடிமிக்க சிறிய அறையில் தனது பெரிய உடம்பை அசைக்க முடியாமல் இருந்தார். லுங்கியோடும் சேட்டோடும் அவரை இயல்பாக வைத்து பேட்டி எடுத்தேன்.

அந்த புழுக்கமான அறையில் லைட்டை வைக்க வேண்டும்.

ஒளிவெளிக்கு காற்றுப்பட்ட அது புஸ்... புஸ்... என்கிறது. இவ்வாறான நெருக்கடிக்குள் அரைமணி நேரம் அரசியலும் அரைமணி நேரம் இலக்கியமும் பேசினோம்.

இலங்கையின் மிக முக்கியமான பெரும் அறிவுச் செல்வத்தை எப்படி பாதுகாக்க வேண்டும்.

அவருக்கு ஒரு வசதியான ரூம் கூட இல்லாமல் இருந்தது.

எத்தனை பெரிய தமிழ் பணக்காரர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருந்தாலும் கொழும்பில், யாழ்ப்பாணத்தில் வெண்கல மணி வாங்கவும், கோபுரம் கட்டவும் கோடிக்கணக்கான ரூபாய்களை கோவில்களுக்கு கொட்டிக் கொடுக்கின்ற எந்தப் பணக்காரரும் சிவத்தம்பி என்ற பொக்கிஷத்தை பாதுகாக்க முன்வரவில்லை.

அவர் சிரமப்பட்டுக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு மாடியில் தான் அறை இருந்தது. நெருக்கடியான லிப்ட் ஒன்றில் தனது கம்பி வலன்று கோலுடன் கீழே வருவதற்கு பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

குடும்பத்தினர் பார்க்கட்டும் என்று அறிஞர்களை அந்தரத்தில் விடுவது இந்த தமிழ் சமூகம் மட்டும் தான் என்று நினைக்கின்றேன். அப்படி ஒரு கவலை எனக்கு வந்தது. ஆனால் அவர் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்திருக்கிறார். அதுதான் அவரின் பெருந்தனம்.

அவ்வளவு சிரமங்களோடும் பேராசிரியர் செம்மொழி மகாநாட்டுக்குப் போனதை பெரிதுபடுத்தி அவரிடம் படித்த ஒருவர் கூட சவத்தம்பி என்று கிண்டலடித்து கட்டுரை எழுதி பிரசுரத்திற்கு விட்ட பொழுது அவர் என்னிடம் சொன்னது "அவனை பல்கலைக்கழகத்தில் பாஸ் மார்க் போட்டு மேலே அனுப்பினது நான் தான் அதுக்கு நன்றியாக இப்படி எழுதுகிறான் எழுதட்டும். எழுதட்டும்."

அவர் எதற்கும் பெரிதாக அலட்டிக் கொள்ளாதவராக இருந்தார்.

தன்மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களை அவர் நேரடியாக எதிர்கொள்ளுவார். அவரது இறுதிக் காலங்களில் அவர் தமிழா? அரசியலா? என்று வரும் பொழுது தமிழுக்கே முன்னுரிமை கொடுத்தது சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதனை சட்டை செய்யாமல் தனக்கு சரி என்று பட்டதை தெளிவாக முன்னெடுத்துக் கொண்டு போனவர் அவர்.

அது என்னவாக இருந்தாலும் தனது ஆழ் அறிவாலும் சுயமான சிந்தனையாலும் தனது கருத்துக்களை தெளிவோடு வெளிப்படுத்தியவர் அவர்.

தமிழ் நாடகத்துக்கு தனது ஆய்வின் மூலமாக பெரும் பங்களிப்பும் பிரகாசமும் ஏற்படச் செய்தவர் அவர்.

விமர்சனங்களுக்கு மாக்சிய நோக்குகளை முன்வைத்து புதிய விமர்சனப் பாங்கை ஏற்படுத்தியவர்.

தமிழ்மொழிக்கு எப்பொழுதும் பெருமை சேர்ப்பவராக பேராசிரியர் தனது வாழ்நாள் முழுவதும் இருந்தார்.

பேராசிரியர் மு.இளங்கோவன் பேராசான் சிவத்தம்பியை பற்றி சொல்லும் பொழுது மார்க்ஸ் முல்லர் உள்ளிட்ட பலர், சமஸ்கிருத மொழி இந்தியா முழுவதும் பரவியிருந்த மொழி எனவும் இலக்கண, இலக்கிய வளங்களைப் பிற மொழிகளுக்கு வழங்கிய மொழி எனவும், கருத்துக்களைப் பரப்பி மேற்குலகம் முழுமைக்கும் சமஸ்கிருத முதன்மையைப் பதிவு செய்திருந்த காலத்தில் பழந்தமிழ் இலக்கியங்கள் கிரேக்க, உரோம இலக்கியங்களுக்கு நிகரான பழமையை உடையது, சிறப்பினை உடையது எனத் தக்க சான்றுகளுடன் நிறுவிக்காட்டி, சங்க நூல்கள் மேற்குலகில் கவனம் பெற உழைத்த கைலாசபதி, சிவத்தம்பி எனும் இருவரும் என்றென்றைக்கும் தமிழர்களினால் நன்றி யுணர்வுடன் போற்றத்தக்கவர்களே என்று மனதாரக் குறிப்பிடுகின்றார்.

உண்மைதான் பேராசிரியர் சிவத்தம்பியை தமிழக அறிஞர்கள் மாத்திரமன்றி உலக அறிஞர்களும் என்றும் போற்றுவார்கள்.

தமிழுக்கு இணையான ஆங்கிலப் புலமை அவரை உலகம் முழுவதும் பிரகாசிக்கச் செய்தது.

இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி பல்கலைக்கழகங்களிலும் பேராசிரியரின் விரிவுரைகள் முக்கியமாகப் பேசப்பட்டன.

மேடை நாடகங்களை மிகவும் வாஞ்சையோடு மேடையேற்றி நடித்தார். இலங்கை வானொலியில் அவர் நடித்த 'விதானையார் வீடு' நாடகம் இன்றும் பேசப்படும் ஒன்று. பேராசிரியர் என்ற பெருந்தனத்தை அவரிடம் நான் எப்பொழுதும் பார்க்கவில்லை. மக்களோடு மக்களாக, மாணவர்களோடு மாணவராக அவர் கலந்து போய் நின்றது தான் அவரை ஒரு தோழனாக நினைக்கத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட ஆசிரியர்கள் தமிழில் அருமை. பேராசிரியரின் இழப்பை இணையற்ற இலக்கிய வரலாற்றாசிரியரின் மறைவு என்று அதனால்தான் நாமெல்லோரும் சொல்லி வேதனைப்படுகின்றோம்.

குறிப்பு:

சில வருடங்களுக்கு முன்னர் இலக்கிய விமர்சகர் க.நா.சு இவர்களின் மறைவினைக் குறித்து 'கலம்' ஆகிவிட்ட க.நா.சு என்ற தலைப்பில் பேராசிரியர் கா.சிவத்தம்பி ஒரு கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அந்தத் தலைப்பே பேராசிரியருக்குப் பொருத்தமாக அமைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைகளும் ஒரு காரணம்

மகளிர் சுடர்

பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுவதற்குக் காரணம் என்ன என்று இணையத்தளம் ஒன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்களித்த அதிகபட்ச நபர்கள் பெண்கள் அணியும் அரை குறை ஆடை தான் என்று வாக்களித்து இருந்தார்கள். இன்று நாம் நிறைய இடங்களில் பார்க்கிறோம். பெண்கள் அரைகுறை ஆடை அணிந்துதான் வருகிறார்கள். பார்க்கும் ஆண்களை சபலப்படவைக்க இதுவும் ஒரு காரணமாகவே அமைகிறது. அதற்கு நாம் செய்ய வேண்டியது மூன்றே மூன்றுதான் 'உன்னுடைய வீட்டை சுத்த மாக்கு நாடு தானாகவே சுத்தமாகும்'.

அரைகுறை ஆடை அணிவது நம் சகோதரியாகக் கூட இருக்கலாம். நம் பிள்ளைகளாகக் கூட இருக்கலாம். முதலில் அவர்களுக்கு வீட்டில் ஒழுக்க நெறிகளைச் சொல்லிக் கொடுத்து வளர்ப்பது நமது தலையாயக் கடமையாக இருக்கிறது. வீட்டில் தந்தை, அண்ணன், தம்பி, மற்றும் வீட்டில் உள்ள பெரியவர்கள் அனைவரும் இருக்கிறார்கள். அவர்களை மீறி எந்தப் பெண்ணும் அரைகுறை ஆடை அணிவது இல்லை. முதலில் நமது வீட்டில் உள்ள பெண்களின் ஆடை கொஞ்சம் ஆபாசமாகத் தெரிந்தால் கண்டிப்பது நமது கடமை. அதை விட்டுவிட்டு அவர்களை நாம் அரை குறையாக ஆடை அணியவைத்து வெளியே அழைத்துக் கொண்டு திரியும் நிறைய தாய் தந்தை இருக்கிறார்கள். அவர்களைஆ; பார்க்கும் போது தான் அரை குறை ஆடை அணியும் பெண்கள் மீது தவறு இல்லை அவர்களின் தாய் தந்தை சகோதரர்கள் மீதுதான் தவறு என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இவர்கள் தன்னுடைய சகோதரிகளை, பிள்ளைகளை அரை குறை ஆடை அணிய வைத்து எப்படி அழைத்து வருகிறார்கள் என்று தெரியவில்லை. உண்மையில் சிந்திக்க வேண்டிய விடயம் தான்.

இன்று நிறைய சகோதரிகள் சுடிதாருக்கு துப்பட்டா அணிவதே இல்லை. சுடிதாரின் மேலுடையை இடுப்பிற்கு மேல் 'ஒப்பன்' ஆக விடுகின்றார்கள். கேட்டால் நாகரிகம் என்று சொல்லுகிறார்கள். எப்படி வேண்டுமானாலும் வாழ்வது வாழ்க்கை அல்ல. இப்படித்தான் வாழ்வது என்பதுதான் வாழ்க்கை. நாகரிகம் வளர வளர பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளும், வன்முறைகளும் அதிகமானது என்று சொன்னால் மிகையாகாது! இதிலிருந்து உடைக் கட்டுப்பாடும் இது போன்ற குற்றங்களை தடுப்பதற்கான ஒரு வழி என்பது நிதர்சனமான உண்மை. இதேவேளை, பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாவதற்கு அரைகுறை ஆடை மட்டும் தான் காரணமெனவும் எடுத்துக் கொள்ள முடியாது.

இன்று நாம் தொலைக்காட்சிகளில் வரும் விடயங்களைக் குடும்பத்தோடு பார்க்க முடிகிறதா..? முகம் சுழிக்கும் விதமாகவே இருகிறது. தந்தை பிள்ளைகளோடு தொலைக்காட்சியே பார்க்க முடிவதில்லை. இன்று சாதாரண விளம்பரத்தில் கூட ஆபாசம். கிரிக்கெட் விளையாட்டிலும் கூட ஆபாசம் தேவைப்படுகிறது. பெண்களை போதைப் பொருளாகவே பயன்படுத்துகிறார்கள். இதை எல்லாம் பார்த்து மக்களின் மனம் மரத்துப் போய்விட்டது. உடைக் கட்டுப்பாடு இருந்தாலும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் சில காமவெறி கொண்ட கயவர்களால் நடந்து கொண்டு தான் இருக்கிறன. இவர்களைத்தடுக்க கடுமையான சட்டங்கள் அவசியம்.

பளிச்சென்ற முகத்திற்கு...

எண்ணெய் வழியும் சருமத்திற்கு

சிலருக்கு எவ்வளவுதான் சவர்க்காரம் போட்டு முகம் கழுவினாலும் முகத்தில் எண்ணெய்ப்பசை மாறாது. மேலும், மேக்கப் செய்த சிறிது நேரத்தில் முகத்தில் எண்ணெய் வழியும். இரசாயனம் கலந்த முகப் பூச்சுகளால் ஒவ்வாமை உண்டாகுமே தவிர முழுமையான பலன் கிடைக்காது. கடைந்த மோரை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி சிறிது நேரம் அதாவது 15 நிமிடங்கள் ஊறவைத்து பின் இளம் சூடான நீரில் கழுவி வந்தால் எண்ணெய் வழியும் சருமம் மாறும். மேலும் தினமும் உணவில் கீரைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அஜீரணக் கோளாறு, மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். அதுபோல் வாயுவை அதிகரிக்கக் கூடிய உணவுகளையும் தவிர்ப்பது நல்லது. எளிதில் ஜீரணமாகும் உணவுகளை சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிக இரசாயனம் அல்லாத மூலிகை சவர்க்காரங்களை பயன் படுத்துவது நல்லது.

முகப்பரு மாற

முகப்பரு இக்கால தலைமுறையினருக்கு மிகுந்த மன உளைச்சலை உண்டாக்குகிறது. உணவு முறை மாறுபாட்டாலும், உடலின் வளர்ச்சிதை மாற்றத்தாலும் முகப்பரு உண்டாகிறது. முகப்பரு தொல்லையால் அவதிப்படுபவர்கள்

வெந்தயக் கீரை - 1 கைப்பிடி
துளசி இலை - சிறிதளவு

கொத்தமல்லி இலை - சிறிதளவு

எடுத்து நீரைவிட்டு அரைத்து முகத்தில் உள்ள பருக்கள் மீது தடவினால் முகப்பரு மாறும். கொழுப்பு சார்ந்த உணவுகளை தவிர்க்க வேண்டும். எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகளையும் தவிர்ப்பது நல்லது.

வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் நன்கு கொதிக்க வைத்து ஆறிய பிறகு அந்த நீரில் முகத்தைக் கழுவி வந்தால் பருக்கள் குறையும்.

வெள்ளரி - 2 துண்டு
தக்காளி - 2 துண்டு
கரட் - 2 துண்டு

எடுத்து ஒன்றாகச் சேர்த்து அரைத்து அதனுடன் தேன் கலந்து முகத்தில் தடவி 5 நிமிடங்கள் ஊறியபின் கழுவினால் பருக்கள் மறையும்.

புருவங்கள் அடர்த்தியாக

சிலருக்குப் புருவங்கள் அடர்த்தியாக வளராமல் விட்டு விட்டு மெலிதாக வளர்ந்திருக்கும். இவர்கள் தேங்காய்ப் பாலை காய்ச்சி எடுத்த எண்ணெயை புருவங்களின் மீது தடவி வர புருவம் அடர்த்தியாக வளரும். அல்லது சுத்தமான விளக்கெண்ணெய்யை தடவி வந்தாலும் புருவம் அடர்த்தியாக வளரும்.

நிலக்கடலைச் சுண்டல்



தேவையான பொருள்கள்:
நிலக்கடலை (கச்சான்) - 1 கிலோ
பச்சை மிளகாய் - 5
இஞ்சி - சிறிய துண்டு (விரும்பினால்)
தேங்காய் 1 1/2 கப்
எள்- 1 மேசைக்கரண்டி
கசகசா - மேசைக்கரண்டி
1 உப்பு - தேவையான அளவு
தாளிக்க: எண்ணெய், கடுகு,
ஒரு காய்ந்த மிளகாய், பெருங்காயம்,
கறிவேப்பிலை.

செய்முறை:

நிலக்கடலையை இரண்டு மணிநேரம் தண்ணீரில் ஊறவைத்து நீரை வடிக்கவும். ,ஊறிய கடலையை ஒரு கப் தண்ணீர் சேர்த்து, குக்கரில் 3 விசில் வரை நன்கு வேகவைத்து, மீண்டும் நீரை வடிக்கவும். எள், கசகசாவை வறட்டு வாணலியில் நன்கு வறுத்து மிக்ஸியில் நைசாகப் பொடிக்கவும். (வறுக்காமலிருந்தால் கசகசா மசியாது.) இஞ்சி, பச்சை மிளகாய், தேங்காயை உப்பு சேர்த்து, தண்ணீர் விடாமல் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியில் எண்ணெய் வைத்து கடுகு, காய்ந்த மிளகாய், பெருங்காயம், கறிவேப்பிலை தாளிக்கவும்.

வேகவைத்த கடலை, அரைத்த விழுது சேர்த்து நன்கு நீர்ப்பசை இல்லாதவாறு வதக்கவும். இறக்கும் முன் அரைத்த பொடியைத் தூவி மேலும் இரண்டு நிமிடங்கள் கிளறி இறக்கவும். மற்ற கண்டிஷன்களை விட நிலக்கடலை அதிகப் பித்தம் சேர்க்கும். இஞ்சி சேர்ப்பது நல்லது. எளிமையாக, எதுவுமே அரைத்துவிடாமல், காய்ந்த மிளகாய் தாளித்து, தேங்காய்த் துருவல் மட்டும் சேர்த்தும் செய்யலாம். சுண்டல் மிஞ்சினால் அரைத்தால் சட்டி குழம்பில் சேர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி இருமல் வருகிறது..!



சி. யாதவி-யுத்தனாம்

கேள்வி :- எனது மகனுக்கு வயது 4. இரவில் அடிக்கடி இருமல் ஏற்படுகின்றது. மாதத்தில் இரு தடவையாவது இப்படி வந்துவிடும். இதற்கு நிரந்தரத் தீர்வு இல்லையா? சளி வெளியே வருவதும் இல்லை.

பதில் :- இவ்வாறு அதிகாலை, இரவில் இருமல் இருப்பது - அதுவும் இந்த வயதில் எனின் ஆஸ்த்மா காரணமாகவே ஏற்படுவதாக இருக்க சாத்தியம் நிறையவுண்டு. பலர் ஆஸ்த்மாவும் இருமலும் சம்பந்தா சம் பந்தமில்லாத இரு அம்சங்கள் எனக் கருதுகின்றனர். ஆஸ்த்மாவின் குணங்குறிகளில் பிரதானமான ஒன்று இருமல் என்பது கவனிக்கப்பட வேண்டும். இதன் மறுதலையே உண்மை என்று பெற்றோர் பலர் நினைப்பதும் உண்டு. அதாவது இருமல் வரவர அதிகரிப்பதால் தான் ஆஸ்த்மா அதாவது இழுப்பு ஏற்படுகிறதென தவறாக நினைக் கின்றனர் ஆஸ்த்மா எனும்வுடன் இழுப்பு அதாவது மூச்சிரைப்பு மட்டுமே என்பதல்ல. உண்மையில் இழுப்பு, இருமல், நெஞ்சு இறுக்கம், நெஞ்சு நோ யாவுமே ஆஸ்த்மாவின் குணங்குறிகளே ஆகும். தொடக்கத்தில் இருமல் மிக அதிகமாக இருப்பது முற்றிய நிலையில் இழுப்பு ஏற்படும். இதனால் இருமல் காரணமாகவே இழுப்பு ஏற்படும் என்ற தவறான எண்ணம் ஏற்படுகிறது. ஆஸ்த்மாவின் ஆரம்ப அறிகுறி இருமல், பிந்திய அறிகுறி இழுப்பு என்பதே சரியானதாகும். இருமலுக்கும் முன்னதாக தடிமன் (ஜலதோசம்) பிடித்திருக்கும். அதன் தொடர்ச்சியாகவே ஆஸ்த்மா வெளிப்படுகிறது. இங்கு ஏற்படும் இருமல் வறட்டு இருமலாக இருக்கும். ஏனைய இருமல்களைப் போல சளி இருப்பது போல்வு தோன்றாது வறட்டு இருமலாக இது ஏற்படுவது குறிப் பிடத்தக்கது. இதனால் தான் சளி வெளியே வருகுதில்லையே என நோயாளர் பலர் கூறக் காண்கின்றோம். சளி வெளிவருகுதில்லை சளி வந்தால் நோய் சரியாகிவிடும் என்றும் சில நோயாளர் ஆதங்கப் படு கின்றனர். இதுவும் தவறாகும்.

இங்கு இருமல் சளித் தொற்றினால் ஏற்படுவதில்லை. சுவாசக் குழாய்களின் இறுக்கம் அடைப்பினாலேயே இருமல் உக்கிரமாக ஏற்படுகின்றது. எனவே சளி வெளியாகினால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைப்பது சரியல்ல. சளி வெளியாகுவதல்ல, சுவாசக் குழாய் இறுக்கத்தை சரி செய்வதே இதற்கு ஒரேவழி.

எனவே, வரட்டு இருமல் இரவு, அதிகாலையில் ஏற்படுமாயின் அதற்கு ஆஸ்த்மா காரணமா என்பது நன்கு ஆராயப்பட வேண்டும். இருமல் இழுப்பு போன்ற நிலைக்கு வரமுன் வைத்தியர் ஒருவரால் அது ஆஸ்த்மா தானா என்பது கண்டுபிடிக்கப்பட முடியும். அதற்கு சிறப்பான நிவாரணமும் சிகிச்சையும் நவீன வைத்தியத்துறை வசமுண்டு. குழந்தைகளில் ஏற்படும் ஆஸ்த்மா அவர்கள் பெரியவர்களாகும் போது தானாகவே குணமாகிவிட வாய்ப்பு நிறைய உள்ளது. அதுவரை இவ்வாறு இருமல் இருக்கையில் அதற்கு ஆஸ்த்மா காரணமா என வைத்தியரிடம் காட்டுவது மூலம் கண்டறிந்து உடனடி சிகிச்சை மூலம் பூரண குணம் பெறலாம். அதன் பிறகு நோய் வரமுன் தடுக்கும் முறையாக அதாவது வருமுன் காப்போனாக உறிஞ்சும் மருந்துகளை பாவிக்க வேண் டும். குறிப்பாக மழைகாலம், குளிர்கால நிலையில் இவ்வாறு உறிஞ்சும் மருந்துகளை பாவிப்பதன் மூலம் ஆஸ்த்மா தாக்கத்தை வருமுன் காத்து தடுத்துக் கொள்ளலாம். உறிஞ்சும் பம்பி மூலம் (Inhaler pump) மருந்து உள்ளெடுப்பது ஆபத்தானது என்ற தவறான அபிப்பிராயம் எப்படியோ சமூகத்தில் பரவி உள்ளது. இதற்கு அடிமையாகி விடுவோம் என்று கூறும் பலரையும் காணக் கூடும். சிகரட், மதுவுக்கு அடிமையாவது போலல்ல இந்த உறிஞ்சும் பம்பி மூலம் மருந்து உட்கொள்வது. சிகரட், மதுவுக்கு அடிமையாவது பற்றி கவலைப்படாதவர்களெல்லாம் மருந்துக்கு அடிமையாவது பற்றி மட்டும் எப்படிக் கவலைப்பட முடியும்?

மேலும், பூரணமாக சிகிச்சை அளிப்பது மூலம் உங்கள் குழந்தையின் கல்வி, விளையாட்டு என்பன உரியவகையில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட முடியும். ஆஸ்த்மா நோயுள்ளவர்கள் நீச்சல் விளையாட்டில் ஈடுபட முடியும். அதற்காக ஆஸ்த்மா முற்றி இழுப்பு இழுத்துக் கொண்டிருக்கும் போது குழந்தையை நீந்து என தண்ணீருக்குள் தூக்கிப் போடக் கூடாது. கிரமமாக நீச்சலில் ஈடுபடும் போது ஆஸ்த்மா தாக்கம் படிப்படியாகக் குறையும். இலங்கையின் பிரபல நீச்சல் வீரரான 19 வயது ஹோஷான் உணம்புவ என்பவர் ஒரு ஆஸ்த்மா நோயாளி என்பது பலருக்கு ஆச்சரிய மாக இருக்கலாம். அவர் இம்முறை இலங்கை சார்பாக லண்டன் ஒலிம்பிக்கில் நீச்சலில் பங்குபற்ற உள்ளார் என்பது கூடுதல் செய்தி. எனவே ஆஸ்த்மா என்றவுடன் நடுங்க வேண்டாம். அது கட்டுப்பாட்டில் கொண்டுவரக்கூடிய வியாதி தான். பிள்ளைக்கு ஆஸ்த்மா உள்ளது எனக் கூறியதும் முகம் வாடிவிடும்.

இன்னும் சில பெற்றோர் இல்லை டொக்டர் பிள்ளைக்கு ஆஸ்த்மா (அதாவது Wheezing) இல்லை. வெறும் இருமல் மட்டும் தான் என டொக்டரிடமே சாதிக்க முற்படுவர். ஆஸ்த்மா என்பது சிறுவயதில் பல குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடிய ஒரு சர்வசாதாரண வியாதிதான். இந்த 'Asthma' என்ற சொல்லைக் கண்டு நாம் நடுங்க வேண்டியதில்லை. உரிய சிகிச்சை தாராளமாக உண்டு.

டொக்டர் என்.சுரேந்திரன்

உடல் நலம்

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் என்.சுரேந்திரன் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பிரகாரம் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மூளை, முதுகெலும்பு – நரம்புகளை வலுப்படுத்தும் புளியங்கொட்டை!



மூளை, முதுகெலும்பு ஆகியவற்றில் உள்ள நரம்புகள் சேதம் அடைந்து இருந்தால் அவற்றை குணப்படுத்தி மீண்டும் வளர உதவும் மருந்து ஒன்றை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தமருந்து புளியங்கொட்டையில் இருந்து உருவாக்கப் பட்டுள்ளது. பர்க்கின்சன் போன்ற நரம்பு சம்பந்தப்பட்ட நோய் களைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சையில் இந்த மருந்து ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மருந்தை சர்வதேச விஞ்ஞானிகள் குழு பரிசோதித் துப் பார்த்து இது சேதம் அடைந்த நரம்பு செல்களைக் குணப் படுத்துவதில் மிகப்பெரிய பங்காற்றும் என்று தெரிவித்துள்ளது.

இந்த மருந்தை காயம்பட்ட இடத்தில் திரவமாக ஊசி மூலம் செலுத்த முடியும் என்றும் அந்தக் குழு தெரிவித் துள்ளது..

சளினை விரட்டும் கற்பூரவல்லி

கற்பூரவல்லி ஓர் அற்புதமான மூலிகைச் செடி. இது நம் ஊர்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். இச்செடியின் தாயகம் இந்தியா. இது அனைத்து இடங்களிலும் வளரக்கூடியது. நம் வீட்டிலும் வளர்க்கலாம். கற்பூரவல்லியை நம் வீட்டில் வளர்க்க 6 மாதங்கள் ஆகும். 6 மாதத்தில் இதன் இலைகளின் பயன் தொடங்கும். இதன் தண்டும், இலைகளும் பயன்தரக்கூடியவை.

சிறுமல், சளி, தடிமன் போன்ற நோய்களுக்கு முக்கிய மருந்து.

ஈரலை பெருக்கியாகவும், கோழையகற்றிக் காச்சல் தணிக்கும் மருந்தாகவும் பயன்படு கின்றது. இலைச் சாற்றை சர்க்கரை கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்க சீதள இருமல் தீரும். இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்கு கலக்கி நெற்றியில் பற்றுப் போட்ட தலைவலி நீங்கும். குடைச்சல் தணிக்கும். இலை, காம்புகளைக் குடிநீராக்கிக் கொடுக்க இருமல், சளிக் காச்சல் போகும். இதன் இலைகளை எடுத்து கழுவி சாறெடுத்து இரண்டு மி.லீ சாறுடன் ஐந்து மி.லீ தேனைக் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் மார்புச் சளி கட்டுக்குள் வரும்.

இந்த மூலிகை குழந்தைகளின் ஜீரண வாதியை நிறுத்தக் கூடிய மருத்துவக் குணத்தைப் பெற்றிருக்கிறது. கட்டிகளுக்கு இந்த இலையை அரைத்துக் கட்டக் கட்டிகள் கரையும். தலைகள் சுருங்குவதைத் தடுக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய், இளைப்பு நோய்களுக்கு உள் மருந்தாகவும் பயன்படும். கண் அழற்சிக்கும் இதன் சாறு மேல் பூச்சாகத் தடவ குணம் தரும். மருத்துவத் துறை யில் இது நரம்புகளுக்குச் சத்து மருந்தாகிறது. மனக் கோளாறுகளைச் சரிசெய்யும். சிறுநீரை எளிதில் வெளிக் கொணரக்கூடிய பரிந்துரைக்கப்படுகிறது. இரத்தத்தை சுத்திப்படுத்தும் தாவரமாகவும் கருதப்படுகிறது. குழந்தைக்கு குடிப்பதற்காக கொதிக்க வைக்கும் நீரில், சுத்தமாக அலசி வைத் திருக்கும் 4 அல்லது 5 கற்பூரவல்லி இலைகளைப் போட்டு சிறிது நேரம் கழித்து எடுத்துவிடுங்கள்.

இலையின் சாறு முழுமையாக நீரில் இறங்கி தண்ணீர் லேசாக பச்சை நிறத்தை அடைந்து இருக்கும்.

அந்த நீரை மட்டும் குழந்தை பருகுவதற்குக் கொடுங்கள். 2 அல்லது 3 நாட்களுக்கு இது போன்ற நீரையே கொடுத்து வாருங்கள். குழந்தைக்கு சளியின் தீவிரம் கட்டுப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌன மனவெளிகள்

32

நா.யோகேந்திரநாதன்

குடியரசாள் ஒருமுறை நீக்கையைத் தடவி விட்டுச் செருமிக் கொண்டார். விதானையாரின் முகத்தை நேரடியாகவே பார்த்தவாறு சொல்லத் தொடங்கினார்.

"போனமுறை எலெக்சனிலையும் எங்கடை பொடியன் கந்தையா கேட்கத்தக்கதாய் நவிண்டில் இராமலிங்கத்தாருக்கு கப்போட் பண்ணி அவரை எம்.பியாக்கினியள். என்ன பிரயோசனம் கண்டியள்?"

"பிரயோசனம் எதிர்பார்த்தே அவரை ஆதரிச்சனாங்கள். அவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின்ரை கட்சியிலையல்லோ கேட்டவர்" குடியரசாரின் குரல் சற்று உயர்ந்தது. "ஜீ.ஜீ. உங்கெண்ண மாமனோ... மச்சானோ... இவன் எங்கடை இரத்த உறிஞ்சல்லோ?"

விதானையாரும் விடவில்லை. "உரித்து உண்மைதான். ஆனால் இவன் சாதியில்லை. சாதியில்லை என்று சொல்லுற கட்சியிலையல்லோ கேட்டவன்."

"இந்த முறையும் அந்தக் கட்சியிலை தான் கேடுகெட்ட பேறாள். நீங்கள் என்ன செய்யப் போறியள்?"

"அப்பிடியெண்டால் யோசிச்சுத்தான் செய்ய வேணும்."

"அப்ப.. மணிய உடையாரின்ரை பொடியனை எம்.பி. ஆக்கிப்போடு ஏதும் அதுகளுக்கு அவன்ரை வி' டு வாசலிலை நிக்கப் போறியளோ?"

"ஏன் அவனோ பொன்னரின்ரை கட்சியிலை கேட்கிறான்?"

"ம...!" என்றார் குடியரசார்.

சில விநாடிகள் மௌனம் நிலவியது.

குடியரசார் மெல்லக் கதையைத் தொடர்ந்தார். "இந்த முறை கந்தையாவுக்கு நல்ல சப்போட் இருக்குது. நாங்களும் மூச்சுப் பிடிச்சு வேலை செய்தால் வெல்ல வைச்சிடலாம்.

"எங்கடை பொடியனை எம்.பியாய் வரத்தான் வேணும்... இவன் கேட்கிற கட்சியிலை பிழை."

குடியரசார் குறுக்கிட்டார். "விதானை இப்ப காலம் மாறிப்போச்சுது. பழைய விசயங்களைத் தூக்கிப் பிடிக்க ஏலாது. கந்தமுருகேசனார் இறங்கிச் சொல்லிப் போட்டார். எல்லாம் பண்டிதர்மாரும் வித்துவான்களும் இறங்கி வேலை செய்யப் போகினம். விளங்குதே?"

கந்தமுருகேசனாரின் ஆதரவு கிடைத்தால் வெற்றி நிச்சயம் என்பது விதானையாருக்குத் தெரியும். ஆசிரியர்கள் இறங்கித் தேர்தல் வேலையில் ஈடுபட்டால் வடமராட்சியில் வெற்றி நிச்சயமாகிவிடும்.

விதானையார் "என்னை ஏறியாவிலை முழுவோட்டும் எங்கடை பொடியனுக்கு விழ வைப்பன். ஆனால் ஆலய வெட்டையாரை இவன் காசிப்பிள்ளை முதலாளி குழப்பப் பாப்பான்" என்றார்.

"அதைப்பற்றி நீ கவலைப்படாதே. பாலவெட்டையாரைக் கொண்டு அவங்களை மடக்கலாம். இனி கனகரத்தினம், சிவஞானம் ஆக்கள் எங்களுக்கு வேலை செய்யலாங்கள்."

மேலும் சிறிதுநேரம் கதைத்துக் கொண்டு இருந்துவிட்டு, எதிர்வரும் வெள்ளி நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் கச்சேரிக்கு வரும்படி கூறி விட்டுக் குடியரசார் புறப்பட்டார்.

சிறை பெற்றுக் கொண்டு போய் மோட்டார் சைக்கிளில் ஏறிய கந்தப்பர் விறாந்தையில் நின்ற சொர்ணத்தைக் கண்டு விட்டார்.

"பிள்ளை! வாடி இஞ்சை" என்ற அவரின் அழைப்பைக் கேட்டு அருகே வந்தாள் சொர்ணம்.

அவர் அவளை நோக்கி "கந்தையாவின்ரை பிரசாரக் கூட்டங்களிலை நீ தான் பிரதம பேச்சாளர். விளங்குதே?" என்றார்.

மெல்ல புன்னகைத்தவாறே அருகில் நின்ற சீதேவிப் பாட்டியைப் பார்த்தாள் சொர்ணம். அதை அவதானித்த குடியரசார் "அது கிழவி கந்தும் தான். நீ ஏன் காதிலை விழுத்திறாய்" என்றார்.

கிழவிக்குக் கேட்டுவிட்டது அவரின் விண்டல்.

சீதேவிப் பாட்டியும் "டேய் பல்லுடைபடப் போறாய். நீ போய்க் கண்ட நிண்ட சாதி ஸீவெல்லாம் நக்கு. அதுக்கு ஏன் அவளை இழுக்கிறாய்" என்றாள் அவள்.

"கம்மா பிடுங்கி அடுக்காதை. உன்னை மேன் வெள்ளாளன் சீவிற கள்ளே குடிக்கிறவன்" என்று சிரித்தவாறே சொல்லி விட்டு அவர் மோட்டார் சைக்கிளை 'ஸ்ரார்ட்' செய்தார்.

"உனக்கு ஆரும் ஒரு கீழ் சாதிக்காரியை கட்டித் தந்திருக்க வேணும். பிழை விட்டிட்டம்" எனக் கிழவி கறுவியதைக் கேட்க அவர் அங்கு நிற்கவில்லை.

"அப்பிடியெண்டால் உன்னை மேத்தியை ஒரு சீவல்காறனுக்குக் கட்டிக் குடுப்பியே?" எனக் கேட்க வேண்டும் போல் சொர்ணத்துக்குத் தோன்றியது. ஆனால் துணிவு வராத நிலையில் அது மனதுக்குள்ளேயே அடங்கிப் போனது. ஆனால் வயிற்று அடிக்கடி உணர்வுகள் எல்லோ ஒரு நாளில் வெடிக்கும் என்பதை அவள் அறியாமல் இல்லை. அந்த நாளை எண்ணும் போது மனதில் பெரும் பயம் தோன்றினாலும் கூட அவளின் மனம் அப்படியான ஒரு நாளுக்காக ஏங்கியது.

அன்று சனிக்கிழமை.

சார்ஜண்ட் சின்னத்தம்பி உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை நன்றாக நல்லெண்ணெய் தேய்த்து விட்டு முற்றத்தில் இளம்வெயில் படும்படி ஸ்ரூலைப் போட்டு விட்டு அதில் அமர்ந்திருந்தார். எண்ணெய் பூசிய அவரின் கருமேனி சூரியஒளியில் பளபளத்துக் கொண்டிருந்தது.

வறுக்கப்பட்ட ஆ' டு இரத்தமும், சாராயப் போத்தலும் அருகில் இன்னொரு மேப்போவில் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஊரில் எங்கு ஆடு பங்கு போட்டாலும் இரத்தமும் ஒரு பங்கு அதிகாலையிலேயே சின்னத்தம்பிக்கு அனுப்பி விடுவார்கள். அப்படிச் செய்யாவிடில் சட்ட விரோதமாக ஆடு வெட்டிய குற்றத்திற்காக கோர்ட்டுக்கு இழுபட்டு இறைச்சியையும் பறிகொடுத்துத் தண்டப்பணமும் கட்ட வேண்டி வரும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

சிறிதளவு சாராயத்தைக் கிளாசில் ஊற்றிக் குடித்துவிட்டு நிமிர்ந்த போது காசிப்பிள்ளை முதலாளியின் கார் கேற்றடியில் வந்து நின்றது. அப்போது நாள் எதிர்வரும் திங்கட் கிழமை சிங்கன் கொலை வழக்குத் தவணை என்பது சின்னத்தம்பிக்கு நினைவுக்கு வந்தது.

"டேய் ராமு. கதிரை ஒண்டு கொண்டு வாடா" என்ற சின்னத்தம்பியின் குரல் கேட்ட வேலைக்காரன் எட்டிப் பார்த்து விட்டு மரக்கதிரை ஒன்றைத் தூக்கி வந்து முற்றத்தில் போட்டான்.

காசிப்பிள்ளை வரும்போதே "உந்தக் கோதாரியைக் குடிச்சு உடம்பைப் பழுதாக்காதையுங்கோ என்டு எத்தினை நாள் சொன்னனான்." என்று தாளம் போட்டவாறே தான் கொண்டு வந்த இரட்டை வடி வெள்ளைச் சாராயத்தை எடுத்து மேப்போவில் வைத்தார். அதைக் கண்டதும் சின்னத்தம்பிக்கு மகிழ்ச்சி பொங்கினாலும் அவர் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

சின்னத்தம்பி கேட்டார் "நாளையில்லைக்கு வழக்குத் தவணை. அப்புக்காத்தரை ஒழுங்கு பண்ணிப் போட்டியளோ?"

காசிப்பிள்ளை ஒரு பெருமூச்சுடன் சொன்னார். "ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைத் தான் ஒழுங்கு பண்ண இருந்தன். அவர் மாட்டனென்டுட்டார்".

"ஏனாம்?"

"லெக்சன் வருகுதாம். இந்த வழக்கிலை தான் ஈடுபட்டால் முழு தாழ்த்தப்பட்ட சாதிக்காரரும் நமக்கு எதிராய் திரும்பியிடுவாங்களாம்."

"ம்.. அப்பிடியெண்டால் சண்முகநாதனைக் கேட்டுப் பாராதேங்கோவன்" என்றார் சின்னத்தம்பி.

"அவரும் அவ்வளவு மனப்படியில்லை. நாங்கள் கெஞ்சின பிறகு திங்கள் வந்து தவணை எடுத்துத் தாறதாம். மிச்சத்தைப் பிறகு பாப்பம் எண்டார்." என்றார் காசி கவலையுடன்.

சின்னத்தம்பி "அது பறவாயில்லை. நீங்கள் கேளாட்டியும் தவணை தான் போகும். இன்னும் இரசாயன றிப்போட் வரயில்லை. இனி அது வந்து நான் குற்றப்பத்திரிகை தயார் செய்து விசாரணை துவங்க லெக்சன் முடிஞ்சுபோம்.. பிறகு பொன்னரையே ஒழுங்கு பண்ணலாம்" என்றார் வெகுநிதானத்துடன்.

"அப்ப அதுவரை பிணை இல்லையே?"

"குற்றப் பத்திரம் தாக்கல் செய்யாமல் பிணைக் கேட்க ஏலாது. நாங்கள் ஆட்சேபிக்காமடிப் பிணை குடுக்கலாம். ஆனால் இது கொலை வழக்கு.. நாங்கள் ஆட்சேபியாமடில் நீதவானுக்கு வீண் ஐயிச்சம் வந்திடும். அது பிறகு உங்களுக்குத் தான் நல்லதில்லை."

"பறவாயில்லை. கொஞ்ச நாள் உள்ளை இருக்கட்டும். இப்ப வெளியிலை வர சரவணையும் ஏதும் செய்யப் பாப்பான்" என்றார் காசிப்பிள்ளை அவசரமாக.

சின்னத்தம்பி வெள்ளைப் போத்தலைத் திறந்து அரைக் கிளாஸ் ஊற்றிக் குடித்து விட்டு ஒரு கேலிச் சிரிப்புடன் சொன்னார். "சரவணைக்குப் பயம் இருக்குத்தான்"

"ம். என்ன செய்யுறது. அவனுக்குப் பின்னுக்கு வீரபாகு முதலாளி நிக்கிறார். எலெக்சன் நேரம். எல்லாரும் அவங்களுக்கு உதவ ஓடிப் போய் முன்னுக்கு நிப்பாங்கள்."

"உங்களட்டையும் ஆயிரம் இரண்டாயிரம் வோட் இருந்தால் உங்களுக்குப் பின்னாலையும் நிப்பாங்கள்தானே?"

"அது எங்கடையளட்டை ஒற்றுமை இல்லை. ஆலடிவெட்டை இளந்தாரியள் எல்லாம் இப்பவே கொமினிஸ்ற் கந்தையாவுக்குப் பின்னாலை போட்டுதுகள்" எனச் சலிப்புடன் சொன்னார் காசிப்பிள்ளை.

சின்னத்தம்பியின் முகம் திடீரென இறுக்கமடைந்தது. "எல்லாம் இவன் குடியரசு கந்தப்பன்ரை வேலை. எல்லாச் சாதியளிலையும் உள்ள இளம்பொடியளைத் திரட்டி கந்தையாவுக்கு வேலை செய்ய இறக்கியிருக்கிறான். இருக்கட்டும் ஏதாவது ஒரு சாட்டிலை லெக்சன் முடியும் மட்டும் வெளியிலை வராமல் அவனை உள்ள போடுறனோ இல்லையோ பார்"

அந்த வார்த்தைகள் காசிப்பிள்ளைக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. கந்தையா மட்டும் வென்று விட்டால் தங்கள் சாதி அதிகாரம் பறிபோய்விடும் என்றே அவர் நம்பினார்.

"எண்டாலும் கந்தப்பர் நரியன் - நீங்கள் விரிக்கிற வலையைப் பிரிச்சுப் போடுவன்" என்றார் காசிப்பிள்ளை மெல்லிய தயக்கத்துடன்.

"காசி சின்னத்தம்பியின்ரை கெட்டித்தனத்தை நீங்கள் இருந்து பாருங்கோ. குடியரசானை சனம் காறித் துப்ப வைச்சு உள்ளை போடுறன்" என்று விட்டு கடகடவெனச் சிரித்தார் சின்னத்தம்பி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள பிரதேச அரசியல் செல்வாக்குகள் தமிழ் கல்வியை நிலை தடுமாற வைக்கின்றன!



ஊவா மாகாணத்தில் நூற்றிதொன்னூற்றி ஆறு தமிழ் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் இருபத்தாறு முஸ்லிம் பாடசாலைகளும் அமைந்துள்ளன. தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர்கள், அதிபர்கள் நியமனம் பெறும்போது அல்லப் பிரதேச சிங்கள அரசியல்வாதிகளின் கைகள் ஓங்கி விடுகின்றன. அதனால் கோலதிக ஆசிரியர்கள் ஏரே பாடசாலையில் சேவையாற்ற நியமனம் பெறும் அதேவேளை, பல பாடசாலைகளில் குறித்த பாடங்களுக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமல் உள்ளனர். அதேவேளை பாடசாலைகளுக்கு மகாவித்தியாலயங்களில் முதலாம் தர அல்லது இரண்டாம் தர முதலாம் வகுப்பு அதிபர்கள் நியமனம் பெற வேண்டும். ஆனால் சிங்கள அரசியல்வாதிகள் மூன்றாம் தரம் அல்லது அதிபர் சேவையை சாராத ஆசிரியர்களுக்கு அதிபர் நியமனத்தை பெற்றுக் கொடுக்கின்றனர். இவை தமிழ் கல்வியையும் பாடசாலை கட்டமைப்பையும் கீழிறங்கச் செய்யும் ஏற்பாடுகளின் மறுவடிவமேயாகும்.

அப்புத்தளை பகுதி மகாவித்தியாலயம் ஒன்றில் ஆறு கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர். அருகில் அமைந்துள்ள மகாவித்தியாலயங்களுக்கு பயிற்சி பெற்ற கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் நியமிக்கப்படாத நிலை தொடர்ந்தும் காணப்படுகிறது.

பண்டாரவளை கல்விக் கோட்டத்தின் நகரங்களுக்கு அண்மையில் உள்ள மகா வித்தியாலயங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்களும் நியமனம் பெற்றுள்ளனர். பலர் இருபது பாடவேளைக்கு குறைவான நேர அட்டவணை வைத்து சேவை செய்கின்றனர். பல ஆரம்ப பாடசாலைகள ஆங்கில ஆசிரியர் இன்றியும், பல மகாவித்தியாலயங்கள் தரம் 11 மாணவர்களுக்கு பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் பரீட்சைக்கு வழிகாட்ட இல்லை என்ற குறைபாட்டுடனும் இயங்குகின்றன. பல பாடசாலைகளில் மூன்று, நான்கு சிங்களமொழி ஆசிரியர்கள் உள்ளனர். அவர்கள் அரசாங்க பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தாமல் உள்ளனர். அதற்கு மாணவர் அக்கறையின்மை காரணமான முன்மொழிவுகளை வைத்து வருகின்றனர். மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்தாத ஆசிரியர்கள் வகுப்பறையில் செய்திடும் வேலைகளில் எந்த மாணவரும் உரிய பயனைப் பெறுவது இல்லை. வீடுகளில் தெரிந்து வைத்துள்ள உரையாடல்களை மட்டுமே அவ்வாசிரியர்கள் தமது திறமையாக வெளிப்படுத்திக் காட்டுகின்றனர்.

ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கென நாட்டில் புதிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளுக்கு புதிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் ஆரம்பப் பிரிவு மூடப்படும் நிலையிலுள்ள மகாவித்தியாலயங்களுக்கு மேலதிகமாக ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்டு வருகின்றனர். அதேவேளை ஆரம்ப பிரிவுப் பாடசாலைகளில் அப்பாடசாலைக்கு அவசியமற்ற விஞ்ஞான ஆசிரியர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனை மாகாணசபையின் தமிழ் உறுப்பினர்களும் சரிசெய்ய மறுக்கிறார்கள். அவர்கள் கல்விச் செற்பாடுகளின் சுற்றறிக்கைகளை தெரிந்துகொண்டுள்ள இணைப்பு அதிகாரிகள் இன்றி உள்ளார்கள் அல்லது அவர்கள் எழுதும் கடிதங்களை சிங்கள அதிகாரிகள் கருத்திற்கொள்வதில்லை என்பதையும் நடைமுறை வெளிச்சங்களாக ஊவா மாகாணம் கண்டு வருகிறது.

பாடசாலைகளுக்கு சிறந்த முகாமைத்துவம் அவசியமாகிறது. அங்கே அனுபவமும், அதிக சேவை காலமும், மூமுக்கமும் நிறைந்த அதிபர்கள் தேவைப்படுகிறார்கள். அண்மைக் காலங்களில் வெளியடை கல்வி வலயத்திலும், மொனறாகலை கல்வி வலயத்திலும், பண்டாரவளை கல்வி வலயத்திலும் மிக மோசமான நிகழ்வுகளுடன் அதிபர் நியமனங்கள் நடந்தேறி உள்ளன. அதிபர் கதிரையில் இருந்த இருவர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அவர்களின் இடங்களுக்கு மூன்றாம் தர அதிபர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். ஏற்கனவே வெலிமடை வலயத்தில் இரண்டு பெண் அதிபர்கள் பதவியிலிருந்து மாறிச் சென்றனர். அவர்களின் இடத்திற்கு அவர்களிலும் சேவை குறைந்த, அதிபர் தரத்தில் குறைந்தவர்கள் நியமனம் பெற்றனர். அதேபோலவே மொனறாகலையில் பெண் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டு முன்னாள் அதிபரின் தம்பி முறையானவர் நியமனம் பெற்றுள்ளார். இதனை உள்ளூர் சிங்கள அரசியல்வாதிகளே செய்துள்ளனர். ஊவா மாகாண தமிழ் உறுப்பினர்கள் பெண் அதிபரின் நியாயமான கோரிக்கைகளை கண்டு பிழையும் அவருக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்காமல் உள்ளனர். அதேபோன்று பண்டாரவளை கல்வி வலயத்தில் ஏரே நாளில் நியமனம் பெற்ற மூன்றாம் தர பெண் அதிபருக்கு பாடசாலை திறவாகம் வழங்கப்பட்டுள்ளது. அதே திகதியில் நியமனம் பெற்ற ஆண் அதிபருக்கு முஸ்லிம் பாடசாலையில் ஆசிரியப் பணி வழங்கப்பட்டுள்ளது. அதே முஸ்லிம் பாடசாலை அதிபர் தரம் இரண்டில் சித்தி பெற்ற திகதியில் தரம் இரண்டு அதிபராக நியமனம் பெற்ற பெண் அதிபரும் ஒரு பாடசாலையில் உதவி அதிபராகக் கடமையாற்றுகிறார். அதேவேளை முதலாம் தரம் அதிபர் சேவையில் உள்ள ஒரு பெண்மணி இரண்டாம் தர அதிபர்களின் கீழ் சேவை செய்ய பலமுறை நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் திகக்கத்தின் மேலாண்மைபற்றிப் பேசும் பெண்கள் அமைப்பு இவை பற்றியும் பேசலாம். ஆண் அதிகாரிகள், அரசியல்வாதிகளின் கூட்டாளிகளுடன் மேசைகளில் சுதிசமமாக அமர்ந்து காரியங்களை சாதிப்பது ஊவா மாகாண கலாசாரமென்றால் அந்தகைய நியமனம் அதிபர்கள் சேவையை இப்படி கொச்சைப்படுத்துவதாகவும் கோட்டத் தமிழர்களின் குருக்கு வழிப்பதவிப் போட்டி பற்றியும் நிறைய விமர்சனங்களை தோற்றுவித்து உள்ளது. அதேவேளை இப்போது உள்ள அதிபர்களை விட பல பெண் ஆசிரியைகள் கல்வித்தகைமை, அனுபவத் திறமை, நியமனத் தன்மைகொண்டு விளங்குகின்றனர். அவர்கள் சிலரின் தெண்டாசிரியர் நியமனம் குறித்தும் தெரியப்படுத்தி வருகின்றனர்.

இன்று ஊவாவின் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கௌரவமும், நிர்வாகத்திறனும் மேம்பட வேண்டுமானால் பாடசாலைகள், மகாவித்தியாலயங்களின் தன்மைகளுக்கு ஏற்ப தரவரிசை வரைப்படம் ஒன்றின் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டு அதிபர்கள் நியமனம் பெற்ற சேவைக்காலத்துக்கு ஏற்றவாறு புள்ளிகள் வழங்கப்பட்டு நியமனம் வழங்கப்பட வேண்டும். தமது சொந்த ஊரில் அரசியல் சக்தியுடன் சேர்ந்து இயங்கும் அதிபர்களை லயங்களை கடந்து நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் அவர்கள் பேசும் 'தமது ஊர்' என்ற பிரதேசவாதமும் நிறுத்தப்பட வேண்டும். *

அப்புத்தளைத் தொகுதியின் தொழிலாளர் வாழ்க்கை பின்னடைவுக்கு காரணங்கள் என்ன?

இலங்கை இதழியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் அண்மையில் அப்புத்தளை மீரியபத்தை சின்னகங்கணக்கு தோட்டத்திற்கு விஜயம் செய்து, பதுளை மாவட்ட மலையக மக்களின் கல்வி, அரசியல், சமூக விடயங்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டனர். மாணவிகளான செல்வி.ஏ.சந்தியா அவர்களும் செல்வி.எஸ்.சுதர்சினி அவர்களும் இப்பிரதேச மாணவர்கள், இந்து இளைஞர் மன்றத்தினர், தொழிலாளர்கள் எனப் பலரிடமும் மேற்குறித்த விடயம் பற்றி கருத்துக்களை கேட்டறிந்தனர். இப்பிரச்சினை குறித்து அலுதுமுல்லை பிரதேசசபை உறுப்பினர் திரு.எஸ்.சிறிகாந்த் (மலையக மக்கள் முன்னணி), கொஸ்லாந்தை கல்விக் பாலா, சிரேஷ்ட அதிபர் திரு.சன்.நித்தியானந்தன் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

விரக்தியில் கல்லூரி மாணவர்கள்

மலையக மக்கள் வாழ்வு மிகவும் பின்தங்கிக் காணப்படுகிறது. அவர்கள் கல்வியிலும் மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. தொழிலாளர் வேலைவாய்ப்பு பொருளாதார விருத்தி சவால்களும் இருப்பதாகத் தெரிகிறது. இவற்றுக்கு காரணம் என்ன? இப்பிரச்சினை களையப்பட தாங்கள் கூற விளைவதென்ன?

திரு.சன்.சிறிகாந்த் (மலையக மக்கள் முன்னணி)

தேயிலைத் தோட்டங்கள் மூடப்பட்டு வருகின்றன. பிழையான ஒப்பந்தங்களால் தொழிலாளரின் சம்பளம் உயர்வில்லை. புதிதாக தோட்டவேலைகளுக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவற்றை மாற்றி அமைக்க வேண்டும். இன்று மிக அவசியமாக இம் மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் விடைக்க வழி செய்யப்பட வேண்டும். இளைஞர், யுவதிகளும் புதிய கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இவர்களின் முதலாவது தொழில் தேயிலைத் தோட்டத்தொழிலாகவும் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் முகவரி உள்ள மனிதர்களாக மதிப்பீடு செய்யப்படுவார்கள். அவர்கள் இரண்டாவது தொழிலாக பசு வளர்ப்பு, மரக்கறிச் செய்கை, மலர் வளர்ப்பு, தையல் தொழில், வியாபாரம், அச்சுத்தொழில் கல்வியறிவில் ஈடுபட வேண்டும். அதே வேளை [illegible] மக்களின் முயற்சிகளை பாராட்ட வேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இவை எமது உடனடி தேவையாகும். அத்துடன் அரசாங்க வேலை வாய்ப்பு படித்த இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

கவிஞர் கொஸ்லாந்தை பாலா

கல்வியில் நாம் இன்று மிகவும் வீழ்ந்து கிடக்கிறோம். மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்கப்படவில்லை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் பாடங்களில் எமது மாணவர் மிக மோசமான பெறுபேறுகளை அடைந்துள்ளனர். இதற்கு பல காரணங்கள் உண்டு. மாணவர் இடைவிலகல் அதிகரித்துள்ளது. மாணவர் படிப்பை விட ஆடம்பர விடயங்களுக்கு விரும்பிச் செல்கின்றனர். இது சமூக அழிவை ஏற்படுத்தும் விடயமாகும். ஏழை பெற்றார்கள் என்ன செய்வார்கள்? தோட்டத்தில் மூன்று நாள் வேலை. ஐந்து பேர் சாப்பிட வேண்டும். பல நாட்கள் மாணவர்கள் பட்டினியுடன் பாடசாலை சென்றால் படிக்க முடியுமா? அதனால் மாணவர்கள் இடைவிலகி கொழும்பு செல்கின்றனர். கூலிகளாக மாறுகின்றனர். தோட்டங்களில் ஒற்றுமை குறைந்துள்ளது. தனிநபர் சுயநலத்திட்டங்கள் அபிவிருத்தியாக பேசப்படுகின்றன. இதனால் எமது சமூகம் முன்னேற முடியாமல் திண்டாடுகிறது.

சிரேஷ்ட அதிபர் என்.நித்தியானந்தன் (சிலங்கை அதிபர் சேவை) பல அரசியல் பிரச்சினைகளுக்கு இப்பிரதேசம் முகங்கொடுத்து பல அழிவுகளைச் சந்தித்துள்ளது. எழுபது சதவீதம் தமிழ்மக்களைக் கொண்டு விளங்கிய கொஸ்லாந்தை பிரதேசம் கட்டாயமாக இந்திய வம்சாவழி மக்கள் நாடுகடத்தப்பட்ட காரணத்தாலும், தோட்ட சீர்திருத்த சட்டத்தால் பல தமிழ் முதலாளிமார் தோட்டங்களை மூடிவிட்டதாலும், தோட்டங்கள் பிரித்து விற்கப்பட்டுள்ளதாலும் பல தோட்டங்கள் மக்கள் வாழ்ந்த அடையாளம் மறைந்து காடாகியுள்ளன. தேயிலைத் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டு விட்டன. இவை ஒரு இன அழிவை எதிர்பார்த்து செய்யப்பட்டவை. பாராளுமன்றத்திலும் பிரதிநிதி இல்லை. மாகாண சபையிலும் அப்பத்தனை, பண்டாரவளை ஹலி-எல தொகுதிகளின் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. தோட்டத் தொழிலாளிகளோடு மிக நெருக்கமான உறவுகளை வைத்திருந்த வேட்பாளர்கள் தோல்வியடைந்துள்ளனர். பெரும்பான்மை இன வேட்பாளர்கள் வாக்குகளை சிதைத்து, பறித்து வெற்றி பெற்றுள்ளனர். அதனால் இப்பிரதேசம் அபிவிருத்தியின்றிக் கிடக்கிறது.

மக்களை சிந்திக்கவிடாமல் மயங்கிய நிலையில் வைத்திருப்பதும், மாலை மரியாதை செய்து சிலரைத் துதிப்பதும் எவ்வளவு பின்னடைவைத் தருகின்ற நாடகம் என்பது இன்று நன்றாகத் தெரிய வந்துள்ளது. இம்மாவட்டம் ஒரு மாற்றத்தை நோக்கிச் செல்லவேண்டிய காலத்திலுள்ளது. இளைஞர்களிடம் புதிய சிந்தனையின் பிரவாகம் தோன்றி உள்ளது. 'மலையக மக்கள் மலையகக் கொடியின் கீழ் அணிக்க வேண்டும்' என்று மலையக காந்தி ராசலிங்கம் அவர்கள் [illegible] கூறியது இன்றும் பொருந்திவருகிறது. *

மலையகம் — நிர்மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டெசோ மாநாட்டில் சரத் பவார்;

நேரு குடும்பம் மீண்டும் அரசியலில் பிரவேசித்ததால் இழப்பை சந்தித்த முக்கியமான கட்சி பி.ஜே.பி. என்றால் முக்கிய தனிநபர் அரசியல்வாதி பவார் ஆவார். அவரது சொந்த மாநிலமான மஹாராஷ்டிராவிலும் மத்தியிலும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் சரத்பவார் கட்சி என்று வெறும் பங்காளிக் கட்சியாக மட்டுமே உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மம்தா சோனியாவுக்குக் கொடுத்த குடைச்சல் பிசுபிசுத்துப் போனாலும் அளவுக்கு உயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் தொடர்ந்து காங்கிரசிலேயே இருந்திருப்பின் இன்று பிரணாப்முகர்ஜியின் இடத்தை அல்லது அதைவிட முக்கிய இடத்தை அவர் பெற்றிருக்கவும் கூடும்.

நேரு குடும்பம் மீண்டும் அரசியலில் பிரவேசித்ததால் இழப்பை சந்தித்த முக்கியமான கட்சி பி.ஜே.பி. என்றால் முக்கிய தனிநபர் அரசியல்வாதி பவார் ஆவார். அவரது சொந்த மாநிலமான மஹாராஷ்டிராவிலும் மத்தியிலும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் சரத்பவார் கட்சி என்று வெறும் பங்காளிக் கட்சியாக மட்டுமே உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மம்தா சோனியாவுக்குக் கொடுத்த குடைச்சல் பிசுபிசுத்துப் போனாலும் ஏற்பட்டதில் வியப்பேதும் இல்லை. கடந்த ஒரு வாரமாகவே சரத்பவாரின் கட்சி மத்திய அரசிலிருந்து இந்தா வெளியேறுகிறது; அந்தா வெளியேறுகிறது என்பது போல் படம் காட்டப்பட்டு வந்தது.

ஆனால், இரண்டு அமைச்சுப் பதவிகளை மத்திய அரசில் பெற்றிருப்பதுடன் மஹாராஷ்டிரா மாநிலத்திலும் காங்கிரசுடன் ஆட்சியை பங்குபோட்டுக் கொண்டுள்ள சரத்பவாரின் கட்சி ஆட்சியின் பலன்களை இழக்கத் தயாரில்லை. மம்தா பிரிந்து சென்ற போதாவும் பிரிட்டனால் என்ன என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பே கடந்த வாரநாடகம் என்கின்றனர் நோக்கர்கள். மம்தா பிரட்டியதால் மூக்குடைபட்டதே மிச்சம் என்றாலும் அதனால் சோனியாகாந்திக்கு

2009 இல் இறுதி யுத்தத்தின் போது சரத்பவார் முழுக்க முழுக்க சோனியா காந்தியுடன் இணைந்து நடந்த ஒருவரே என்பது கவனிக்கத் தக்கது. டெசோ மாநாடு ஏற்கனவே காங்கிரஸ் - தி.மு.க உறவில் ஒரு சிறு நெருடலை ஏற்படுத்தியே இருக்கிறது. இதில் "எழுமே முடிந்த முடிவு" என்ற தனது ஆரம்ப தீர்மானத்தை கைவிடும்படி கலைஞரை காங்கிரஸ் கேட்டுக்கொண்டது. கலைஞருடன் ஆகக் கூடிய நட்புறவில் உள்ள தமிழக காங்கிரஸ்காரரான உள்துறை அமைச்சர் சிதம்பரம் சென்னைக்குப் பறந்து வந்து நேரில் கலைஞரிடம் மண்டியிட்டு இதனை சாதித்துக் கொண்டார். இப்போது புதிதாக சரத்பவார் டெசோ மாநாட்டில் கலந்து கொள்வது மூலம்

காங்கிரசுக்கு நெருக்கடி கொடுக்கவும் தயார்!

காங்கிரஸ் தலைமையிலான ஆளும் கூட்டணிக்குள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக உள்ளிட்டு நெருக்கடி கொடுக்கும் கொள்கையாக தலையெடுத்து வந்து கொண்டிருக்கிறது. அதில் புதிய வடிவமாக கூட்டணியின் ஒரு முக்கிய கட்சியான சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி புதிதாக சோனியா காந்திக்கு தலையிடி தரத் தொடங்கியுள்ளது.

மஹாராஷ்டிராவைத் தளமாகக் கொண்ட சரத்பவார் 1999ல் "இத்தாலியரான சோனியா இந்தியப் பிரதமராகக் கூடாது" என்ற கோஷத்துடன் காங்கிரசை விட்டு வெளியேறி வந்தவர். எனினும் தமிழகத்தில் மூப்பனார், மேற்குவங்கத்தில் மம்தா பானர்ஜி போல மஹாராஷ்டிராவில் காங்கிரசை முழுமையாக வேரறுக்க இந்த சரத்பவாரால் முடியவில்லை. காரணம் அம்மாநிலம் பாரம்பரியமாக காங்கிரசின் கோட்டையாக விளங்கி வந்ததே. சரத்பவார் பிரிந்தாலும் இன்றும் அந்த மாநிலத்தை ஆளும் முதல்வர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவரே. பின்பு சோனியாவுடன் சரத்பவார் அணிசேர்ந்தாலும் பழைய கசப்பான நிகழ்வுகள் அவ்வப்போது இருதரப்புக்கும் நினைவுகூர வரவே செய்கின்றன. நிர்வாகத் திறமை வாய்ந்தவரான சரத்பவார் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) தலைவராகவும் இந்த ஆண்டு வரை செயலாற்றினார். உண்மையில் பிரதமராகும் சகல தகுதிகளும் கொண்ட மக்கள் செல்வாக்கும் மிக்க தலைவர் என்பது உண்மைதான். எனினும் சோனியாவுடன் மட்டுமன்றி இந்திராவுடனேயே சரத்பவார் முட்டிமோதிக் கொண்டுள்ளதை வரலாறு கூறுகிறது.

1982ல் இவ்வாறு பிரிந்து காங்கிரஸ் (எஸ்) என்ற தனிக்கட்சியை அவர் தொடங்கி இருந்தார். இந்திரா மறைவை அடுத்து ராஜீவுடன் சமரசம் செய்துகொண்ட சரத்பவார் காங்கிரசில் மீண்டும் இணைந்தார். இதனால் 1991ல் ராஜீவின் திடீர் மரணத்தினை அடுத்து பிரதமராகுவதற்கு விட்டவாக பி.வி.நரசிம்மராவுடன் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி அரசுக்கு கூட்டணிக் கட்சிகள் பலவகையிலும் நிபந்தனை விதிப்பது சமீப காலமாக அதிகரித்தே வருகிறது. பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாக சரத்பவார் பூரண ஆதரவு தந்த போதிலும் அமைச்சரவையில் தனக்கு இணையானவரான ஏ.கே.அந்தோணி பிரதமருக்கு அடுத்த இருக்கையில் அமரவைக்கப்பட்டது சரத்பவாருக்குப் பிடிக்கவில்லை. வழக்கமாக இந்த இருக்கையில் முகர்ஜிதான் உட்கார்வார். 72 வயதான சரத்பவார் தனது வாழ் நாளில் கடைசித் தடவையாக அமைச்சராக இருக்கிறார் என்றே கருதப்படுகிறது. அடுத்துவரும் 2014 லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியிழந்து பி.ஜே.பி.அறியாசனம் ஏறும்பட்சத்தில் பவாருக்கு தற்போதுள்ள மதிப்பும் இல்லாது போகலாம். பி.ஜே.பி.யுடன் மஹாராஷ்டிராவில் கூட்டணி வைத்துள்ள பால் தாக்கரேயின் கட்சி இருக்கும் வரை சரத்பவாரால் பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைக்க இயலாது. இல்லாவிடில் பி.ஜே.பி. கூட்டணியில் வலுவான சரத்பவார் சங்கமமாகியிருப்பார்.

7ரேஸ் தாகிவிட்ட தால் முன்னாள் ஜனாதிபதி பதவிக்காலத்து முயற்சிக் காலம் என்று சரத்பவார் கருதுவதாகக் கூறப்படுகிறது. அல்லது 2014ல் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிடில் பி.ஜே.பி. ஆதரவுடன் பிரதமர் பதவியை எட்டிப்பிடிக்கும் கனவில் சரத்பவார் உள்ளார் என்றும் ஊகங்கள் நிலவுகின்றன. 2014ல் காங்கிரஸ் தோற்றதும் பிரதமராவதற்கு சரத்பவார் மட்டுமல்ல ஜெயலலிதா, பி.ஜே.பியின் நிதீஷ், கம்யூனிஸ்டுகள், முலாயம் சிங் என்ற கட்சி வேறுபாடு கடந்து கனவில் மிதக்கும் தலைவர்களுக்குப் பஞ்சமே இல்லை. தங்கள் தங்கள் மாநிலத்தில் அதிக எம்.பிக்களை வென்றெடுத்துவிட்டால் போதும்; டில்லியில் பேரம் பேசி சாதித்துவிடலாம் என்பது இந்தத் தலைவர்களின் எண்ணமாகும். இந்த வகையில் தனது பெறுமதியை சோனியாகாந்திக்கு உணர்த்த வேண்டுமென்ற திடீர் ஆசை சரத் பவாருக்கு

தூக்கமில்லாத இரவுகளை ஏற்படுத்தலாமே என்ற நப்பாசை சரத்பவாருக்கு ஏற்பட்டுள்ளதாம். "தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வந்தால் போதும்" என்ற நிலைப்பாடு தான் இது.

சரத்பவாரிடம் 9 எம்பிக்கள் உள்ளனர். 19 எம்பிக்களைக் கொண்ட மம்தாவிடமே பணியாமல் வைகறிசையைக் காட்டிய காங்கிரஸ் பவாரிடம் பணிய வாய்ப்பு மிகக் குறைவே. இவ்வகையில் 19 எம்.பிக்களை தி.மு.க தொடர்ந்தும் காங்கிரசின் விசுவாசமான கூட்டாளியாக இருப்பது மம்தாவுக்கும் சரத்பவாருக்கும் ஆச்சரியமும் எரிச்சலும் தரும் விடயமாகும். ஏனவே தி.மு.கவையும் உசுப்பேற்றி விடவேண்டும் என்ற வியூகம் வகுக்கப்பட்டுள்ளதாம்.

ஆனால் தி.மு.கவோ காங்கிரஸ் கூட்டணியிலிருந்து வெளியேறுவதைப் பற்றியல்லாது அக்கூட்டணியில் இன்னும் புதிதாக எத்தனை அமைச்சுப் பதவிகளைப் பெறலாம் என்ற தீவிர சிந்தனையிலுள்ளது. சமீபத்தில் நடக்கவுள்ள அமைச்சரவை மாற்றத்தில் தனக்கு தரப்படவேண்டிய இரு அமைச்சர் பதவிகளைப் பெற தி.மு.க தயாராகி விட்டது. அதேவேளையில் தி.மு.க தலைவர் டெசோ மாநாட்டை கூட்டவுள்ளதும் அதில் கலந்து சிறப்பிக்கும்படி பல கட்சித்தலைவர்களுக்கு அழைப்பு விடுத்ததும் சரத்பவாருக்கு புதிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி உள்ளது எனக் கருதப்படலாம். டெசோ மாநாட்டில் சரத்பவார் கலந்து கொள்வார் என அறிவித்தது மூலம் காங்கிரசின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளதை பார்க்கலாம். இதன்மூலம் காங்கிரஸ் தி.மு.க இடையே சிண்டுமுடிய கிடைத்த அருமையான வாய்ப்பை பவார் சரியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இதற்கு முன் ஒரு போதும் பவார் ஈழ அனுதாபியாக தன்னைக் காட்டிக் கொண்டவரல்ல. அவரது எதிரியான பால் தாக்கரேயாவது அவ்வப்போது ஈழ அனுதாபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

புதிய தலைவலி காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ளது. கலைஞரைப் பொறுத்தவரை "அகில இந்திய அளவில் தலைவர்களை அழைத்து ஈழ அனுதாப மாநாட்டை நான்தானே நிகழ்த்தினேன்; ஜெயலலிதா அல்லவே" என மார்தட்டிக்கொள்ள இதன் மூலம் இயலுமாகும். பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் பி.ஜே.பியின் ஜர்கண்ட் தலைவர் யஷ்வந்த் சின்ஹா முதலான சிலரும் ஈழ அனுதாபப் போக்குகொண்டவர்களாயினும் இவர்கள் காங்கிரசின் பரமவைரிகள் என்பதால் இவர்களை அழைக்க கலைஞர் சற்றே பின்னடித்துள்ளார். ஈழ அனுதாபிகளில் முன்னிற்பவரான முன்னாள் மத்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மரணப்படுக்கையில் இருப்பதால் அவரையும் அழைக்கமுடியாது. தவிரவும் அவர் காங்கிரசிற்கும் விரோதியாவார்.

எனவே காங்கிரசின் கூட்டணிக்குள் இருக்கும் தலைவர்களை மட்டுமே டெசோவுக்கு அழைத்து மாநாடு நடத்த முடியும் என்ற நிர்ப்பந்தம் கலைஞருக்கு உள்ளது. சரத்பவாரும் இதற்கு இணக்கமாக நடப்பதால் சோனியா காந்தி டென்ஷனாவதற்கு நிறைய வாய்ப்புண்டு. மற்றபடி இதனால் டில்லியில் மன்மோகன் அரசு கவிழலாம் என்று எவராவது நினைத்தால் அது அரசியல் முதிர்ச்சியீனமேயன்றி வேறல்ல. 19 எம்.பிக்களைக் கொண்ட மம்தா சோனியாவை இப்படி உலுக்கினால் 9 எம்.பிக்களைக் கொண்ட தனது கட்சி அதில் அரைவாசி டென்ஷனையாவது சோனியாவுக்குத் தரலாமே என்றுதான் சரத்பவாரின் திட்டம். தி.மு.கவுக்கோ சோனியாவை உலுப்புவதைக் காட்டிலும் அ.தி.மு.கவை விட தி.மு.க ஈழ அனுதாபம் அதிகமுடைய கட்சியெனக் காட்டுவதே பிரதான முன்னுரிமையாகும்.

அரிகிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கலைப்புகள் சிசுக்கொலைகள் காரணங்கள்...!

தவறான உறவுகளின் மூலம் கர்ப்பமடையும் பெண்கள் சட்டத்திற்கும் சமூகத்திற்கும் பயந்த நிலைமையிலும் தங்களது குடும்பக் கௌரவத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தாலும் சட்ட விரோதமான கருக் கலைப்புக்களில் ஈடுபடுவதுடன் பிரசவிக்கின்ற சிசுக்களை யாருக்கும் தெரியாமல் குழிதோண்டிப் புதைக்கின்ற கொடூரத்தையும் செய்கின்றனர்.

சமகாலங்களில் தொடர்பாக சமூகமாக வீடுகளில் பல்வேறு செய்திகள் வெளியாகியிருந்தன. குறித்த சிசுக்கொலைகளின் சூத்திரதாரிகள் தொடர்பாக ஆராயுமிடத்து அந்த சிசுக்களைப் பிரசவித்த தாய்மார்கள் தான் அந்தப் பாதகச் செயல்களின் சூத்திரதாரிகள் என புலனாகின்றபோது எவராலும் ஜீரணிக்க முடியாமல் இருந்துவிடுகிறது. அத்துடன் தாய்மார்களே தமது குழந்தைகளை கைவிட்டு தப்பிச் சென்ற சம்பவங்களும் உண்டு. இந்த வகை சம்பவங்கள் இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்று வருகிறது என்பது தான் இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

குறித்த சில பெண்கள் தவறான முறையில் உறவுகொண்டு அதன் விளைவாகக் கருவடைந்து பிரசவிக்கின்ற சிசுக்களைப் கொலை செய்தபின்னர் மண்ணுக்குள் புதைத்துவிடும் பற்றை மறைவுகளில் கைவிட்டுவிடும் தலைமறைவாகி விடுகின்றனர். பெண்களைப் பொறுத்தவரையில் திருமணம் முடித்து கணவனை இழந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் திருமணம் முடிக்காதவர்கள் போன்ற நிலையிலுள்ள பெண்கள் சிலர் இந்த வகை தவறான உறவுகள் மூலம் குழந்தைகளை பிரசவித்து மண்ணுக்குள் புதைத்துவிடும் அநாதரவான நிலையில் கைவிட்டுவிட்டும் தப்பிச் செல்கின்றனர். ஆனாலும் இவ்வாறு தப்பிச் செல்கின்ற பெண்கள் பொலிசாரின் வலையில் சிக்காமல் இல்லை. பொலிசாரின் தேடுதலில் அகப்பட்ட குறித்த பெண்கள் பின்னர் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக செய்திகள் வெளிவந்த போதிலும் குறித்த தகாத உறவுகளில் சம்பந்தப்பட்ட ஆண்கள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டது தொடர்பான செய்திகள் எவையும் இருளறையில் பகிரங்கமாக வெளியானதாகத் தெரியவில்லை.

குறிப்பாக போருக்குப் பிந்திய காலங்களில் முழு நாடாளாவிய ரீதியிலும் இவ்வாறான தவறான உறவுகள் மூலம் கர்ப்பமடைந்து குழந்தை பிரசவித்தல் அத்துடன் பிறந்த குழந்தைகளை ஏதோவொரு வகையில் கொலை செய்துவிடுதல் அல்லது பிரசவித்த சிசுவை அப்படியே அநாதரவான நிலையில் கைவிட்டுச் செல்கின்ற சம்பவங்கள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் குருநகரில், பருத்தித்துறையில், சுன்னாகத்தில், விசுவமடுவில் என பல்வேறு இடங்களிலும் தவறான உறவுகளால் சிசுக்களைப் பிரசவித்து அந்த சிசுக்களின் சடலங்கள் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட சில மணிநேரத்திலேயே அவை கண்டுபிடிக்கப்பட்ட நேரடி சிசுக்களை பிரசவித்த பெண்களை பொலிசார் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பெண்களின் விசாரணையின் போது சிலர் இறந்த நிலையிலேயே சிசுக்களை பிரசவித்ததாகத் தெரிய வருகின்றது. அதாவது தவறான உறவு மூலம் கர்ப்பமடையும் பெண்கள் கருவிலேயே சிசுக்களை அழிப்பதற்காக பலவிதமான நாட்டு வைத்திய முறைகளை பின்பற்றுகிறதுண்டு. இதுவே இறந்தநிலையில் சிசுக்களைப் பிரசவிப்பதற்கான காரணமாகவிருக்கலாமென நம்பப்படுகின்றது. இத்தகைய கருக்கலைப்புக்கள் சட்டத்திற்கு புறம்பானதாகவிருந்தாலும் குறிப்பிட்ட சில இடங்களில் நாட்டு வைத்திய முறை மூலம் மறைமுகமாக கருக்கலைப்புக்கள் இடம்பெறுவதாகவும் அறியமுடிகிறது.

போர்க்காலங்களில் வடபகுதியில் ஆங்காங்கு இவ்வாறான ஒருசில சம்பவங்கள் இடம்பெற்றிருந்த போதிலும் அன்றைய நாட்களில் சட்டங்கள் இறுக்கமாகப் பேணப்பட்டு வந்ததால் அவை பகிரங்கமாக வெளிவருவது அரிதாகவேயிருந்தது. இந்நிலையில் போருக்குப் பிந்திய இந்த மூன்றாண்டுகளில் சட்டவிரோதமான சிசுப்பிரசவங்கள், சிசுக்கொலைகள் மற்றும் கருக்கலைப்புக்கள் என்பன அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே இதற்கான பின்னணிகளை ஆராயுமிடத்து சில யதார்த்தபூர்வமான உண்மைகள் புலப்படுகின்றன.

பாலியல் உணர்வு என்பது ஆணைத்து உயிரினங்களுக்கும் இயல்பான ஒன்றாகும். மனிதர்கள் அதில் நெறிமுறைகளைக் கொண்டுள்ளனர். சிலர் அதனை மீறுகின்றனர். சிலருக்கு அது ஒரு போதையாக, வெறியாக மாறுகின்றது. இத்தகைய உணர்வுகளையும் அதனால் ஏற்படக்கூடிய தவறான உறவுகளையும் போர்க்காலங்களில் நிலவிய போராட்ட சூழ்நிலைகளும் அந்த காலச் சூழ்நிலையில் கடைப்பிடிக்கப்பட்ட சட்ட நடைமுறைகளும் கட்டுப்படுத்தியிருந்தன.

ஆனால் போருக்குப் பிந்திய நாட்களில் குறித்த குற்றச் செயல்களுக்கான சட்டங்களும் அதன் நிமித்தமான தண்டனைகளும் மென்போக்கான முறையில் கையாளப்படுவதாலும் போர்ச் சூழ்நிலைகள் மறைந்து போரும் வாழ்வாகவிருந்த நிலைமை மாறி நவீன கலாச்சார சூழலுக்கு மக்களின் வாழ்க்கை வளர்ச்சியடைந்துவிட்டதாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்த உணர்வுகள் கட்டுமீறிப் போயுள்ளன. அத்துடன் கணவனை இழந்த மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களைப் பொறுத்தவரையில் குடும்பப் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதென்பது பெரும்பாடாகவுள்ளது. அதாவது குடும்பத்தின் உணவு, உடை, மருத்துவம் மற்றும் பிள்ளைகளின் கல்விச் செலவு என்பவற்றை ஈடேற்ற வேண்டிய நிலைக்கு குறித்த குடும்பப் பெண்கள் உள்ளாகின்றனர்.

இந்தநிலையில் உறவினர்களிடமோ அல்லது தெரிந்தவர்களிடமோ சீரான உதவிகள் மற்றும் பண உதவிகள் உள்ளிட்ட சில இதர உதவிகளையும் எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு குறித்த குடும்பப் பெண்கள் உள்ளாகின்றனர். இந்தச் சூழ்நிலையில் மனிதாபிமான முறையிலும் உதவி செய்யும் மனப்பக்குவத்துடனும் உதவ முன்வருபவர்கள் ஒருசிலரே. அநேகமானோர் தங்களது சுயநலத்தீர்க்கவும் தங்களது சிற்றின்பத்தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவுமே குடும்பத்தலைவர்களான கணவன்மாரை இழந்த மற்றும் பிரிந்த குடும்பப் பெண்களுக்கு உதவ முன்வருகின்றார்கள். இவ்வாறாக குறித்த குடும்பப் பெண்களில் சிலரும் தங்களது குடும்ப வாழ்க்கை நிலையினை ஓரளவுக்கேனும் சுமூகமான முறையில் கொண்டு செல்வதற்காக மறைமுகமான முறையில் தங்களுக்கு உதவி செய்கின்ற ஆண்களுடன் போரும் போகின்ற ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகின்றது.

சமூகத்தில் இவ்வாறான தவறான உறவுகளின் மூலம் கர்ப்பமடையும் பெண்கள் சட்டத்திற்கும் சமூகத்

திற்கும் பயந்தநிலையிலும் தங்களது குடும்பக் கௌரவத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தாலும் சட்டவிரோதமான கருக்கலைப்புக்களில் ஈடுபடுவதுடன் பிரசவிக்கின்ற சிசுக்களை யாருக்கும் தெரியாமல் குழிதோண்டிப் புதைக்கின்ற கொள்கையும் செய்கின்றனர். இவ்வாறான சம்பவங்களில் அதிகமானவை பொலிசாரிடம் மாட்டிக் கொண்டுவிடுகின்றன. ஆனாலும் இது போன்ற இன்னும் சில சம்பவங்கள் சிசுக்களை குழிதோண்டிப் புதைப்பதோடு குறித்த சம்பவங்களும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விடுவதால் அவை வெளிவராது மறைக்கப்பட்டு விடுகின்றன. திருமணமாகாத பெண்களும் சிலர் தங்களது காதலர்களுடனோ அல்லது தங்களுக்குத் தெரிந்த ஆண்களுடனோ தவறான உறவுகளைக் கொள்வதற்கு அவர்களுடைய பருவக் கோளாறும் ஒரு காரணமாகவுள்ளது.

அத்துடன் தொலைபேசித் தொடர்புகள் மற்றும் ஆண்களின் மாய்மாலக் கதைகள் என்பவற்றையும் இலகுவில் நம்பிவிடும் பெண்கள் ஆண்களின் ஆசைக்கு மோசம் போய்விடுவதுண்டு. இவ்வாறு மோசம் போன பெண்களும் ஆண்களின் இச்சைக்கு ஆளாகிவிடுகின்றனர். இத்தகைய உறவுகளால் கர்ப்பமடைகின்ற பெண்கள் காதலர்களால் கைவிடப்படுவதாலும் அத்துடன் சம்பந்தப்பட்ட ஆண்கள் ஏற்கனவே திருமணம் முடித்தவர்களாக இருப்பதாலும் குறிப்பிட்ட திருமணமாகாத பெண்கள் தாங்கள் எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டும் சட்டம் சமுதாயத்திற்கு அஞ்சியும் இவ்வாறான சட்டவிரோத கருக்கலைப்பு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

குறிப்பிட்ட சில பெண்கள் கருக்கலைப்பு முயற்சி கைகூடாமல் போகுமிடத்து தாங்கள் விடுகளிலும் ஆளரவமற்ற இடங்களிலும் சிசுக்களைப் பிரசவித்து குழிதோண்டிப் புதைத்துவிட்டும் சில சந்தர்ப்பங்களில் இறந்த சிசுக்களின் சடலங்களை பற்றை மறைவிடங்களில் கைவிட்டும் தலைமறைவாகி விடுகின்றனர். இவ்வாறான நிலையில் கண்டுபிடிக்கப்படும் சிசுக்கள் இறந்த நிலையிலேயே பிறந்ததா அல்லது பிறந்த பின்னர் குறித்த தாயாரினால் கொலை செய்யப்பட்டதா என்ற வினாவுக்கு தெளிவான பதில்கள் கிடைப்பதில்லை. அண்மையில் யாழ்போதனா வைத்தியசாலையின் மலசலகூடக் குழியினுள் உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதையும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறிருப்பினும் போருக்குப் பிந்திய காலங்களில் குறிப்பாக வடபகுதியில் சட்ட விரோத கருக்கலைப்புக்கள் மற்றும் தவறான உறவுமூலமான சிசுப் பிரசவங்களும், சிசுக் கொலைகளும் அதிகரித்திருக்கின்றது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்ட பெண்கள் பொலிசார் கைதுசெய்து நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்படுவது போல குறித்த பெண்களுடன் தவறான உறவுகளைக் கொண்டிருந்த ஆண்களையும் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்துவதன் ஊடாகவே இத்தகைய குற்றச்செயல்களை நாளடைவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது சாத்தியமாகும். மேலும் திருமணமாகாத யுவதிகளுக்கு பெற்றோர்கள் உரிய பாதுகாப்புக்களை வழங்குவதுடன் பொறுப்புடன் செயற்படுவது அவர்களின் கடப்பாடாகும். அத்துடன் திருமணமாகி கணவனை இழந்த மற்றும் கணவனைப் பிரிந்து வாழ்கின்ற பெண்கள் இந்தவிடயத்தில் தங்களது கௌரவத்தையும் பாதுகாப்பையும் தாங்களே உறுதி செய்து கொள்வது அவசியமானது. இத்தகைய ஒரு சூழ்நிலையேற்படும் பட்சத்திலேயே தவறான உறவுமூலமான சிசுப்பிரசவங்கள், சிசுக்கொலைகள் மற்றும் சட்டவிரோதமான கருக்கலைப்புக்கள் போன்ற சட்டத்திற்குப் புறம்பான குற்றச் செயல்கள் படிப்படியாக ஒழிக்கப்படும்.

தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை கலியாணங்கள் இன்னமும் விசாரிச்சு, தீர விசாரிச்சு, முறையாய் விசாரிச்சுச் செய்யற கலியாணங்களாய்த்தான் இருக்குது.

போனமாதம் எனக்குத் தெரிஞ்ச ஒரு 'பிறமோட்'டின்ர மகனுக்குக் கலியாணம் நடந்தது. அந்த மாப்பிள்ளை கொஞ்சம் 'தண்ணி' பாவிக்கிறவர். சிலபேர் தண்ணி அடிக்கிறது என்பர்; சிலர் தண்ணிப் போடுவது என்பர்; இவையெல்லாம் என்னத்தைக் குறிக்கின்றது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். சாராயம் குடிப்பதைக் குறிக்கும். லோக்கல் உள்ளூர் தயாரிப்புகளுக்கு 'கிக்', வெட்டிரும்பு என்ற செல்லப் பெயர்களும் உள்ளன.

கலியாணம் முடிஞ்ச நாலாம் நாள். பொம்பிளை வீட்டிற்கு காலையாரிசி விருந்து. நாலாம் சடங்கு பெண் வீட்டில் வழு கலகலப்பான ஏற்பாடு. வாற ஆக்கள் ஒருக்கால் வீட்டுக்குப் பின்னாலே போறதும் பின்னர் வாயைத் துடைச்சுக் கொண்டு வந்து சாப்பாட்டு மேசையில் இருக்கிறதும், ஒரு துண்டு இறைச்சியை எடுத்துக் கடிக்கிறதும் சாப்பிடுறதுமாக ஒரே பம்பல்...

மாப்பிள்ளை 'சீற்றில' இருந்த மாப்பிள்ளைக்குப் பொறுக்க ஏலாமல் போச்சுது... இப்ப கலியாணவீடு முடிஞ்ச மூன்று நாலு நாளாய் வெளியால வெளிக்கிடாததால ஒரு சொட்டுத் தண்ணி கூட வாயில வைக்கேல்லை. இவர் 'பாறில' சந்திச்ச சிலபேர் வீட்டிற்குப் பின்னால போறதும் வாய்த்துக் குடிக்கிறதும் வாயைத் துடைச்சுக் கொண்டு வாறதும் செம ஏத்தமாக இருந்தது மாப்பிள்ளைக்கு.

மாப்பிள்ளையின் தவிப்பு மாமனாருக்கு - மனைவியின் தந்தைக்கு விளங்கி போச்சுது. மெதுவாக மருமகனிடம் சென்று "மருமோன் ஏதும் பாவிக்கிறனிங்களே?... கொஞ்சம் கொண்டு வரவே?" எனக் கேட்டார்.

மாப்பிள்ளைக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. தன்னைச் சோதிக்கப் பார்க்கிறதற்குத் தானா கேட்கிறாரோ? என்று... மாப்பிள்ளையும் ஏமாறப் பட்ட ஆளில்லை.

"நல்லா விசாரிச்சுத் தானே மாப்பிள்ளை எடுத்தனீங்கள் மாமா...?" என்று மாமனார் பக்கம் தட்டி விட்டார்.

யாராவது ஒருவராவது 'மருமோன் கொஞ்சம் தண்ணி பாவிக்கிறவர்' என்ற செய்தியை சொல்லியிருக்க மாட்டார்களா என்ற ஏக்கம் அவருக்கு எழுந்தது.

உதுதானே பள்ளிக்கூடத்தில படிச்ச படிப்பு?

வேலி அடைக்கிறது நல்ல ஒரு கலை. இது மதில்கள் வந்த பின் மறைந்து வரும் ஒரு கலையும் கூட. இங்காலுப் பக்கம் நிற்பவர் கிடுகை வைத்து கதிகாலுடன் அணைத்துப் பிடித்துக் கொள்வார். குத்தூசியில் கலம் வைக்க கயிறு கோர்த்தவாறு இருக்கும். அதனைக் கிடுகு மட்டையின் கீழ்ப் புறமாகக் குத்தி வேலி யின் மறுபக்கம் செலுத்துவார். செலுத்தியதும் 'ம்' என்பார். மறுபக்கம் நிற்பவர் கயிற்றைக் கழற்றி விட்டு 'ஆ' என்பார்.

குத்தூசி செலுத்தியவர் 'ஆ' ஒலி கேட்டதும் குத்தூசியை இழுத்து மீண்டும் 'ஆ' என்று கூறியவாறே குத்தூசியை கிடுகுமட்டைக்கு மேலாக மறுபக்கம் செலுத்துவார்.

மற்றப் பக்கம் நிற்பவர் கதிகாலைச் சுற்றி கயிற்றை எடுத்து, மீண்டும் குத்தூசித் துளையில் செலுத்தி விட்டு 'ஆ' என்பார். இந்தப் புறம் நிற்பவர் குத்தூசியை இழுக்க கயிறு கதிகாலைச் சுற்றி வரும். வழக்கமாகவே இப்புறம் இருக்கும் தலைப்புக் கயிற்றுடன் சுற்றி வந்த கயிற்றை முடிச்சுப் போட்டு கிடுகைக் கட்டுவார். வேலி அடைபட்டு வரும். அருமையான கலை.

ஒரு நாள் வல்லியப்புவும் பேரனும் வேலி அடைத்தனர்.

இந்தப் பக்கம் நின்று வல்லியப்புவால் குத்தூசி குத்தினார். அந்தப் பக்கம் அவரின் பேரன்.

'ம்'.. குத்தூசியை குத்தினார் வல்லியப்பு.

'ஆ'.. அந்தப் பக்கமிருந்து பேரன் கயிற்றைக் கழற்றி துளையினுள் செலுத்தி விட்டான். வல்லி அப்பு குத்தூசியை இழுக்க அந்தப் பக்கம் கதியாலைச் சுற்றி எடுக்காமல் சொருகி விட்ட கயிறு பிடிமானம் இன்றி இந்தப் பக்கம் வந்துவிட்டது. வல்லி அப்புவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"கதியாலைச் சுற்றிக் கயிற்றைக் கொழுவா விட்டால் கயிறு நிற்குமே? இதுதான் பள்ளிக்கூடத்தில சொல்லித் தருகினமே? இதுதான் பள்ளிக்கூடத்துப் படிப்பே?" என்று தாறுமாறாக ஏசத்தொடங்கினார்.

அந்தப் பக்கம் நின்ற பேரனுக்கு விளையாட்டுக்குப் போற நேரம். வல்லி அப்பு ஏசிய கோபம் வேறு. வேலி அடைப்பு பூர்த்தி ஆகிக் கொண்டு வரும் நேரம். புறுபுறுத்தபடியே 'ம்' என்ற வாறு குத்தூசியைக் கயிற்றுடன் அந்தப் பக்கம் செலுத்தினார் வல்லியப்பு.

பொறுமை இழந்து நின்ற பேரன் வல்லியப்புவின் படிப்பைப் பற்றிக் கூறிப் புறுபுறுப்பும் தாங்க இயலாமல் ஆத்திரத்துடன் நின்றால், கயிற்றைக் கழற்றி எடுத்து விட்டு ஒரு நீள அளவான தடியை எடுத்து குத்தூசித் துளையில் செலுத்தினான். பூனைபோல அடிமேல் அடி வைத்து அவ்விடத்தை விட்டு விரைந்து சென்று விட்டான்.

'ஆ' என்ற பிரதிபலிப்பிற்குக் காத்திருந்த வல்லியப்பு மீண்டும் ஒருமுறை 'ம்' என்றார். அங்கிருந்து ஒலி வராமலிருக்கவே குத்தூசியை இழுத்தார். அதுவும் வரவில்லை. "வேலி அடைக்கவே பள்ளிக்கூடத்தில சொல்லித் தருகிறார்கள்?" என்றவாறே நண்பர்களுடன் விளையாடச் சென்று விட்டான் பேரன்.

மாப்பிள்ளையின் ஏக்கம்!

(சுருக்கி வரை மட்டுமான தொடர்)

சிறீலங்காவின் இனமுரண்பாடு

கடந்த காலத்திலும், வருங்காலத்திலும்!

சிறீலங்காவில் பதற்றமும் சர்ச்சையும் சர்வ உணர்ச்சிகளைத் தூண்டும் குறியீடாக மொழி, தேசிய கொடி, தேசிய கீதம் என்னவே பரப்பு என்பனவே முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனவே மற்ற இனத்தவர்களுக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு இந்த குறியீடுகளைப் பயன்படுத்தி சிங்கள மேலாதிக்கத்தை அரசியல் ரீதியாக சிங்களவர்கள் எதிர்கொள்ளலாம்.

இதுவே இன்று ஐநாவுக்கு ஆட்சியில் அமர்ந்துள்ளவர்களுடனான பேச்சுவார்த்தையில் ஏற்பட்டிருக்கின்ற வேதனையான சிக்கலாகும். இந்தவகை குறியீடுகளுக்கு சிக்கல்களுக்கு தீர்வு காண முயல்கொடுத்து, அவர்களை சமாளிக்க எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனைய சிறுபான்மையினர்களுக்கு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவே அரசியல் விருப்பங்கள் குறைந்து, மறுபுறம் ராஜபக்ஷ அரசிடம் இருக்கவேண்டிய சமிக்ஞை வெளியாகவுள்ளது.

மொழி என்பது பெரிதும் வாக்கு, சமூகவளர்ச்சிக்கும் அதிகார வேட்கையையும் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக இனவுரிமையையும் வைத்து தேசியத்துடன் பயன்படுத்தும் அரசியல்வாதிகளால் இனமுரண்பாடுகளினால் பாதிப்புற்றுள்ள சமூகங்களிடையில் சமாதானத்தைக் கொண்டு வருவதென்பது மோசமான ஒரு சவாலாகவே அமையும். இனங்களுக்கிடையிலான மீள நல்லிணக்கம் என்பது மிகவும் கவனிக்கப் வேண்டியதாகும்.

சுதந்திரத்திற்கான பாரிய சவால்களில் ஒன்றாக தேசியக் கீதம் விளங்குகிறது. இதனை பெரும்பான்மை சிங்கள மக்கள் தேசியக் கீதமாக ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, சிறீலங்கா சுதந்திர தினத்தன்று தேசியக் கீதம் சிங்கள அரசியல் மற்றும் இராணுவ அமைப்புகளால் பகிரங்கமாக செல்லப்பட்டு, வேற்றுமைகளை உள்ளவர்களிடமிருந்து கவனத்தை ஈர்க்கும் வகையில் பேசப்படுகிறது.

தமிழர்களுக்கு முற்றிலும் எதிரான பதாகைகளும், சிறுவர்கள், பெரியவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் மரணங்களின் மத்தியில் சுட்டிக்காட்டி எதுவுமறியா யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது.

புதிய வரைபு பதிக்குள் பாதுகாப்பு பகுதியின் வெளிப்படுகின்றது. தமிழர்களைக் கொலை செய்துவிட்டனர். அதுமட்டுமல்ல தமிழ்க்குடிமக்கள் கட்டாய ஒவ்வொருவரையும் கொல்லுவதுமாகவே உதாரணம் பாதுகாப்பு படையினருக்கு அரசியல் மற்றும் இராணுவ மேன் நிலைத்தரத்தில் உள்ளவர்களிடமிருந்து விடுக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. இவை மிக மோசமானவை. இராணுவத்தினரால் நடத்தப்பட்ட இப்பாரிய மனிதக் கொலைகளின் பேரில் ஓர் பாரபட்சமற்ற நடுநிலையான சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென உலக நாடுகளினால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், முதலாவதாகத் தமிழினத்திற்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் உள்ளவரையிலும் இரண்டாவதாகச் சிங்கள அதிகார வர்க்கத்தினரால் அடுக்கடுக்கு இடையிடாது வாக்கு அதிகாரம் பெறும் கட்சி இனப் பேரினவாதங்களுக்காகப் பகைமையைப் போக்குவதைய குறியீடுகளை வெளிப்படுத்துவதை நிறுத்தாத வரையிலும் சிறீலங்காவில் இனங்களுக்கிடையிலான மீள நல்லிணக்கம் என்பது அசாத்தியமான தொன்றாகும்.

மூன்று மாற்றீடுகள்

வருங்காலத்தில் இத்தீவினில் முற்றிலும் வேறான மூன்று மாற்றீடுகளின் மூலமாகத்தான் நல்லதொரு எதிர்காலத்தைக் கொண்டுவர முடியும். அவையாவன:

1. எஞ்சியிருக்கும் தமிழர்களைக் கொன்றொழிப்பது.
2. அதிகாரங்களைப் பகிர்வது.
3. நாட்டைப் பிரிப்பது.

இதில் முதலாவது தெரிவு நிரந்தரமானவை கொலைகளாகும். இரண்டாவது இனங்களுக்கிடையே மீள நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பதற்கு வழிவகுக்கும். இதனை நிச்சயமாக மக்களிடையே அதிகாரப்பகிர்வு குறிக்கத் தேவையான பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வேண்டும்.

உண்மையில் அதிகாரப் பகிர்வு சிறீலங்காவின் இனநாயகத்திற்கும் யுத்தத்தினால் பாதிப்புற்ற பொருளாதாரத்திற்கும் வலுவூட்டுவதுடன் மத்திய அரசினதும் கிடையில் முரண்பாடற்று ஒத்திசைவான நிலையையும் கொண்டுவரும். அதிகாரத்தைப் பகிர்ந்து வழங்குவதில் எதிர்ப்பு இருக்குமாயின் மூன்றாவதாக இருப்பது நாட்டைப் பிரித்தலேயாகும். ஆனால் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் எத்தியோப்பியாவிலிருந்து எரித்திரியா போன்று பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் போன்றவை பிரிந்து சென்றும் அவற்றிலுள்ள வளச்செயல்கள் முடிவுறுத்தப்படுவதில் முரண் ஏற்றிய சட்டவிலக்கு தமிழ் தேசியவாதிகளினால் வலியுறுத்தப்பட்ட கோரிக்கையாக மாறி சுயாட்சியாக உள்ளது. ஆயினும் சிங்களவர்களினால் 18வது திருத்தத்திற்கு அப்பால் செல்லவே மாட்டார்கள். எனினும் வலுத்துவரும் உலகநாடுகளின் அழுத்தம் காரணமாக தமிழினத்தின் கோரிக்கையின் பக்கம் சிங்கள ஆளும் வர்க்கத்தினரை திசை திருப்புவதற்கான, நம்புவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவே தெரிகின்றது.

சண்டே லீடர் பத்திரிகைக் பேராசிரியர் ஏ.இர்.எம்.இம்தியாஸ் எழுதிய கட்டுரை.

— தமிழில் துஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சி எதுவரை?

பித்தன் பதில்கள்

ம.பரமானந்தம். மதுரை

கே: ஏறுக்குமாறாய் பேசி வாழத் தாண்டிய பின்தான் இறைபக்தி நாட்டம் அதிகரிக்கிறதே, அது ஏன் பித்தரே?

ப: ஆடி அடங்கும் வாழ்க்கையடா, அறுபது நிமிஷம் கொண்ட ஒரு மணி நேரமும் அனுபவ ரீதியாக அப்போது தான் மனதில் உறைக்கிறது.

த.இரவீந்திரன். கைதடி

கே: நடாளாடமன்ற அமுக்கப் பிள்ளாரம் நடைபெறும் குறைபாடு குறித்து அண்மையில் யொருவரதாரு அவிரிருத்தி அமைச்சருக்கே நேரடி அனுபவம் கிடைத்தது குறித்து என்ன சொல்கிறீர்?

ப: அந்நாளில் அடுத்த ஆண்டில் இத்தகைய குறைபாடு எதுவும் இருக்காது என்று சொல்லிச் சமாளித்துவிட்டார் பார்த்தீரா? அரசியல்வாதிகளுக்கு இதெல்லாம் கைவந்த கலை.

தா.இதயராஜன். கொழும்பு

கே: நாட்டில் அரசியல் நிலைவரம் எப்படி இருக்கிறது காதுக்குள் இரகசியமாகக் கூறுவீரா பித்தரே?

ப: நான் இரகசியமாகக் கூறிய பிறகும் ஏன் 'பெரிய' என்று முழிக்கிறீர்? நான் காதுக்குள் கூறியது கேட்கவே இல்லையா?

கே.அகிலா. மன்னார்

கே: பித்தரே, நீரும் உமது மனைவியும் அன்னியோன்யமாக, ஒற்றுமையாக வாழமுடிவதன் இரகசியம் தான் என்ன?

ப: பெரிதாக ஒன்றுமில்லை. நாங்கள் வீட்டு வேலைகளை எமக்குள் பகிர்ந்து கொள்வோம். உதாரணமாக நான் சமையலை மனைவி ரசித்துச் சாப்பிடுவா. நான் உடுப்புக்களைத் தோய்க்கிறேன், மனைவி அலங்கார அணிந்து அழகு பார்ப்பா. பிறகேன் எங்களுக்குள் பிரச்சினை எழுகிறது?

த.பரந்தாமன். வவுனியா

கே: பித்தரே, கவர்ச்சி எதுவரை?

ப: கண்ணுக்கும் குளிர்ச்சியாக இருக்கும் வரை.

ம.ரதிச்செல்வி. யூறுகரி

கே: செய்வதையும் செய்துவிட்டு ஒரே வார்த்தையில் சொறி (Sorry) என்று சொல்லி சமாளிப்போர் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: அந்த மன்னிப்புக் கோரும் வழக்கம் இல்லாதிருந்தால் மனிதன் செய்கையில், பேச்சில் அவதானமாக இருந்திருப்பான். தவறு செய்தால் மன்னிக்கலாம். குற்றத்துக்கு மன்னிப்பு கிடையாது.

மு.திருச்செல்வம், நீர்கொழும்பு

கே: கல்வி, தொழில் இவ்விரண்டில் எது முக்கியமானது?

ப: இரண்டுமே இரண்டு கண்கள் போன்றவை. கல்வி இருப்பின் தொழில் சிறக்கும். தொழில் செய்து கொண்டும் ஆக்கம் இருந்தால் கல்வியைத் தொடரலாம்.

ம.வடிவேற்கரசன். கிளிநொச்சி

கே: பித்தரே, திகிலும் சிரிப்பும் கலந்த ஒரு ஜோக் சொல்ல முடியுமா உங்களால்,

ப: காட்டு வழியில் சென்ற ஒருவர் எதிர்பாராத விதமாக ஒரு சிங்கத்திடம் சிக்கிக் கொண்டாராம். தன்னைச் சிங்கம் கொன்று தின்று விடப் போகிறதே என்ற அதிர்ச்சியில் சிங்கத்தின் முன் கண்களை மூடி நிலத்தில் வீழ்ந்து மண்டியிட்டு வணங்கினாராம். கொஞ்ச நேரமாக எதுவும் நடக்காததால் கண்களைத் திறந்து பார்த்தபோது தன்னைப் போன்றே சிங்கமும் நிலத்தில் மண்டியிட்டு வணங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு கடவுள் தான் தன்னைக் காப்பாற்றி விட்டதாக ஆறுதலடைந்தாராம். சில நிமிடம் கழிந்து சிங்கம் கண்களைத் திறந்து நான் எப்போதும் உணவுக்கு முன்பு கடவுளுக்கு நன்றி செலுத்துவது வழக்கம் என்றதாம் கர்ச்சித்தபடியே. எப்படி இருக்கும் அவருக்கு?

உ.சகநாதன். மன்னார்

கே: ஒரு சிறிய சம்பவத்தை ஊதிப் பெருப்பித்து விமர்சிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தரே?

ப: சிறந்த கற்பனாவாதிகளாய் இருப்பார்கள் என எண்ணுகிறேன். அப்படிப்பட்டோர் சிறுகதை, நாவல், கவிதை எழுத முயற்சித்தால் நன்றாக எடுபடும்.

சொற்சிலம்பம் போட்டி இல: 532



அனுப்புபவர் பெயர்:.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

சொற்சிலம்பம் போட்டி இல. 532

சொற்சிலம்பம் 532 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதி திகதி 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதியாகும். விடைகள், கிழக்கு மொழிபெயர்ப்பில் வெளிவரும் ஓகஸ்ட் 22ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் எழுதி அனுப்பப்படும் விடைகளைக் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250க்கும் இரண்டாவது பரிசாக ரூபா 150க்கும் மூன்றாவது பரிசாக ரூபா 100க்கும் சொற்சிலம்பம் வழங்கப்படும். பரிசு விடைகளைச் சரியாக எழுதியோரின் பெயர் விபரம் ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி வெளியிடப்படுவதுடன் தொடர்பாகவே தெரிவிக்கப்படுவதுமாகும்.

அனுப்பவேண்டிய முகவரி
சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மேலிருந்து கீழ்

01. முல்லைமையில்
02. வரவேண்டியது
03. அழிப்பு
04. சேலை
05. வீடு
08. ஒரு வகை உலோகம்
10. கொடை
13. பிரப்பெடுப்பு
14. நுகர்
16. விரைவில்
18. உ.பகரணம்
19. வைவே
21. கழித்தல் குறி

இடமிருந்து வலம்

01. இரண்டாவதற்கு முந்தியது
05. இதற்கு வசமாகாத இதயம் எது?
06. உயிர்ப்பின் ஆரம்பம் இங்கு
07. குன்றுதல்
09. காலம் பிந்துவது
11. மடு
12. செல்வம்
13. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவதற்கு உதவும்
15. கள்ளைப் புளிக்க வைக்கும் நுண்ணுயிர்
17. [illegible] வண்டியில் பிணைப்பது இங்கே
19. தமிழ் மாதங்களுள் ஒன்று
20. முகத்தில் வரும் கிளைமையின் பிரகடனம்
21. அவயம் புகுதல்
22. பையினை இப்படியும் அழைப்பர்
23. பழங்காலக் ஆயுதங்களுள் ஒன்று

சொற்சிலம்பம் போட்டி இல: 529 விடைகள்

மேலிருந்து கீழ்

01.அமையம், 02.கழுல், 03.கல்லரை, 04.தூசன், 05.மறை, 08.கடிதில், 10.வருத்தல், 11.மடு, 13.சம்பவம், 14.அமைகள், 15.தம், 16.பயதி 18.ரிம், 20.வளை, 22.புலி

இடமிருந்து வலம்

01.அசுவத்தாமன், 04.கழல், 07.சுரை, 09.வல்லவன், 11.மடி, 12.முரு, 13.சடுதி, 14.அசுத்தம், 16.பாலை, 17.தம்மி, 19.தகவல், 21.வம்ப, 23.[illegible], 24.அம்பலி

போட்டி இல. 529 இல் பரிசு பெற்றோர்

1ஆம் பரிசு ஜ.ம்.எம். முஸ்தபா, முனைய வளவு வீதி, ஏறாவூர் - 01.

2ஆம் பரிசு செல்வி. தயாளன் தனுஷ்யந்தி, சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

3ஆம் பரிசு இ.ஸ்ரீரங்கம், இல. 9/2, இராசதுரை வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.

பாராட்டுப் பெறுவோர்

(1) கு.சிவபாலராஜா,
இல - 14, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

(2) எஸ்.ஜெயச்சந்திரராசா,
இராசேந்திரன் குளம்,
வவுனியா.

(3) V.V.திருச்செல்வம்,
இந்திய உயர்ஸ்தானிகராலயம்,
36-38 காலி வீதி, கொழும்பு -3.

(4) ப.சிவசூரியர், J.P
சங்கானை.

(5) பி.கந்தையா
இல- 11-5/1, சென்லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு - 6.

(6) வே.சரஸ்வதி
அம்பன்,
குடத்தனை.

(7) அருளிகாஞ்சிக்,
பிளெசறின், நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(8) வே.கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி,
வாழைச்சேனை.

(9) திருமதி .சுரேகா அனுராமனன்,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை

(10) ஸ்ரீலக்ஷன்,
மாணவன் ஆண்டு - 5,
யா.புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு

வலைப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்ட அணி வெற்றி

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட அணி 40க்கு 07 புள்ளிகள் என்ற வித்தியாசத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை வெற்றி பெற்று வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அருணோதயா கிண்ணத்தை நாகர்கோவில் வெண்மதி கழகம் சுவீகரித்துக் கொண்டது

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தினால் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான மென்பந்துச்சுற்றுப் போட்டி மற்றும் உதைபந்தாட்டசுற்றுப்போட்டிகள் கடந்த 25ஆம் திகதி முதல் நடைபெற்றன.

12ஆவது இறுதிப்போட்டியில் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக்கழகம் அருணோதயாவின் மென்பந்து துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. 12 வது இறுதிப்போட்டி உடுத்துறை பாரதி அணியினருக்கும் நாகர்கோவில் வெண்மதி அணியினருக்கும் இடையில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உடுத்துறை பாரதி அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தனர். முதலில் உடுத்துறை பாரதி அணி 9.5 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 53 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் உடுத்துறை பாரதி அணிசார்பாக ஜெயதீப் 12 பந்துகளை எதிர்கொண்டு 12 ஓட்டங்களைப் பெற்றார். நாகர்கோவில் வெண்மதி அணி சார்பாக பந்துவீச்சில் கோகுலதாசன் 3 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

54 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நாகர்கோவில் வெண்மதி அணியினர் 6.3 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 3 விக்கெட்டை மாத்திரம் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர். அருணோதயா விளையாட்டுக் கழகத்தால் முதல் முறையாக நடாத்தப்பட்ட மாபெரும் விளையாட்டுப் போட்டியின் மென்பந்து துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த முதலாவது அணி என்னும் பெருமையை நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக்கழக அணி பெற்று சாதனை படைத்துள்ளது.

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் மலேசிய கர்ப்பிணி வீராங்கனை நூர் சூர்யானி

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ள மலேசிய துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை நூர் சூர்யானி, 8 மாத கர்ப்பிணியாக உள்ளார். இதன் மூலம் மலேசியாவில் இருந்து ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் முதல் கர்ப்பணிப் பெண் என்ற சாதனையை அவர் படைக்க உள்ளார்.

தற்போது 8 மாத கர்ப்பிணியாக உள்ள இவர், லண்டன் ஒலிம்பிக் போட்டியில் நடைபெற உள்ள 10 மீட்டர் ஏர் ரேபில் போட்டியில் பங்கேற்க உள்ளார்.

மலேசியாவில் இருந்து துப்பாக்கிச் சுடுதல் போட்டிக்காக தகுதி பெற்றுள்ள நூர் சூர்யானி, மற்ற வீராங்கனைகளை போலவே, பதக்கம் பெறும் ஆர்வத்துடன் களமிறங்குவதாகக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

10 மீட்டர் ஏர் ரேபில் துப்பாக்கி சுடுதல் போட்டிக்காக நேரடியாக நான் தகுதி பெற்றது, என்னை யோசிக்க வைத்தது. எனக்கு குழந்தை பிறந்த பிறகு, என்னால் முன்பு போல சிறப்பாக செயல்பட முடியுமா என்ற எண்ணம் தோன்றியது.

இதனால் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கத் தீரமானித்தேன். மற்ற வீரர்கள், வீராங்கனைகள் போல, எனக்கும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்ற கனவு இருந்தது. எனவே மற்றவர்களைப் போல எனக்கும், ஒலிம்பிக் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற மனஅழுத்தம் உள்ளது. தற்போது எனது போட்டிக்கான பயிற்சியில் மட்டுமே அதிக கவனம் செலுத்தி வருகிறேன் என்றார்.

ஒலிம்பிக் போட்டியில் கர்ப்பிணி வீராங்கனையாக மலேசியாவில் இருந்து பங்கேற்கும் முதல் நபர் நூர் சூர்யானி ஆவார். ஆனால் ஒலிம்பிக் போட்டியில் கர்ப்பிணி வீராங்கனைகள் பங்கேற்பது இது முதல் முறையல்ல.

கடந்த 1920ம் ஆண்டு பெல்ஜியம் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற சுவீடன் தடகள வீராங்கனை மங்டா ஜுலின், 4 மாத கர்ப்பிணியாக இருந்தார். ஆனால் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார். அதேபோல கடந்த 2006ம் ஆண்டு டெரினோ ஒலிம்பிக் போட்டியில் ஜேர்மனியின் டியானா சர்டர், 3 மாத கர்ப்பிணியாக இருந்தார்.

உலக துப்பாக்கி சுடுதல் தரவரிசையில் 47வது இடத்தில் உள்ள நூர் சூர்யானி, கடந்த 2010ம் ஆண்டு டெல்லி கொமன் வெல்த் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் நிறைவு விழாவில் முற்றிலும் பெண்களைக் கொண்ட பொப் குழுவான 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' ஆட்டம்!

முற்றிலும் பெண்களைக் கொண்ட பொப் குழுவான 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' குழுவினர், லண்டன் ஒலிம்பிக் நிறைவு விழாவில் ஒரு கச்சேரி செய்யவுள்ளனர். லண்டன் ஒலிம்பிக் போட்டி நெருங்கி விட்டது. வீரர்கள், வீராங்கனைகள் தவிர போட்டி அமைப்பாளர்களும் கூட போட்டியை சிறப்பாக நடத்தி முடிக்க தீவிரமாகக் களம் குதித்துள்ளனர். இந்த நிலையில், ஒலிம்பிக் நிறைவு விழாவில் 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்', பொப் குழு தனது கச்சேரியை நடத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பான ஒப்பந்தத்தில் அவர்கள் கையெழுத்திட்டுள்ளனராம். இக்குழுவில் இடம்பெற்றுள்ள கெரி ஹலிவெல், எம்மா பண்டன், மெலனி சிஸ்ஹோல்ம், மெலனி பிரவுன், விக்டோரியா பெக்காம் ஆகியோர் கடந்த நான்கு ஆண்டுகளாக இணைந்து எங்குமே நிகழ்ச்சியைக் கொடுத்ததில்லை என்பதால் இவர்களின் ஒலிம்பிக் நிகழ்ச்சிக்கு பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ஸ்பைஸ் கேர்ள்ஸ் குழுவில் ஒருவரான விக்டோரியா பெக்காம், இங்கிலாந்து கால்பந்து வீரர் டேவிட் பெக்காமின் மனைவி என்பது நினைவிருக்கலாம்.

அட்லான்டா ஓபன் ரென்னிஸ்: ஆன்டி ரோட்டிக் சம்பியன் பட்டம்

அட்லான்டா ஓபன் ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலகின் 4-ம் நிலை வீரர் ஆன்டி முர்ரே (அமெரிக்கா), லக்சம்பர்க் வீரர் ஜிலெச் முல்லெரை சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆன்டி ரோட்டிக் 1-6, 7-6 (7-2), 6-2 என்ற செட் கணக்கில் ஜிலெச் முல்லெரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இந்த ஆண்டில் ரோட்டிக் வென்ற 2-வது பட்டம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன் பொம்மை

ஸ்மார்ட் பெட் என்ற அடையாளத்தோடு ஜப்பானில் அறிமுகமாகியுள்ள எந்திர நாய் பொம்மை இது. பிரபல பொம்மை தயாரிப்பு நிறுவனமான பாண்டாய் உருவாக்கியுள்ள இந்த நாய் பொம்மையில், ஒரிஜினல் நாயின் முகத்துக்குப் பதிலாக துப்பிள் ஐபோன் வைக்கப்பட்டுள்ளது. இந்த நாயை குரைக்க வைக்கலாம், ஓட வைக்கலாம், அழச் செய்யலாம். ஐபோனின் திரையில் ஒளிரும் ஐகான்களை இயக்கி, கட்டளைகளைப் பிறப்பித்தால் போதும் டோக்கியோவில் நடைபெற்ற சர்வதேச பொம்மைக் கண்காட்சியில் புதுமையான பொம்மை என்ற விருதைப் பெற்றிருக்கிறது இந்த போன் நாய்க்குட்டி.

ரெட்டினா டிஸ்பிளேயுடன் வரும் அப்பிள் லேப்டாப்!

அப்பிளின் அடுத்த தயாரிப்பைப் பற்றிய செய்தி எல்லா இணையத் தளங்களிலும் பரபரப்பாக வந்து கொண்டிருக்கின்றன. அதாவது அப்பிள் ஒரு புதிய 13 இன்ச் மேக் ப்ரோ லேப்டாப்பை வரும் செப்டம்பரில் களமிறக்க இருக்கிறது என்ற செய்தியை பெரும்பாலான இணையத் தளங்கள் தங்களின் தலைப்புச் செய்தியாக வைத்திருக்கின்றன.

இந்த புதிய 13 இன்ச் மேக் ப்ரோ லேப்டாப் ரெட்டினா டிஸ்பிளேயுடன் வரும் என்றும் செய்திகள் வருகின்றன. மேலும் அப்பிள் தனது ஐமேக் டெஸ்க் டாப் கணினிகளை விரைவில் அப்டேட் செய்ய இருப்பதாகவும் பரவலாக செய்திகள் வருகின்றன.

அப்பிளின் தயாரிப்புகளை ஆய்வு செய்பவரான மிங் சி கூவோவிடினுடன், மேக்ரூமர்ஸ் செய்தி நிறுவனம் இந்த செய்தியைப் பகிர்ந்திருக்கிறது. இதுவரை 13 இன்ச் மேக் ப்ரோ லேப்டாப்பை வாங்க நினைத்தவர்கள் இனி 13 இன்ச் ரெட்டினா மேக்புக் ப்ரோ லேப்டாப்பை வாங்குவர் என்று கூவோ கூறுகிறார்.

ஏனெனில் இந்த புதிய 13 இன்ச் ரெட்டினா மேக்புக் ப்ரோ பார்ப்பதற்கே அட்டகாசமாக இருக்கிறது. அதோடு இந்த புதிய லேப்டாப் குறைந்த மின்சாரத்தையே பயன்படுத்தும். அதோடு வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பையும் இந்த லேப்டாப் நிறைவு செய்யும் என்று நம்பப்படுகிறது.

ஹெட்செட் பயன்களும் டிப்ஸ்களும்

போனுடன் இணைக்கப்படும் ஹெட்செட்கள் தொலைதொடர்பு செயல்பாட்டில் பல பயன்களைத் தருகின்றன. மொபைல் போனுடன் இவை இணைக்கப்படுகையில் இவை தரும் வசதிகள் பல நோக்கில் உள்ளன. (பெர்சனல் கம்ப்யூட்டர் மற்றும் லேண்ட்லைன் போன்களுடனும் ஹெட்செட்களை இணைத்து செயல்படுத்தலாம்.)

1. எந்த வகையான போனுடனும் ஹெட்செட் இணைக்கப்படுகையில், நம் கைகள் சுதந்திரமாகச் செயல்படும் நிலையைப் பெறுகின்றன. கார் ஓட்டலாம்; கம்ப்யூட்டர் இயக்கலாம்; போனில் வரும் செய்திகளைக் குறித்து வைக்கலாம். இவ்வாறு பணியாற்றும் இடத்தில் நம் திறனை முழுமையாகப் பயன்படுத்த நமக்கு ஹெட் செட்கள் உதவுகின்றன.

2. சரியான முறையில் அமர்ந்து செயல்பட நமக்கு ஹெட்செட்கள் உதவுகின்றன. மொபைல் போனை தோளுக்கும் சாய்ந்த தலைக்கும் இடையே வைத்துக் கொண்டு, பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் மாதிரி நடக்க வேண்டியதில்லை. மேலும் இவற்றைத் தொங்க விடுவதனால் டேபிளில் இடம் பிடிக்காது. தற்போதைய வயர்லெஸ் ஹெட்செட்களில் இந்தப் பிரச்சினைக்கு இடமே இல்லை.

3. பெர்சனல் கம்ப்யூட்டருடன் ஹெட்செட் இணைக்கப்படுகையில், இன்டர்நெட்டில் இன்னொரு முனையில் இருப்பவருடன் பேசிட மிக உதவியாய் உள்ளது. போனில் விளையாடுகையிலும் இது ஒரு நல்ல அனுபவத்தினைத் தருகிறது.

நோக்கியா ஆஷா 302

பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாடிக்கையாளர்களைக் கவர வேண்டும் என்ற இலக்குடன், நோக்கியா நிறுவனம் தன் ஆஷா வரிசையில், ஆஷா 302 என்ற மொபைல் போனை வடிவமைத்து விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது. அருமையான வடிவமைப்பு, தெளிவான, வசதியான கீ பேட், வைபி மற்றும் 3ஜி சப்போர்ட், துல்லியமான ஒலி வெளிப்பாடு, எளிமையான யூசர் இன்டர் பேஸ், வெளியேயிருந்தும் இணைக்கக் கூடிய யு.எஸ்.பி.ட்ரைவ், கொடுக்கும் பணத்திற்கான கூடுதல் வசதிகள் என இந்த மொபைல் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கிறது.

இதன் அதிக பட்ச இந்திய விலை ரூ.7,000 என்றாலும், இந்த செய்தியினை எழுதுகையில், சந்தையில் ரூ.6,000 க்குக் கிடைப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதன் பரிமாணம் 4.3 X 2.3 X 0.5 மிமீ ஆக உள்ளது. எடை 106 கிராம். பார்த்தவுடன் விலை உயர்ந்த நோக்கியா C6 நினைவிற்கு வருகிறது. இதன் குவெர்ட்டி கீ போர்டு அதிக கவனத்துடன், மிக வசதியாக பயன்படுத்தும்படி அமைக்கப்பட்டுள்ளது. 320X240 பிக்ஸெல் டிஸ்பிளே கொண்ட 2.4 அங்குல திரை பளிச் என இயங்குகிறது. ஆனால், இதன் பிரைட்னஸ் அளவைக் குறைக்கவோ, அதிகப்படுத்தவோ முடியவில்லை. இதன் சி.பி.யு. 1 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்குகிறது. ராம் மெமரி 128 எம்.பி. இதில் யு.எஸ்.பியில் இயங்கும் சாதனங்களை இணைக்கலாம். அதற்கான போர்ட் தரப்பட்டுள்ளது. அதாவது உங்கள் பிளாஷ் ட்ரைவினை இதில் இணைத்து செயல்படுத்தலாம். 3.2 எம்பி திறன் கொண்ட கமரா, நெட்வேர்க் இணைப்பிற்கு வைபி, புளூடூத், 3ஜி, மைக்ரோ எஸ்.டி.கார்ட் ஸ்லாட், ஓடியோ ரசிக்க 3.5 மிமீ ஜாக், நீண்ட நேரம் பேசும் வகையில் மின்சக்தி அளிக்க 1320 mAh திறன் கொண்ட பேட்டரி ஆகியன கிடைக்கின்றன.

மியூசிக் பிளேயர், எப்.எம். ரேடியோ மிகத் துல்லியமான ஒலியை ரசிக்கத் தருகின்றன. மியூசிக் பிளேயரை மினிமைஸ் செய்து, மற்ற செயல்பாட்டின் போது இசையை ரசிக்கலாம். 3GP, MP4, and DivX வீடியோக்களையும் இந்த போன் கையாள்கிறது. ஆனால், இதன் 2.4 அங்குல திரையில் இவற்றை அவ்வளவாக ரசிக்க இயலவில்லை. இருப்பினும் ரூ.6,000 அளவிலான விலைக் குறியீட்டில், இது பயனுள்ள மொபைல் போன்.

கணினி வடிவமைப்புத் தொழிநுட்பத்தின் உதவியால் சிறுப்பிக்கப் பட்ட குழந்தையின் தலை

நேபாளத்தில் ஒரு கூடைப்பந்தளவுள்ள தலையுடன் பிறந்த 7 வயதுப் பையனது தலை வழமையான தலையைவிடவும் 10 அங்குலம் அதிகமாகக் காணப்பட்டது. அவனால் தனது தலையுடன் வெளியே செல்லமுடியவில்லை. அனைவரும் இவனையே அதிசயமாகப் பார்த்தனர். இப்பையன் hydrocephalus என்ற நோய்த்தாக்கத்திற்குட்பட்டிருந்தான். இவ்வாறான பிள்ளைகளின் தலையில் அளவுக்கதிகமான திரவம் மூளைக்கும் மண்டையோட்டிற்குமிடையில் காணப்படும். வளரும் பிள்ளைகளென்பதால் அதன் அளவு அவர்கள் வளர வளர இன்னும் பெரிதாகிவிடும். 500 பேரில் ஒருவருக்கே இந்நோய்த்தாக்கம் ஏற்படும். இவ்வாறான நோயின் ஆரம்பகட்டமாயின் வைத்தியர்கள் தலையிலுள்ள திரவத்தினை உடலின் ஏனைய பாகங்களுக்குத் திறந்துவிட்டுவிடுவர்.

ஆனால் மருத்துவ வசதி நேபாளத்தில் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்படுகின்றதால் 6 மாதங்களிற்கு முன்பாக அவர்களது பகுதிக்கு தற்காலிக சமூகசேவைக்காக வந்த வைத்தியர்களால் அமெரிக்காவில் இதற்கு வைத்தியம் செய்யலாமெனக் கூறப்பட்டது.

இதனால் அமெரிக்காவின் போல்ரிமோர் குழந்தைகள் வைத்தியசாலைக்கு அவனை அவனது பெற்றோர்கள் அழைத்துவந்தனர். இவனது மண்டையினைச் சிறுப்பிக்க முயற்சித்தபோது அதற்கடியில் மூளைக்குச் செல்லும் குருதிக்குழாய்கள் பெரிதாக இருப்பதை வைத்தியர்கள் கண்டனர். சத்திரசிகிச்சையில் சிறு பிறழ்வு ஏற்பட்டாலும் அது அவனது உயிருக்கு உலையாகிவிடும். இதனால் 50 வீதமே அவன் பிழைக்கக்கூடிய சாத்தியம் இருந்ததை வைத்தியர்கள் கண்டனர்.

இதனால் இச்சிகிச்சைக்காக இவர்கள் கணினி வடிவமைப்பினைப் பயன்படுத்த நினைத்தனர். சிகிச்சைக்கு முன்பாக இவர்கள் பல தடவைகள் தங்களது செயன்முறையைச் செய்து பயிற்சிசெய்தனர். பின்னர் பையனின் மண்டையோட்டினை அவனது நெற்றியிலிருந்து பிடரி வரையான பகுதியை வெளியே எடுத்து அதனைச் சிறுப்பித்து வெட்டினர். பின்னர் மீண்டும் அவனது தலைக்குள் அதனை வைத்தனர். இந்த முறையானது இந்நோய்க்கான மிகவும் புதிய முறைச் சிகிச்சையாகும். பையனுக்கு சிகிச்சை செய்யாவிட்டால் அவன் இறந்துவிடக்கூடிய நிலை முன்பே இருந்திருந்தது. எனினும் கணினி வடிவமைப்புத் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி வெற்றிகரமான 12 மணித்தியாலச் சிகிச்சையினால் அச்சிறுவனின் உயிரைக் காப்பாற்றியிருந்தனர் வைத்தியர்கள்.

இதுபோன்ற கணினி வடிவமைப்பு முறையானது எதிர்காலத்திற்கான சிறந்த முறையென்றார் ஒரு வைத்தியர். சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு 2 கிழமைகளில் அச்சிறுவன் குணமடையத் தொடங்கியிருந்தான். தற்போதும் அவனது மண்டை ஏனையவர்களைவிடப் பெரிதாக இருந்தாலும் அவனைக் கையாள்வது இலகுவாக உள்ளதாக அவனது தாயார் குறிப்பிட்டார். முன்பு அவனைத் தூக்குவதற்கே இருவர் வேண்டுமென்றும் தற்போது தன்னால் மட்டுமே அவனை அழைத்துச் செல்ல முடிகின்ற தென்றும் கூறினார் அவனது தாயார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீருக்கடியில் நீந்தக் கூடிய நவீன ரோபோ கண்டுபிடிப்பு



ரோபோக்களை உருவாக்குவதில் அன்றாடம் புதிய முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் தற்போது நீருக்கு அடியில் நீச்சல் போடக்கூடிய அதி நவீன ரோபோவை உருவாக்கி சாதனைப் படைத்துள்ளனர். மேன்டாபாட் என அழைக்கப்படும் இந்த ரோபோவை பற்றி கருத்துத் தெரிவித்த வேர்ஜினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹிலாரி பார்ட் ஸ்மித் கூறுகையில், ரோபோக்களின் உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ள இந்த ரோபோவானது எதிர்காலத்தில் கடலடி ஆராய்ச்சிகள் பலவற்றிலும் பெரும் உதவியாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

புதிய ஸ்போர்ட்ஸ் பைக் மொடல்களை அறிமுகப்படுத்த பஜாஜ் ஆட்டோ திட்டம்

அதிக சக்தி கொண்ட புதிய ஸ்போர்ட்ஸ் பைக் மாடல்களை விற்பனைக்கு கொண்டு வர பஜாஜ் ஆட்டோ திட்டமிட்டுள்ளது. கடந்த பிப்ரவரியில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட கேடிஎம் டியூக் 200 பைக் விற்பனையில் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. மாதத்திற்கு 1000 பைக்குகள் விற்பனையாகிறது. இதனால், உற்சாகமடைந்துள்ள பஜாஜ் ஆட்டோ தற்போது கேடிஎம் பிராண்டில் மேலும் புதிய மாடல்களை விற்பனைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளது. டியூக் வரிசையில் 125சிசி மற்றும் 375சிசி பைக்குகளை விற்பனைக்கு கொண்டு வரத் அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், இந்த இரு பைக் மாடல்களும் ஏற்கனவே ஐரோப்பிய மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் சில மாற்றங்களை மட்டும் செய்து உடனடியாக விற்பனைக்கு கொண்டு வர முடியும். மேலும், தற்போது கேடிஎம் பிராண்டுக்கென தனி ஷோரூம்களை பஜாஜ் அமைத்து வருகிறது. இதன் மூலம் கேடிஎம் பைக்குகளுக்கு நிறைவான சேர்வீஸ் மற்றும் வாடிக்கையாளர் சேவையை வழங்க முடியும் என்பதால் நிச்சயம் விற்பனையில் நல்ல வளர்ச்சியை பதிவு செய்ய முடியும் என்று பஜாஜ் நம்புகிறது.

பல புதுமைகளுடன் தொடங்கியது லண்டன் ஒலிம்பிக்ஸ்

லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் பல எதிர்பாராத விஷயங்கள், புதுமைகள், ஆடல் பாடல்களுடன் தொடங்கின.

கிழக்கு லண்டனிலுள்ள ஸ்ட்ராட்ஃபோர்ட் ஒலிம்பிக் பூங்காவிலுள்ள முக்கிய விளையாட்டு அரங்கில் தொடக்கவிழாப் போட்டிகள் இடம் பெற்றன.

பிரிட்டனின் அமைதியான கிராமப்புறச் சூழலைக் காட்டும் காட்சிகளுடன் தொடங்கிய தொடக்கவிழா பின்னர் அதன் பல பரிமாணங்களின் வளர்ச்சியைக் காட்டியது.

உலகெங்கும் புகழ்பெற்ற ஜேம்ஸ் பாண்ட் படங்களின் தாக்கமும் தொடக்க விழாவில் இருந்தது. பிரிட்டிஷ் அரசி எலிசபெத் ஜேம்ஸ் பாண்டுடன் ஒரு ஹெலிகாப்டரில் பறந்து விளையாட்டு அரங்குக்கு வருவது போன்ற காட்சி திரையிடப்பட்டது.

அந்த ஒளிகாட்சியில் ஹெலி காப்டரிலிருந்து, பாராசூட் மூலம் அரசியும் ஜேம்ஸ் பாண்டுமாக நடித்த நடிகர்கள் அரங்கினுள் குதிப்பதாக காட்டப்பட்ட காட்சியை அடுத்து, எலிசபெத் அரசியும், இளவரசர் ஃபிலிப்பும் சிறப்பு நுழைவாயில் வழியாக அரங்குக்குள் வரும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன.



ஒலிம்பிக் விளையாட்டில் இன்னும் கிரிக்கெட் இடம் பெறாவிட்டாலும், பிரிட்டனின் பாரம்பரியத்தைக் காட்டும் ஒரு பகுதியாக, கிரிக்கெட் விளையாட்டு இங்கிலாந்தில் உருவாக்கப் பட்டு ஆட ஆரம்பிக்கப்பட்ட கட்டத்தையும் வெளிக்காட்டும் வகையில் ஒரு சிறு பகுதியும் துவக்க விழாவில் இடம்பெற்றது.

பிரபல நகைச்சுவை நடிகரான ரோவான் அட்கின்ஸன் (மிஸ்டர் பீன்), லண்டன் சிம்ஃபனி இசைக்குழுவுடன் பங்குபெறும் ஒரு அம்சமும் தொடக்க விழாவில் இருந்தது.

தொடக்க விழாவின் முதல் பகுதியாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்ற பிறகு, பங்கேற்கும் நாட்டு அணிகள் அகரவரிசைப்படி அரங்கினுள் வந்தன.

ஒலிம்பிக் மரபின்படி, முதல் நாடாக கிரேக்கமும், கடைசியாக போட்டிகளை நடத்தும் பிரிட்டனும் தமது அணிகளுடன் அரங்கில் நுழைந்தனர்.

சம்பிரதாய உரைகளுக்குப் பிறகு, லண்டன் ஒலிம்பிக் போட்டிகளை எலிசபெத் அரசி முறைப்படி தொடங்கிவைத்தார்.

லண்டன் ஒலிம்பிக்ஸ்-முதல் தங்கம் சீனாவுக்கு

லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகளின் முதல் தங்கப் பதக்கத்தை சீனா வென்றுள்ளது.

மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைஃபிள் போட்டியில், 103.9 புள்ளிகள் எடுத்து யி ஸ்லிங் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெறுவார் என்று கருதப்பட்ட போலந்தின் சில்வியா பொகாச்கா 103.2 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இதே போட்டியில் சீனாவின் யூ டான் வெண்கலப் பதக்கம் பெற்றார்.

போட்டியின் தகுதிச் சுற்றில் போலத்தின் வீராங்கனை 400க்கு 399 புள்ளிகள் எடுத்து முன்னிலையில் இருந்தார்.

எனினும் இறுதிப் போட்டியில் மொத்தமாக 502.9 புள்ளிகளைப் பெற்ற யி ஸ்லிங்குக்கு தங்கப் பதக்கமும், 502.2 புள்ளிகளை பெற்ற சில்வியாவுக்கு வெள்ளிப் பதக்கமும் கிடைத்தது.

அதிகாலை ஐந்து மணிக்கு தான் எழுந்ததாகவும், கூடுதல் அழுத்தத்துடன் தான் இருந்ததாகவும் யி ஸ்லிங் போட்டிக்கு பிறகு தெரிவித்தார்.

சீனா மற்றும் தனது பெற்றோருக்கு மிகவும் கடமைப்பட்டுளதாகவும் கூறியுள்ளார் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ள யி ஸ்லிங்.

பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் இதே 10 மீற்றர் ஏர் ரைஃபிள் போட்டியில் தங்கம் வென்றிருந்த செக் குடியரசின் கேத்ரீனா எம்மன்ஸ் நான்காவது இடத்தையே பெற முடிந்தது

இந்தப் பிரிவில் பங்கு பெற்ற பிரிட்டனின் ஜெனிஃபர் மெக்கிண்டாஷ் தகுதிச் சுற்றிலேயே வெளியேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், [illegible] பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 ஒகஸ்ட் 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.